93

தமிழ்நாடு

சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

செயலகப் பதிப்பு

தொகுதி-28 எண்-1

மே-1992

D
V211,31 2
N92.28.1
164916

வெளியீடு 7-1-1993

Issued 7-1-1993

785/93

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, மே 4 1992 - தொகுதி 28 எண். 1

Monday, the 4th May 1992 - Volume 28 No. 1

**சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009**

**Legislative Assembly Secretariat, Fort St. George**

***Madras-600 009***

விலை ரு. 3.00]

[Price Rs. 3-00

## உள்ளடக்கம்

4—5—1992


தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

Personnel of the Government of Tamil Nadu

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி)

பக்கங்கள்

1. இரங்கல் குறிப்பு—

முன்னாள் உறுப்பினர் மறைவு குறித்து. 1

2. ஒழுங்குப் பிரச்சினை—

அவசரமாகப் பேரவையைக் கூட்டியுள்ளது குறித்து 2—4

3. தன்னிலை விளக்கம்—

தாம் தாக்கப்பட்டது குறித்து உறுப்பினர் திரு. வெ. தமிழரசு விளக்கம். 4—6

4. தனித் தீர்மானம்—

சில உரிமைப் பிரச்சினைகள் தொடர்பாக தண்டனை பெற்றவர்கள் தொடுத்துள்ள வழக்கையொட்டி, பேரவைச் செயலாளர் சில தகவல்களோடு நேரில் வரவேண்டுமென உச்சநீதிமன்றம் ஆணையிட்டுள்ளது குறித்து— 6—104

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் 6—27, 41—44, 47—48, 53—55, 67, 70, 72, 73, 77, 78, 80, 92—94, 103—104

திரு. வே. தம்புசாமி 25, 26, 28, 29—

தனித்தீர்மானம்—தொடர்ச்சி


| | பக்கங்கள் |
|---|---|
| திரு. செ. கு. தமிழரசன் | 32—36 |
| திரு. ஜி. பழனிசாமி | 36—40, 42—44 47, 51—54 |
| டாக்டர் தே. குமாரதாஸ் | 52 |
| திரு. எஸ். வி. சண்முகம் | 58—62 |
| திரு. நா. சா. பழனிசாமி | 62—65 |
| *திரு. எஸ். திருநாவுக்கரசு | 65—71 |
| திரு. எஸ். ஆண்டித் தேவர் | 73—74 |
| திரு. ச. இராமச்சந்திரன் | 74—77 79, 80, 89, 90, 102 |
| திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் | 80—92 |
| *மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா | 29, 37, 38, 48—50 69, 72, 94, |

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். 104


164946

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

ஆளுநர்—திரு. பீஷ்ம நாராயண் சிங்.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. முதலமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், இந்திய காவல் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், இலஞ்ச ஒழிப்பு, தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத் துறை, சர்க்கரைப் பாகு கழிவு, சிறுபான்மையினர் நலம், இந்து சமய அறநிலையத் துறை, செய்தி மற்றும் விளம்பரம், திரைப் படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சுரங்கம் மற்றும் கனிம வளம், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, மின்னணுவியல் மற்றும் அச்சுக் காகிதக் கட்டுப்பாடு.

2. நிதி அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

நிதி, திட்டம், தேர்தல்கள், சட்டமன்றம்.

3. சட்ட அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :

சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்- அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றிய சட்டம் இயற்றுதல் உட்பட). கம்பெனிகள் பதிவு.

4. வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள், ஆணைப் பதிவுத் துறை, முத்திரைச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம் மற்றும் கிராமதானம், பயண இசைவுச் சீட்டு, வணிக வரிகள்.

5. பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் :

பிற்பட்டோர் நலம், மிகப் பிற்பட்டோர் நலம், மற்றும் சீர் மரபினர், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர், முன்னாள் இராணுவத்தினர் நலம்.

6. கல்வி அமைச்சர்

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் :

கல்வி, தொழில் நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் நலம், தொல் பொருளியல்.

7. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி, குடும்ப நலம், சுற்றுச் சூழல் மாசு கட்டுப்படுத்தல்.

8. போக்குவரத்துத் துறை அமைச்சர்

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள், வனங்கள் **மற்றும் சின்கோனா.**



9. கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர் :

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் :

கைத்தறி மற்றும் நெசவாலைசள்.

10. பொதுப் பணித்துறை அமைச்சர் :

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:

பொதுப் பணிகள், பாசனம் (சிறு பாசனம் உட்பட). நெடுஞ் சாலைகள், மின்சாரம், மரபு சாரா எரிசக்தி வளர்ச்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு.

11. உள்ளாட்சித் துறை அமைச்சர் :

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு :

நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை, நகர்ப்புற மற்றும் கிராமப்புறக் குடிநீர் வழங்கல்.

12. உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் :

மாண்புமிகு திரு. ஜி. விஸ்வநாதன்:

உணவு, கூட்டுறவு, நுகர்பொருள் வழங்கல், விலைவாசிக் கட்டுப்பாடு, புள்ளிவிவரங்கள்.

13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி :

தொழிலாளர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர்ப்புற மற்றும் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டங்கள், மக்கள் தொகைக் கணக்கு.

14. வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. பா. கிருஷ்ணன்:

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, சர்க்கரை வரி **மற்றும் சர்க்கரை வளர்ச்சி.**

15. வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர். .. மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி :

வீட்டுவசதி, குடிசை மாற்றுத் திட்டம், ஊரக வீட்டுவசதி வளர்ச்சி, இடவசதிக் கட்டுப்பாடு, நகர அமைப்பு, நகர்ப்புற வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

16. சமூக நலத்துறை அமைச்சர். மாண்புமிகு திருமதி ஆர். இந்திரகுமாரி :

சமூக நலம் மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உட்பட), சத்துணவு, பிச்சைக்காரர் விடுதிகள், அனாதை விடுதிகள் சீர்திருத்த நிர்வாகம்.

17. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர். மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் :

ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர், கால்நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம்.

18. மீனளத் துறை அமைச்சர், மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் :

மீனளம்.

19. ஊரகத் தொழில் துறை அமைச்சர், மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்.

சிறு தொழில்கள், ஊரகத் தொழில்கள் (குடிசைத் தொழில்கள் உட்பட), கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம், வக்ஃப்.



# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

GOVERNOR OF TAMIL NADU : THIRU BHISHMA NARAIN SINGH,

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Chief Minister .. **The Hon. Dr. J. JAYALALITHA :**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service and other All India Services, District Revenue Officers, Police, Prevention of Corrup tion, Industries, Prohibition and Excise, Molasses, Minorities Hindu Religious and Charitable Endowments, Information and Publicity, Film Technology, Cinematography Act, Tourism and Tourism Development Corporation, Mines and Minerals, Tamil Development and Tamil Culture, Electronics and Newsprint Control,

2. Minister for Finance .. **The Hon Dr. V. R. NEDUNCHEZHIAN:**

Finance, Planning, Elections and Legislature.

3. Minister for Law .. **The Hon. Thiru K. A. KRISHNASAMY :**

Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Debt Relief including Legislation on Moneylending, Chits and Registraation of Companies.

4. Minister for Revenue .. **The Hon. Thiru S. D. SOMASUNDARAM :**

Revenue, District Revenue Estabiisnment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery and Printing, Government Press, Bhoodan and Gramdan, Passports and Commercial Taxes.

5. Minister for Backward Classes. — **The Hon. Thiru ERAAMA VEERAPPAN :**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities Indian Overseas, Refugee and Evacuees and Welfare of Ex-Servicemen.

6. Minister for Education. — **The Hon. Thiru C. ARANGANAYAGAM :**

Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare and Archaeology.

7. Minister for Health .. — **The Hon. Thiru S. MUTHUSAMY :**

Health, Medical Education, Family Welfare and Environmental, Pollution Control.

8. Minister for Transport .. — **The Hon. Thiru K. A. SENGOTTAYAN :**

Transport, Nationalised Transport, Motor Vehicles Acts Ports, Forests and Cinchona.

9. Minister for Handlooms and Textiles. — **The Hon. Thiru E. MADHUSUDHANAN :**

Handlooms and Textiles.

10. Minister for Public Works — **The Hon. Thiru S. KANNAPPAN :**

Public Works, Irrigation including Minor Irrigation, Highways Electricity, Non-Conventional Energy Development and Iron and Steel Control.

11. Minister for Local Administration. — **The Hon. Thiru ALAGU THIRUNAVUKKARASU :**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness and Urban and Rural Water Supply.



2. Minister for food and Co-operation. — **The Hon. Thiru G. VISWANATHAN :**

Food, Co-operation, Civil Supplies, Price Conrtol and Statistics.

3. Minister for Labour .. — **The Hon Thiru S. RAGHUPATHY :**

Labour, Employment and Training, Urban and Rural Employment Programmes and Census.

4. Minister for Agriculture — **The Hon. Thiru KU. PA. KRISHNAN :**

Agriculture, Agricultural Engineering, Agro Service, Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugercane Development.

5. Minister for Housing and Urban Development. — **The Hon. Thiru T. M. SELVAGANAPATHI :**

Housing, Slum Clearance, Rural Housing Development, Accommodation Control, Town Planning, Urban Development and Madras Metropolitian Development Authority.

6. Minister for Social Welfare. — **The Hon. Thirumathi R. INDIRA KUMARI :**

Social Welfare including Women's and Children s Welfare, Nutritiou Noon Meals, Begger Homes, Orphanages and Correctional Administration.

7. Minister for Adi-Dravidar Welfare. — **The Hon. Thiru M. ANANDAN :**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour, Animal Husbandry, Milk and Diary Development,

42 53-180—B

19. Minister for Fisheries .. **The Hon. Thiru D. JAYAKUMAR**

Fisheries

19. Minister for Rural Industries. **The Hon. Thiru S. NAGOORMEERANc**

Small Scale Industries, Rural Industries, including Cottage Industries, Khadi and Village Industries Board and Wakf.



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. முத்தையா.

### பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. ம. சின்னசாமி

திரு. வ. சத்தியமூர்த்தி

திரு. ஆர். சிங்காரம்

திரு. வி. தம்புசாமி

திரு. நா. சா. பழனிசாமி

### செயலாளர்

திரு. செ. சு. ஜானகிராமன்.

## பேரவையின் முக்கிய அலுவலர்கள் (அகர வரிசைப்படி)—

| | |
|---|---|
| இராமச்சந்திரன், திரு. ரெ. கு., பி.ஏ., பி.எல். | இணைச் செயலாளர். |
| சுந்தரராஜன், திரு., கா. செ., பி.ஏ. பி.ஜி.எல். | இணைச் செயலாளர். |
| இராசமாணிக்கம், திரு. பெ., பி.ஏ. பி.எல். | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| சண்முகநாதன், திரு. கோ., பி.காம். | துணைச் செயலாளர் (பதிப்பாளர்). |
| சந்திரசேகர், திரு. ஆர்., பி.ஏ., .. | துணைச் செயலாளர் |
| சாலமென் ஜெயபால், திரு. டி., பி.எஸ்சி., பி.எல்., | துணைச் செயலாளர் |
| ஜேக்கப் லூர்தர், திரு. தா., பி.ஏ., பி.எல்., டி.பி. மற்றும் பி.ஏ. | துணைச் செயலாளர். |
| கிருஷ்ணமூர்த்தி., திரு. சு., பி.எஸ்ஸி. | குழு அலுவலர். |
| வெங்கட்டராமன், திரு. ப. சீ., பி.காம். | குழு அலுவலர். |
| அப்துல் சத்தார், திரு. ஜெ., பி.ஏ., பி.எல்., | சார்புச் செயலாளர். |
| இராசாராமன், திரு. வி., பி.எஸ்ஸி., பி. எல். | சார்புச் செயலாளர். |
| இராசசேகரன், திரு. சே. சு., எம்.ஏ. பி.எல்., | சார்புச் செயலாளர். |
| உமா, திருமதி, வி. நா., பி.ஏ. — | சார்புச் செயலாளர். |
| கண்ணன், திரு. கே., பி.எஸ்ஸ், பி.எல். | சார்புச் செயலாளர். |
| சாயிநாதன், திரு. கி., பி.ஏ., பி.ஜி. எல். | சார்புச் செயலாளர். |
| பவானி சுப்பையா, திருமதி, பி.ஏ., பி. ஜி.எல். | சார்புச் செயலாளர். |

| | |
|---|---|
| பானுமதி அனந்தராஜன், திருமதி பி.எஸ்ஸி., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர். |
| முடிகோபதி, திரு. நா., எம். ஏ. .. | சார்புச் செயலாளர். |
| முனீர் உன்னிசா, திருமதி, பி.எஸ்ஸ,. பி.ஜி.எல். | சார்புச் செயலாளர். |
| ராஜன், திரு. கே. பி., டி.ஆர்.எஸ். | சார்புச் செயலாளர். |
| ராஜேந்திரன், திரு. பி. சி., பி.ஏ .. | சார்புச் செயலாளர். |
| கணேசன், திரு. சா., பி.ஏ., பி.ஜி. எல். | சார்புச் செயலாளர். |
| வெங்கட்டராமன், திரு. கோ. .. | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர். |
| சுந்தரராஜுலு, திரு. துரை., எம்.ஏ. | தலைமை நிருபர். |
| துரைபாண்டியன், திரு. செ.ஏ., பி.ஏ. | தலைமை நிருபர். |
| ஜெயதேவ், திரு. பி. சி. .. .. | தலைமை நிருபர். |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

### உறுப்பினர்கள் பட்டியல் அகர (வரிசைப்படி),.

### பெயர்களும் தொகுதிகளும்.

| | |
|---|---|
| 1. அண்ணாமலை, திரு. எஸ். .. | ஆலந்தூர். |
| 2. அபரஞ்சி, திரு. பெ. .. | அரூர் (செ. வ.) |
| 3. அபுல்ஹசன், திரு. எம்.எம்.எஸ். | மயிலாடுதுறை. |
| 4 அமர்நாத், திரு. ஓ.எஸ். .. | மதுரை கிழக்கு. |
| 5. அம்மமுத்து பிள்ளை, டாக்டர் மு. | கன்னியாகுமரி. |
| 6. அரங்கநாதன், திரு. ஆர். டி. .. | விருத்தாசலம். |
| 7. அரங்கநாயகம், டாக்டர் செ. | தொண்டாமுத்தூர். |
| 8. அர்ச்சுனன், திரு. க. .. | வீரபாண்டி. |
| 9. அழகிரி, திரு. ச. .. | சிதம்பரம். |
| 10. அழகு திருநாவுக்கரசு, திரு. .. | ஒரத்தநாடு. |
| 11. அறிவழகன், திரு. ஆ. | கிருஷ்ணராயபுரம் (செ. வ.) |
| 12. அன்பழகன், திரு. எஸ். .. | நாமக்கல் (செ வ.) |
| 13. ஆசைமணி, திரு. எஸ். .. | குத்தாலம். |
| 14. ஆண்டி அம்பலம், திரு. மெ. ... | நத்தம். |
| 15. ஆண்டித் தேவர், திரு. எஸ். | திருப்பரங்குன்றம். |
| 16. ஆரோக்கியசாமி, திரு. டாக்டர் ச. | திருச்சிராப்பள்ளி-1. |
| 17. ஆறுமுகம், திரு. செ. .. | வானூர் (செ.வ.) |
| 18. ஆனந்தன், திரு. எம். .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 19. இந்திரகுமாரி, திருமதி இரா. .. | நாட்ராம்பள்ளி. |

20. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. — மேலூர்.

21. இராசாராமன், திரு. சோ. — பாபநாசம்.

22. இராசாராம், திரு. க். .. பனமரத்துப்பட்டி.

23. இராதாகிருஷ்ணன், திரு. த். க். — திருமங்கலம்.

24. இராமகிருஷ்ணன், டாக்டர் இ. — அச்சரபாக்கம் (செ. வ.).

25. இராமசாமி அம்பலம், திரு. கே. ஆர். — திருவாடனை.

26. இராமசுவாமி, திரு. சி. .. சங்கராபுரம்.

27. இராமச்சந்திரன், திரு. மா. சா. மா. — இளையாங்குடி.

28. இராமச்சந்திரன், திரு. ஒ. ஆர். — கம்பம்.

29. இராமச்சந்திரன், திரு. கே.கே. எஸ்.எஸ்.ஆர். — சாத்தூர்.

30. இராமச்சந்திரன், திரு. ச. .. பண்ருட்டி.

31. இராமதாஸ், திரு. எஸ். எஸ். ஆர். — செஞ்சி.

32. இராமநாதன், திரு. இராம. .. கும்பகோணம்.

33. இராஜமன்னார், திரு. கு. சே. — ஒட்டப்பிடாரம் (செ. வ.).

34. இராஜன்பாபு என்கிற தணிகை பாபு., திரு. கி. — திருத்தணி.

35. இராஜேந்திரன், திரு. பி. வி. .. வேதாரண்யம்.

36. இராம. வீரப்பன், திரு. .. காங்கேயம்.

37. இலதா பிரியகுமார், திருமதி .. அரக்கோணம் (செ.வ)

38. இளம்வழுதி, திரு. .. எழும்பூர்.

39. ஈஸ்வரமூர்த்தி, திரு. பி. .. தாராபுரம் (செ.வ.).

40. ஈஸ்வரன், திரு. ஆர். .. வாசுதேவநல்லூர் (செ. வ.).



41. ஏகாம்பர ரெட்டி, திரு. எ. .. பள்ளிப்பட்டு.

42. கண்ணப்பன், திரு. எஸ். .. திருப்பத்தூர்.

43. கண்ணன், திரு. வெ. .. திருவண்ணாமலை.

44. கந்தசாமி, திரு. கே. .. தலைவாசல் (செ.வ.)

45. கருப்புசாமி, டாக்டர் எம். .. குன்னூர் (செ.வ.).

46. கலியபெருமாள், திரு. ப. .. திருவையாறு.

47. கலைச்செல்வி, திருமதி கே. எம். — காட்பாடி.

48. கவிநிலவு தர்மராஜ், பேராசிரியர் (திருமதி). — மொடக்குறிச்சி.

49. கற்பகம் இளங்கோ, பேராசிரியர் (திருமதி). — காரைக்குடி.

50. கனகவல்லி, திருமதி என். சி. .. விளாத்திகுளம்.

51. காஞ்சி பன்னீர்செல்வம், திரு. .. உத்திரமேரூர்.

52. காந்திராஜன், திரு. ச. .. வேடசந்தூர்.

53. காளன், திரு. கோ. .. வில்லிவாக்கம்.

54. காளிராஜன், டாக்டர் மு. .. சமயநல்லூர் (செ.வ.).

55. கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ, .. ஆயிரம் விளக்கு.

56. கிருஷ்ணன், திரு. எஸ். எம். .. தாம்பரம்

57. கிருஷ்ணன், திரு. கு. ப. .. ஸ்ரீரங்கம்.

58. கிருஷ்ணன், திரு. சி. .. .. ஓமலூர்.

59. குப்பன், திரு. க. .. திருவொற்றியூர்.

60. குமரி அனந்தன், திரு. — சாத்தான்குளம்.

61. குமாரதாஸ், டாக்டர் தே. — கிள்ளியூர்.

62. குழந்தைவேலு, திரு. சி. .. குளத்தூர் (செ.வ.கி.)

63. கோடிமாரி, திரு. ஆர். .. நாகப்பட்டினம்.

64. கோபால கிருஷ்ணன், திரு. வே. — சங்கரநயினார்கோவில் (செ.வ.).

65. கோபால், டாக்டர் திரு. க .. நன்னிலம் (செ.வ.).

66. கோவிந்தராசு, திரு. மா. .. ரிஷிவந்தியம்.

67. சக்குபாய், திருமதி ரா. .. கும்மிடிப்பூண்டி.

68. சக்குபாய் தேவராஜ், திருமதி டி. திருவள்ளூர்.

69. சஞ்சய் ராமசாமி, திரு. .. விருதுநகர்.

70. சண்முகநாதன், திரு. எஸ். ஆலங்குடி.

71. சண்முகம், திரு. எஸ். வி. .. மதுரை மேற்கு.

72. சத்தியமூர்த்தி, திரு. வ. .. கடலாடி

73. சந்திரசேகர், திரு. வி.பி. .. பொள்ளாச்சி.

74. சம்பத், திரு. எ. .. வாணியம்பாடி.

75. சரஸ்வதி, திருமதி அ. தி. .. சத்தியமங்கலம்.

76 சரஸ்வதி, திருமதி ப. .. கபிலர்மலை.

77. சரோஜா, டாக்டர் (திருமதி) வெ. சங்கரி (செ.வ.)

78. சாத்தையா, திரு. தி. .. இராஜபாளையம் (செ.வ.).

79. சாவித்திரி அம்மாள், (திருமதி) ஆர், முகையூர்.

80. சிங்காரம், திரு. ஆர். .. பேராவூரணி.

81. சிங்காரம், திரு. கே. .. மொரப்பூர்.

82. சிங்கை கோவிந்தராசு, திரு. .. சிங்காநல்லூர்.

83. சியாமளா, திருமதி ரெ. .. கோவில்பட்டி.

84. சிவசுப்பிரமணியன், திரு. கு. குறிஞ்சிப்பாடி.

85. சிவபதி, திரு. என். ஆர். .. தொட்டியம்.



86. சின்னசாமி, திரு. ம. .. கரூர்.

87. சின்னசாமி, திரு. கா. .. சேந்தமங்கலம் (ம.ப

88. சின்னசாமி, திரு. வி. கே. .. பவானிசாகர்.

89. சின்னப்பன், திரு. கே. கே. .. ஜெயங்கொண்டம்.

90. சீனியம்மாள், டாக்டர் (திருமதி) மு. அவினாசி (செ.வ.).

91. சீனிவாசன், திரு. ஆ. கு. .. பெரணமல்லூர்.

92. சீனிவாசன், திரு. கு. .. மன்னார்குடி.

93. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி.

94. சுந்தரசாமி, திரு. எம். .. கலசபாக்கம்.

95. சுந்தரதாஸ், திரு. மா. .. விளவன்கோடு.

96. சுந்தரம், திரு. எம். கே. .. தண்டராம்பட்டு.

97. சுந்தரராஜ், டாக்டர் ச. .. பரமக்குடி (செ.வ.)

98. சுந்தரவேல், திரு. ஏ. கே.சி. .. திருப்பத்தூர்.

99. சுந்தராம்பாள், திருமதி செ. .. மேட்டூர்.

100. சுப்பிரமணியம், திரு. வ. மு. மானாமதுரை (செ. வ.).

101. சுப்பிரமணியன், திரு. வி. என். பெருந்துறை.

102. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ. வ.).

103. சுப்புரத்தினம், திரு. ஆ. .. பழனி (செ.வ.)

104. சுலோசனா, செல்வி எல். — மேட்டுப்பாளையம்

105. சுவாமிநாதன், திரு. சி. .. புதுக்கோட்டை

106. செங்கோட்டையன், திரு. கே. ஏ. கோபிசெட்டி பாளையம்.

107. செல்லக்குமார், டாக்டர் அ. அண்ணாமலை நகர்.

108. செல்லசாமி, திரு. ஏ. டி. .. ஒட்டன்சத்திரம்.

109. செல்லதுரை, திரு. ஆ. .. திருச்செந்தூர்.

110. செல்வகணபதி, திரு. டி. எம். திருச்செங்கோடு.

111. செல்வராசன், திரு. அ. துறைமுகம்.

112. செல்வராஜ், திரு. கே. .. கோயம்புத்தூர் மேற்கு.

113. செழியன், திரு. நா. .. பெரம்பலூர் (செ.வ.)

114. சேகர், டாக்டர், எம். பி. .. பெரம்பூர் (செ.வ.).

115. சேகர், திரு. எம். ஜி. .. பாலக்கோடு.

116. சொக்கலிங்கம், திரு. பி. .. மதுராந்தகம்.

117. சோமசுந்தரம், திரு. எஸ். டி. தஞ்சாவூர்.

118. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்.

119. டேனியல்ராஜ், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்.

120. தங்கமுத்து, திரு. கு. .. திருவோணம்.

121. தங்கராஜ், திரு. ஆர். .. ஆண்டிமடம்

122. தங்கவேல், திரு. எம். .. முசிறி.

123. தண்டாயுதபாணி, திரு. வி. குடியாத்தம்

124. தமிழரசன், திரு. செ. கு. .. வந்தவாசி (செ.வ.).

125. தமிழரசு, திரு. வெ. .. ஆத்தூர்.

126. தம்புசாமி, திரு. வே. .. திருவாரூர் (செ.வ.).

127. தர்மலிங்கம், திரு. கி. .. அணைக்கட்டு.

128. தர்மலிங்கம், திரு. பே. .. பாளையங்கோட்டை,

129. தவசி, திரு. கே. .. ஆண்டிப்பட்டி.

130. தனபால், திரு. மு. .. திருப்போரூர் (செ.வ.)



131. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்.

132. தாமோதரன், திரு. சி. .. நெல்லிக்குப்பம்.

133. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி.

134. துரை, திரு. எஸ். எம். .. ஆத்தூர்.

135. துரை முருகன், திரு. கு. சு. .. பல்லடம்.

136. துரை ராமசாமி, திரு. .. வெள்ளக்கோவில்.

137. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி.

138. தென்னவன், திரு. மு. .. இராமநாதபுரம்.

139. தேவராஜ், திரு. அ. .. செய்யாறு.

140. தேனி பன்னீர்செல்வம், திரு .. போடிநாய்க்கனூர்

141. நடேசன், திரு. இரா. .. திருவட்டாறு

142. நடேசன், திரு. மு. .. சேலம்-2.

143. நடேசன் பால்ராஜ், திரு. வெ. நாங்குநேரி.

144. நாகூர் மீரான், திரு. எஸ். .. கடையநல்லூர்.

145. நிர்மலா, செல்வி, பி. .. திண்டுக்கல்.

146. நெடுஞ்செழியன், டாக்டர் இரா. தேனி.

147. பஞ்சவர்ணம், திருமதி கே. .. வலங்கைமான் (செ. வ.).

148. பட்டாபிராமன், திரு. கா. ப. காஞ்சிபுரம்.

149. பரந்தாமன், டாக்டர் ஜெ. பேரணாம்பட்டு (செ. வ.).

150. பரமசிவம், திரு. ஆர். பி. .. சின்ன சேலம்.

151. பரமசிவன், திரு. ஏ. எம். .. சோழவந்தான்.

152. பலராமன், திரு. உ. .. பூங்கா நகர்.

| | | |
|---|---|---|
| 153. | பழனிசாமி, திரு. இரா. ... | தாரமங்கலம். |
| 154. | பழனிசாமி, திரு. க. ... | எடப்பாடி. |
| 155. | பழனிசாமி, திரு. நா. சா. ... | கிணத்துக்கடவு. |
| 156. | பழனிசாமி, திரு. வெ. ... | திருப்பூர். |
| 157. | பழனிசாமி, திரு. ஜி. ... | திருத்துறைப்பூண்டி (செ.வ.). |
| 158. | பழனியம்மாள், திருமதி க. | ராசிபுரம். |
| 159. | பன்னீர்செல்வம், திரு. என் ... | திருவிடைமருதூர். |
| 160. | பன்னீர்செல்வம், திரு. சா. ... | திண்டிவனம். |
| 161. | பன்னீர்செல்வம், திரு. ஜெ. | திருநாவலூர். |
| 162. | பாண்டியம்மாள், திருமதி இரா. | உசிலம்பட்டி. |
| 163. | பாப்பா சுந்தரம், திரு. அ. .. | குளித்தலை. |
| 164. | பாலகங்காதரன், திரு. ஜெ. ... | சிவகாசி. |
| 165. | பாலகிருஷ்ணன், திரு. சோ. | முதுகுளத்தூர். |
| 166. | பாலசுப்ரமணியன், திரு. எஸ். ஆர். | பொங்கலூர். |
| 167. | பாலசுப்பிரமணியன், திரு. கி. | பட்டுக்கோட்டை. |
| 168. | பாலன், திரு. எம். கே. ... | சைதாப்பேட்டை. |
| 169. | பாலையா, திரு. ஆ. ... | குளச்சல். |
| 170. | பியாட்ரிக்ஸ் டி. சோசா., டாக்டர் (திருமதி), | நியமனம். |
| 171. | பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். | தென்காசி. |
| 172. | புதுநயினார் ஆதித்தன், திரு. இரா. | சேரன்மகாதேவி. |
| 173. | புரட்சிமணி, திரு. ச. ... | மங்களூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 174. | புருஷோத்தமன், டாக்டர் வெ. | பெண்ணாகரம். |
| 175. | பூராசாமி, திரு. எம். .. | பூம்புகார். |
| 176. | பெரியசாமி, திரு. வே. ... | அந்தியூர் (செ.வ.) |
| 177. | பெரியவீரன், திரு. எம், ... | பெரியகுளம். |
| 178. | பெருமாள், திரு. செ. ... | ஏற்காடு (ம.ப.). |
| 179. | பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.). |
| 180. | பொன்னுசாமி திரு. க. பேராசிரியர், | மருங்காபுரி. |
| 181. | பொன்னுசாமி, திரு. பெ. .. | தருமபுரி. |
| 182. | பொன்னுவேலு, திரு. ஏ. தா. | வரகூர் (செ.வ.). |
| 183. | போளூர் வரதன் திரு. .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.). |
| 184. | மணிமேகலை, டாக்டர் (திருமதி) சு. | அரியலூர். |
| 185. | மணிமேகலை, திருமதி வி. ஜி. | அருப்புக்கோட்டை. |
| 186. | மணிவாசகம், திரு. கே. பி. .. | உடுமலைப்பேட்டை. |
| 187. | மதுசூதனன், திரு. இ. .. | டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர். |
| 188. | மரியமுல் ஆசியா, திருமதி கே. | அரவக்குறிச்சி. |
| 189. | மல்லிகா, செல்வி, கோ. .. | புவனகிரி. |
| 190. | மனோகரன், திரு. கே. ஏர .. | ஓசூர் |
| 191. | மாணிக்கம், திரு. சி. .. | ஈரோடு. |
| 192. | மாலா, டாக்டர் (செல்வி), ஜி ஆர் | திருச்சிராப்பள்ளி 2. |
| 193. | முஹம்மது ஆசிப், திரு. .. | திருவல்லிக்கேணி |
| 194. | முத்துசாமி, திரு. சு. .. | பவானி |

| | | |
|---|---|---|
| 195 | முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி. |
| 196. | முருகானந்தம், திரு. கே. ஆர். | சிவகங்கை. |
| 197. | முருகையா பாண்டியன், திரு. ஆர். | அம்பாசமுத்திரம். |
| 198. | முனிரத்தினம், திரு. ஏ. எம். .. | சோளிங்கர். |
| 199. | முனிவெங்கடப்பன், திரு. கே. | கிருஷ்ணகிரி. |
| 200. | முனுசாமி, திரு. கா. பூ. .. | காவேரிப்பட்டிணம். |
| 201. | மூர்த்தி, திரு. து. .. | சீர்காழி (செ.வ.). |
| 202. | மோசஸ், டாக்டர் எம். .. | நாகர்கோவில். |
| 203. | ரகுபதி, திரு. செ. .. | திருமயம். |
| 204. | ரங்கநாதன், திரு. ப. .. | புரசைவாக்கம். |
| 205. | ரங்கராஜன், திரு. டி. எம். .. | மயிலாப்பூர். |
| 206. | ரத்தினவேல், திரு. த. .. | திருவெறும்பூர். |
| 207. | ரமணி நல்லதம்பி, திருமதி .. | ராதாபுரம். |
| 208. | ரமேஷ், திரு. வி. பி. ஆர். .. | தூத்துக்குடி. |
| 209. | ரவிக்குமார், திரு. ஏ. .. | பொன்னேரி (செ.வ.). |
| 210. | ரவிச்சந்திரன், திரு. வி. .. | உப்பிலியாபுரம் (ம.ப.). |
| 211. | ராமசுப்பு, திரு. எஸ். எஸ். .. | ஆலங்குளம். |
| 212. | ராஜு, திரு. எச். எம். .. | உதகமண்டலம். |
| 213. | ராஜு, திரு. கே. ஆர். .. | கூடலூர். |
| 214. | ராஜு, திரு. கே. பி. .. | பேரூர். |
| 215. | ராஜேந்திரன், திரு. என். ஆர். | காட்டுமன்னார் கோவில் (செ.வ.). |
| 216. | லட்சுமணன், திரு. வி. கே. .. | கோயம்புத்தூர் கிழக்கு. |



| | | |
|---|---|---|
| 217. | லாரன்ஸ், திரு. கு .. | பத்மநாபபுரம். |
| 218. | லோகாம்பாள், திருமதி ஜெ. .. | லால்குடி. |
| 219. | வரதராஜன், திரு. செ. து. .. | செங்கல்பட்டு. |
| 220. | விசுவநாதன், திரு. ஜி. .. | ஆற்காடு. |
| 221. | வீரபாண்டியன், டாக்டர் பெ. | செங்கம் (செ.வ.). |
| 222. | வெங்கடராம ரெட்டி, திரு. மு. | தளி. |
| 223. | வெங்கடேசன், திரு. பி. ஆர். எஸ். | கடலூர். |
| 224. | வேடியப்பன், திரு. தா. .. | போளூர் |
| 225. | வேணுகோபால், திரு. என். ஜி. | ராணிப்பேட்டை. |
| 226. | வேலையா, திரு. டி. .. | திருநெல்வேலி. |
| 227. | ஜனார்தனன், திரு. தே. .. | விழுப்புரம். |
| 228. | ஜானகிராமன், திரு. கோ. .. | மேல்மலையனூர். |
| 229. | ஜீனத் சர்புதீன், திருமதி .. | சேப்பாக்கம். |
| 230. | ஜெயக்குமார், திரு. எஸ். .. | தியாகராயநகர். |
| 231. | ஜெயகுமார், திரு. டி. .. | ராயபுரம். |
| 232. | ஜெயராமன், திரு. எஸ். ஆர். | சேலம் 1. |
| 233. | ஜெயலலிதா, செல்வி ஜெ. .. | பர்கூர். |
| 234. | ஜெய்சன் ஜேக்கப், டாக்டர். | ஆரணி. |
| 235. | ஸ்ரீதரன், டாக்டர் அ. .. | வால்பாறை (செ.வ.) |

**பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்.**

**சுப்பிரமணியன், திரு. கே. — தலைமை வழக்கறிஞர்.**

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### சித்திரை 22, ஆங்கீரச—திருவள்ளுவர் ஆண்டு—2023

### 1992 மே 4, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

“ இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர். ”

துன்பம் வருகிறபோது அதன்பொருட்டு மனம் கலங்கி அஞ்சிடாதவர் அத்துன்பத்திற்கே துன்பத்தைக் கொடுக்கும் ஆற்றல் உடையவர் ஆவார். (மேசையைத் தட்டும் ஒலி)

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 1. இரங்கல் குறிப்பு.

#### முன்னாள் உறுப்பினர் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. கே. எம். சுப்பிர மணியன் அவர்கள் 2–5–1992 ஆம் நாளன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. கே. எம். சுப்பிரமணியன் அவர்கள் 1980 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரை மதுரை மாவட்டம், போடி நாயக்கனூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, மிகச் சீரிய முறையில் பணியாற்றியுள்ளார். சிறந்த பொதுநலத் தொண்டரான அவருடைய மறைவு உண்மையிலேயே பேரிழப்பு ஆகும். அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன். இயற்கை எய்தியவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**(உறுப்பினர்கள் இரண்டு மணித்துளிகள் மௌனமாக நின்றனர்)**

## 2. ஒழுங்குப் பிரச்சினை.

### அவசரமாகப் பேரவையைக் கூட்டியுள்ளது குறித்து.

திரு. ச. இராமச்சந்திரன் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் அவை நடவடிக்கை ஆரம்பிக்கவே இல்லை. (குறுக்கீடு) இப்போது point of order என்றால் என்னவென்று சொல்வது.

திரு. ச. இராமச்சந்திரன் : On a point of order. விதி 37-க்கு முரணாக இந்த அவைக்கூட்டம் இன்று கூட்டப்பட்டிருக்கிறது. நேற்றைய தினம் எங்களுக்கு அவசர அவசரமாகத் தெரிவித்து, இன்றைய தினம் இந்தக் கூட்டம் நடத்தி இருப்பது—சாதாரணமாக இன்றைக்குத் தினக்கூலித் தொழிலாளர்களைக் கூட அப்படி வரச் சொல்ல முடியாது. என்ன அஜெண்டா, எதுவுமே தெரியாமல் திடீரென்று நேற்று இரவோடு இரவாக இங்கு வரவேண்டுமென்று சொல்லி அவசரமாக இப்படியொரு கூட்டத்தை நடத்த வேண்டிய அவசியம் என்ன? இந்தக் கூட்டம் விதி 37-க்கு முரணாக....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி 37 வேறு. நீங்கள் விதி 26-ஐப் பாருங்கள். தங்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிற அழைப்பிலே விதி 26(1)-ன் கீழ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (குறுக்கீடு) அந்த விதியில் என்ன முரண்பாடு இருக்கிறது என்று சொல்ல வேண்டும். விதி 26(1)-ன் கீழ் அவை கூட்டப்பட்டிருக்கிறது. விதி 26(1)-ல் என்ன முரண்பாடு இருக்கிறது என்றுதான் நீங்கள் சொல்ல வேண்டும்.

திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, விதி 26-ல் அவையைக் கூட்டுவதற்கு உரிமை இருக்கிறது. விதி 37-ல்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்குரிய தகவலை நீங்கள் அதிலே பாருங்கள்.

Thiru S. **Ramachandran**: It is said, "two days prior to the meeting".

முற்பகல் 10.05

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசமைப்பின் நூலின்



கீழ், in Chapter II, under rule 3(a), it is said, " Provided that when a meeting is called at short notice or emergently, summons may not be issued to each Member separately but an announcement of the date and place of the meeting shall be published in the Gazette and in the press and Members shall be informed by telegram or any other method of communication and by broadcast." ஆகவே, 'Members shall be informed by telegram or any other method of communication and by broadcast' என்று இந்த விதிகளில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரமாகக் கூடுகிறபோது, பேரவைத் தலைவருக்கு இருக்கிற அந்த அதிகாரத்தின் கீழ்தான் கூட்டப்பட்டிருக்கிறது. பேரவைக் கூட்டம் ஆளுநரால் முடித்து வைக்கப்படவில்லை.

திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, விதி 37-ல் மெத்தட் ஆஃப்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தங்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும். (குறுக்கீடு) அது உங்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) மெத்தட் ஆஃப் சென்டிங் நோட்டீஸ் என்பது மாண்புமிகு முதலமைச்சர் சொன்னது (குறுக்கீடு) தங்களுக்கு அறிவிக்கப்படாமலே ஒன்றும் இல்லை (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள் (குறுக்கீடு) நீங்கள் ஒரு நல்ல உறுப்பினர். நீங்கள் உறுப்பினர்களைப் பார்த்து இப்படிப் பேசக்கூடாது.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரணக் கூட்டங்களுக்கு 2 நாட்களுக்கு முன்னால் அறிவிக்கப்பட வேண்டும் என்று இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே படித்துக் காட்டியதைப் போன்று அவசரக் கூட்டம் வந்தால் தந்தியின் மூலமும் தெரிவிக்கலாம்; பத்திரிகைகள் மூலமும் தெரிவிக்கலாம்; வேறு எந்த முறையிலாவது தெரிவித்து, அறிவித்து, அவர்கள் வர வேண்டும். அந்த அறிவிப்பு மாண்புமிகு உறுப்பினர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களுக்குத் தெரிந்திருக்கிற காரணத்தால்தான் தெரிந்து இங்கே வந்திருக்கிறார். வந்து இங்கே அமர்ந்திருக்கிறார். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேளுங்கள் (குறுக்கீடு) தங்களுக்கு இரண்டாம் தேதி டெலக்ஸ் மூலம் செய்தி அனுப்பப்பட்டுள்ளது. அதற்கும் மீறி உள்ளூரிலே இருந்த தலைவர்களுக்கு

எல்லாம் தொலைபேசி வாயிலாகவும் இரண்டாம் தேதியே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே நீங்கள் கூலித் தொழிலாளர்களைக் கூப்பிடுவதைப் போல் அழைத்திருக்கிறீர்கள் என்று கூறுவதில் எந்தவிதமான பொருளும் இல்லை. தங்களுக்கு எல்லா மதிப்பும், மரியாதையும் கொடுத்து இந்த அறிவிப்பு தங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே இதில் எந்தவிதமான விதி முரண்பாடுகளும் இல்லை. நீங்கள் சொல்வது போல் வேறு எந்தவிதமான (குறுக்கீடு) விதிகளுக்கு அப்பாற்பட்ட முறையிலேயும் கூட்டப்படவில்லை. விதிகளுக்கு உட்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோடிட்டுக் காட்டியதுபோல் விதிகளில் என்னென்ன வரைமுறைகள் குறிப்பிடப்பட்டு இருக்கிறதோ அதற்கெல்லாம் உட்பட்டு கூட்டப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே தாங்கள் எழுப்பியதில் எந்த விதமான ஒழுங்குப் பிரச்சினையும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. தன்னிலை விளக்கம்

### தாம் தாக்கப்பட்டது குறித்து உறுப்பினர் திரு. வெ. தமிழரசு விளக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வெ. தமிழரசு அவர்கள் தான் தாக்கப்பட்டதான ஒரு விஷயம் குறித்துப் பேரவையில் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்று என்னுடைய அனுமதியைக் கோரி இருக்கிறார். அவருக்கு நான் அனுமதி அளித்திருக்கிறேன். தாங்கள் தாக்கப்பட்டது பற்றி, தன்னிலை விளக்கம் மட்டும் சொன்னால் போதும். உரிமைப் பிரச்சினைபோல் கொண்டுவர வேண்டியதில்லை.

*திரு. வெ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சொந்த ஊரான செல்லப்பம்பட்டி சேலம் மாவட்டம் நாமக்கல் வட்டத்தில் உள்ளது. கடந்த வாரம் மாரியம்மன் பண்டிகை நடைபெற்றது. இதற்கு முன்பு ஒவ்வொரு வருடமும் எந்த ஒரு பண்டிகை நடந்தாலும் அதிலே கட்சிக் கொடிகளோ அல்லது வேறு எந்தவிதத்திலும் கட்சியினுடைய பெயரைப் பயன்படுத்தக்கூடாது என்ற நிலை இருந்தது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் கடந்த வாரம் வியாழக்கிழமை அன்று தி.மு.க. கொடியைப் பிடித்துக் கொண்டு, அவர்கள் மேள தாளத்தை எங்களுடைய மாரியம்மன் பண்டிகையில் அந்த குதிரை வாகனம் செல்லும்போது அடித்துக் கொண்டு சென்றார்கள். உடனடியாக நம்முடைய இயக்கமான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாங்களும் சனிக்கிழமை கொடியைப் பிடித்துக்கொண்டு ஊர்வலத்தில் சென்று கொண்டு இருந்தோம். அப்போது திடீரென்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த கிளைச்



முற்பகல் 10-10

செயலாளர் அவருடைய வீட்டிற்கு முன்பு இந்த குதிரை வாகன ஊர்வலம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. திடீரென்று இந்த கிளைச் செயலாளர் வைரமுடி என்பவர் என்னுடைய மகனை அழைத்து—அந்த ரிப்பனை—அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துனுடைய கட்சிக்காரர்கள் கட்டி இருந்த ரிப்பனை நீங்கள் அவிழக்கவேண்டுமென்று கூறியபோது, அதற்கு என்னுடைய மகன ராஜ வெங்கடேஷ், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்து நீங்கள் கட்டியிருக்கிறீர்களே, நாங்கள கட்டினால் என்ன தவறு என்று கேட்க, உடனடியாக அதற்கு அவன் அந்த மேளம் அடிககின்ற அந்த நபரைப் பார்த்து—அவர் வாடிப்பட்டியைச் சேர்ந்த ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்—அவரைப் பார்த்து ஜாதியைச் சொல்லி ரிப்பனை அவிழ்க்கின்றீர்களா இல்லையா என்று நம்முடைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ரிப்பனை அவர்கள் அவிழ்க்க மிரட்டியவுடனே என்னுடைய மகன் வெங்கடேஷ் தடுத்தான். அதற்கு அடுத்து நம்முடைய புரட்சித் தலைவி இதய தெய்வம் அவர்களுடைய உருவம் பதித்த பனியனை—அதையே கிழிப்பதற்கு வநதபோது, அதற்கு என்னுடைய மகன் தடுக்க, உடனடியாக அநத வைரமுடி, அதாவது திராவிட முன்னேற்றக் கழக கிளைச் செயலாளரும், மாது, அண்ணாதுரை, ரவி ஆகிய நால்வரும் என்மகனை கன்னத்தில் அறைந்து முதுகில் குத்தி நம்முடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களை மிகவும் கேவலமாக அந்த இடத்திலே திட்டியிருக்கிறார்கள். உடனடியாக நான் கேள்விப்பட்டவுடன் என்னுடைய வீட்டிலேயிருந்து நம்முடைய 4, 5 கழக சகோதரர்களுடன் அந்த இடத்திற்குச் சென்ற உடனே அவன் உடனடியாக துப்பாக்கி எடுத்து வந்து சுடுவதற்கு வந்தான. உடனே போலீஸ்காரர்கள் இரண்டு பேர்களையும் தடுத்து அந்த இடத்திலே சமாதானப்படுத்தினார்கள். உடனடியாக நான் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், எஸ். பி. அவர்களுக்கும் போன் செய்தவுடன் அவனை போலீசார் கைது செய்துவிட்டார்கள். ஆனால் அவர்கள் வேண்டுமென்றே அண்ணா சிலையினுடைய விரலை ஒடித்துவிட்டு, வீரபாண்டிய ஆறுமுகத்தின் பெயரையும் பதித்து இருப்பதை அதையும் வேண்டுமென்றே குத்தி எடுத்துவிட்டு நான் அந்த அண்ணா சிலையைத் தாக்கியதாக வேண்டுமென்றே ஒரு புகாரை பத்திரிகைகளுக்குக் கொடுத்திருக்கிறார்கள். எஸ்.பி. அவர்களும், கலெக்டர் அவர்களும் நல்ல ஒரு நடவடிக்கையை எடுத்து உடனடியாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அவனை அரஸ்ட் செய்து காவலில் வைத்திருக்கிறார்கள். ஆனால் என் மீது இந்த மாலை முரசு பத்திரிகையிலேயும், தினகரன் பத்திரிகையிலேயும் அண்ணா உருவச் சிலையைத் தாக்கியதாகத் தவறாக கொடுத்திருக்கிறார்கள்.

நான் 1972 முதல் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளைச் செயலாளராக இருந்து, ஒன்றிய செயலாளராக இருந்து, அதற்கு அடுத்து ஒன்றிய பெருந்தலைவ

ராகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். ஒன்றிய அமைப்பாளராக இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களால் நியமிக்கப் பட்டேன். ஒரு கௌரவமான குடும்பத்தைச் சார்ந்தவன். அதற்கு மேல் ஒரு படி சென்று டாக்டர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களால் மாவட்ட இணைச் செயலாளராக, மாவட்டச் செயலா ளராக நியமிக்கப்பட்டேன். தற்போது ஆத்தூர் சட்டமன்ற உறுப் பினராக இருக்கிறேன். பொது வாழ்வில் ஒரு நல்ல சேவை செய்து வருகின்ற என்னை இந்த அளவுக்கு, உண்மைக்கு மாறான ஒரு செய்தியை அவர்கள் அறிவித்து என் மீது களங்கத்தை ஏற்படுத்தி இருக்கிறார்கள் என்று தங்களுடைய பார்வைக்குக் கொண்டு வருகிறேன்.

## 4. தனித் தீர்மானம்.

சில உரிமைப்பிரச்சினைகள் தொடர்பாக தண்டனை பெற்றவர்கள் தொடுத்துள்ள வழக்கையொட்டி பேரவைச் செயலாளர் சில தகவல்களோடு நேரில் வரவேண்டுமென உச்சநீதிமன்றம் ஆணையிட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னவர் அவர் களுடைய தனித் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் இந்த சட்ட மன்றப் பேரவையில் சில ஏடுகளின் மீது அவை உரிமை மீறல் பிரச்சினைகள் அவையின் உறுப்பினர்களால் எழுப்பப்பட்டன. முறைப்படி அவை உரிமைக் குழுவிற்கு அந்தப் பிரச்சினைகள் ஆய்வுக்கு விடப்பட்டன. அவை உரிமைக் குழு வழங்கிய பரிந்துரைகளின் மீது இப்பேரவை ஒருமனதாக எடுத்த முடிவின்படி பேரவைத் தலைவர் அவர்களால் தக்க முறை யான நடவடிக்கைகள் விதிமுறைகளின்படி மேற்கொள்ளப் பட்டன. பேரவை உரிமை மீறல் குற்றத்திற்கு உள்ளான வர்கள் உச்சநீதிமன்றத்தில் தொடுத்துள்ள வழக்குகளின் அடிப்படையில் உச்சநீதிமன்றம் பேரவைச் செயலருக்கு நோட்டீஸ் அனுப்ப ஆணையிடுதல், 5-5-1992-ல் உச்சநீதி மன்றத்தில் பேரவைச் செயலாளர் அவர்கள் சில தகவல் களோடு ஆஜராக ஆணையிடுதல் போன்ற நடவடிக்கைகள் உச்ச நீதி மன்றத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதுபற்றி இந்தப் பேரவை 5-5-1992-க்குள் திட்டவட்டமான நிலை மையைத் தெளிவுபடுத்த வேண்டிய அவசியமும், பேரவையின் முடிவான கருத்தைத் தெரிவிக்கவேண்டிய அவசியமுமான நெருக்கடி ஏற்பட்டதால் இன்று அவசரமாக இந்தப் பேரவை கூடவேண்டுமென்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.





முற்பகல் 10-15

இந்தப் பேரவை இப்போதுள்ள சூழ்நிலையில் நிறை வேற்ற வேண்டிய தீர்மானத்தை தங்கள் அனுமதியோடு முன்மொழிய நான் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களுக்கு வழங்கப்பட்டிருக்கிற இந்தத் தீர்மானத்தில் சிலபல சொற்கள் மாற்றமும், சில வாக்கிய மாற்றங்களையும் செய்து தங்களுடைய அனுமதியோடு நான் படிக்க விரும்புகிறேன்.

''இந்திய அரசு அமைப்புச் சட்டம் 194 ஆவது பிரிவின் படி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, மற்றப் பேரவை களைப் போல தனித் தன்மை வாய்ந்த பொறுப்புக்கள், கடமைகள், மற்றும் உரிமைகள் ஆகியவற்றைப் பெற்றிருக் கிறது. பேரவையின் உரிமைகளையும், உறுப்பினர்களின் உரிமைகளையும் எல்லா வகையிலும் காக்க வேண்டிய முழுப் பொறுப்பும், கடமையும் இந்தப் பேரவைக்கு இருக்கிறது. இவற்றைப் பொறுத்தவரை பேரவையின் உரிமைகளும், நடவடிக்கைகளும், நீதிமன்றங்கள் மற்றைய அமைப்புகள், தனி மனிதர் ஆகியோரின் தலையீட்டுக்கு அப்பாற்பட்டவை ஆகும்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி நாடாளுமன்ற அல்லது சட்டமன்றத் துறை, நீதித் துறை, நிருவாகத் துறை ஆகிய மூன்றும் தனித்தனி பொறுப்புகளோடு, தனித்தனியே இயங்கும் தன்மை உடையனவாகும். நாடாளுமன்ற சட்ட மன்றத் துறையும், நீதித் துறையும் ஒன்றை ஒன்று மதித்து நடக்க வேண்டியவை ஆகும். ஒன்றை ஒன்று தழுவி நின்று, ஆதரித்து பணியாற்ற வேண்டியவை, ஒன்றின் அதிகார வரம்பில் மற்றொன்று தலையிடுவதற்கு வழியில்லை.

தமிழகச் சட்டமன்றப் பேரவை உச்ச நீதிமன்றத்திலிருந்து அடித்தளத்திலுள்ள நீதிமன்றம் வரை உள்ள அனைத்து நீதிமன்றங்களுக்கும் உரிய மரியாதையையும், மதிப்பையும் தந்து அவற்றின் முறையான உரிமைகளை இதுவரையில் காப்பாற்றி வந்திருக்கிறது ; இனியும் காப்பாற்றி வரும்.

தமிழகச் சட்டமன்றப் பேரவை, அவைத் தலைவர், அவை உறுப்பினர்கள் ஆகியோரின் மதிப்புரிமைகளைப் பாதிக் கின்ற முறையிலும், புறக்கணிக்கின்ற வகையிலும், தவறான கருத்துக்களையும், தவறான செய்திகளையும் வெளியிட்ட ஒரு சில பத்திரிகையாளர்கள்மீது சட்டமன்ற விதிகளின்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உரிய தீர்ப்புகளும் வழங்கப் பட்டன.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1992 மே 4

இந்திய அரசமைப்புச் சட்டம் 212 ஆவது பிரிவு, பேரவை, தனது அதிகார வரம்புக்குட்பட்டு எடுக்கும் எந்த நடவடிக்கைகளையும், நீதிமன்றங்கள், 'வழிமுறைகள் பின்பற்றப்படவில்லை' என்ற காரணத்திற்காக விசாரிக்கக் கூடாது என்று தெளிவுபடுத்துகிறது.

இப்படிப்பட்ட நிலையில், இந்தச் சட்டமன்றப் பேரவையின் செயலாளர், உச்ச நீதிமன்றத்தில் தண்டனை பெற்றவர்கள் தொடுத்துள்ள வழக்கையொட்டி, 5-5-1992 அன்று உச்ச நீதிமன்றத்தில், அவையின் நடவடிக்கை தொடர்பான சில குறிப்பிட்ட தகவல்களோடு நேரில் வருகை தர வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தால் ஆணையிடப்பட்டுள்ளார்.

அரசமைப்புச் சட்டம் 208-வது பிரிவின்படி அமைந்துள்ள இந்தப் பேரவையின் விதிகளின்படியும், 212-வது பிரிவு, உட்பிரிவு (2)-ன்கீழ் வரையறுக்கப்பட்டுள்ள உரிமையின் அடிப்படையிலும், பேரவைச் செயலாளர் பேரவையின் அதிகார வரம்புக்கு உட்பட்டு நின்று, பேரவையின் ஆணைகளையும், பேரவையின் சார்பாகப் பேரவைத் தலைவர் வெளியிடும் ஆணைகளையும் முறைப்படி நிறைவேற்றி வைக்கக் கடமைப்பட்டுள்ளார். ஆகவே, பேரவைச் செயலாளர் தனிப்பட்ட முறையில் இயங்க வழியில்லை.

27-4-1992 அன்று உச்ச நீதிமன்றம், பேரவைச் செயலாளரைப் பிரதிவாதியாகச் சேர்த்து நோட்டீஸ் அனுப்பியதாக உள்ள பிரச்சினை செய்தித் தாள்களில் வந்தபோது, பேரவைத் தலைவர், இப்பேரவை இடும் கட்டளை மற்றும் தெரிவிக்கும் அறிவுரை ஆகியவை தவிர, வேறு எதையும் பேரவைச் செயலாளர் பொருட்படுத்த வேண்டியதில்லை என்று தீர்ப்பளித்துள்ளார் என்று இந்தப் பேரவை நினைவு கூர்கிறது.

மேலும், நாடாளுமன்ற மக்கள் அவை, மாநிலங்கள் அவை ஆகியவற்றின் செயலாளர்களோ, இந்திய மாநிலங்களின் மேலவை, பேரவை ஆகியவற்றின் செயலாளர்களோ, இதுவரையில் உச்ச நீதிமன்றம் அல்லது பிற நீதிமன்றங்கள் ஆகியவற்றின் வரம்பு கடந்து நிற்கும் ஆணைகளை ஏற்று, எந்த ஒரு நீதிமன்றத்திலும் ஆஜர் ஆனதில்லை என்பதை இப்பேரவை தெளிவுபடுத்துகிறது.

ஆகவே, பேரவையின் ஆணைகளை நிறைவேற்றி வைக்கின்ற பேரவைச் செயலாளர், உச்ச நீதிமன்றத்தின் ஆணையை ஏற்று 5-5-1992 அன்று உச்ச நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவேண்டிய அவசியமில்லை என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.



1992 மே 4] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இதேபோல, அவையுரிமை மீறல் பிரச்சினைக்காக உச்ச நீதிமன்றத்தில் உள்ள இப்பேரவை தொடர்பான அனைத்து வழக்குகளிலும், பேரவையின் எந்த உறுப்பினரோ, பேரவைச் செயலாளரோ, பேரவைச் செயலக ஏனைய அதிகாரிகளோ எவ்வித நோட்டீசுகளையும், அழைப்பு ஆணைகளையும், பிற ஆணைகளையும், அறிவுறுத்தல்களையும் ஏற்றுக் கொள்ள வேண்டியதில்லை என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.

உச்ச நீதிமன்றம், இந்தப் பேரவையின் உரிமைகளைப் பாதிக்காத வகையில், விளக்கங்களையோ, தகவல்களையோ அறிந்து கொள்ள விரும்பினால், அவற்றை அரசு வழக்கறிஞர் மூலம் தெரிவிக்க இப்பேரவை எப்பொழுதும் ஆயத்தமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறது.

மேலும், நீதித் துறைக்கும், சட்டப் பேரவைக்கும் இடையிலான சுமுகமான உறவினை மேலும் வளர்க்கும் வகையில் இந்தச் சட்டப் பேரவை செயல்படும் என்பதை உறுதியோடு தெரிவித்துக் கொள்கிறது.

இந்த உணர்வினைக் கருத்தில் கொண்டு நீதித் துறையும், சட்டப் பேரவையின் தனித் தன்மையையும், உரிமைகளையும் பாதுகாக்கும் வகையில் தனது பொறுப்புகளை நிறைவேற்றும் என்றும் இப்பேரவை எதிர்பார்க்கிறது.

முற்பகல் 10–20

இந்தப் பேரவையின் உரிமைகளை மீறிய வகையில் செயலாற்றியவர்களின் மீது முறைப்படியான நடவடிக்கைகளைத் தான், இப்பேரவை மேற்கொண்டிருக்கிறதே அல்லாமல், இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி சுய அதிகார வரம்புகளைப் பெற்றுள்ள நீதி மன்றங்கள் போன்ற அமைப்புகளோடு எவ்விதக் கருத்து மோதல்களையும் உருவாக்கும் எண்ணம் இச்சட்டமன்றப் பேரவைக்கு இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்கிறது" என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

அரசமைப்புச் சட்டத்தில் நாம் அடிக்கடி இது பற்றி இந்த அவையிலே விளக்கங்கள் தந்திருக்கிறோம். அரசமைப்புச் சட்டத்தின் 194-வது பிரிவின் 2 ஆம் உட்பிரிவில் சொல்லப்பட்டிருப்பதை இந்த மன்றத்தினர் அறிந்து கொள்ள வேண்டும்.

"No member of the Legislature of a State shall be liable to any proceedings in any court in respect of anything said or any vote given by him in the Legislature......"

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1992 மே 4

என்று கூறப்பட்டிருக்கிறது. அதனுடைய தமிழாக்கம், மாநில சட்டமன்றத்தில் பேசிய ஒரு பேச்சுக்காகவோ அல்லது கொடுத்த வாக்குக்காகவோ சட்டமன்ற உறுப்பினர் எவரும், எந்த நீதிமன்றத்திலும் எவ்வித வழக்குக்கும் உள்ளாக மாட்டார்கள் என்பது.

அரசமைப்புச் சட்டத்தின் 212-வது பிரிவு, 1-வது உட்பிரிவில் சொல்லப்பட்டிருப்பது, "The validity of any proceedings in the Legislature of a State shall not be called in question on the ground of any alleged irregularity of procedure." என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதனுடைய தமிழாக்கம், நடைமுறையில் முறை தவறி உள்ளது என்பதற்காக மாநில சட்டமன்ற நடவடிக்கைகளின் செல்திறன் ஆட்சேபிக்கப்படலாகாது என்பது அதனுடைய நோக்கம்.

தீர்மானத்திலே எடுத்துச் சொல்லியிருப்பது போன்று, நீதிமன்றங்களின் தனி உரிமைகள் பேரவையால் எப்போதும் காக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் இந்தப் பேரவை எந்த ஒரு பொழுதும் தலையிட்டதில்லை. அரசியல் அமைப்புச் சட்டமும், அதற்கு வழி கோலியிருக்கிறது. அரசமைப்புச் சட்டத்தினுடைய 211 பிரிவு கீழ்க்கண்டவாறு தெரிவிக்கிறது. "No discussion shall take place in the Legislature of a State with respect to the conduct of any Judge of the Supreme Court or of a High Court in the discharge of his duties."

உச்ச நீதிமன்றத்தின அல்லது உயர்நீதி மன்றத்தின் நீதிபதி ஒருவர், அவர் கடமையாற்றும் போது அவரது நடத்தையைக் குறித்து எந்த ஒரு மாநில சட்டமன்றத்திலும் விவாதிக்கப்படலாகாது என்று அரசமைப்புச் சட்டத்தினுடைய 211-வது விதி தெளிவாகக் கூறுகிறது. இந்த மாமன்றம் தொடர்ந்து அந்த விதிக்கு மதிப்பு அளித்துதான் தன்னுடைய பணியை ஆற்றி வருகிறதென்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவார்கள். யாதொரு உறுப்பினரும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் நீதிமன்றத்தினுடைய நீதிபதிகளுக்கு உள்நோக்கம் கற்பித்தோ அல்லது அவர்களுடைய தீர்ப்புக்கு உள்நோக்கம் கற்பித்தோ அல்லது வழக்கு இருக்கும்போது அதைப் பற்றிப் பேசினாலோ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களும், யார் இந்த அவைக்குத் தலைமை தாங்குகிறார்களோ அவர்களும் உடனே அதைப் பற்றிப் பேசக்கூடாது என்றும், அது பற்றிப் பேசுவது தவறாகும் என்று தடுத்துதான் நிறுத்தி வந்து, உயர் நீதிமன்றம், உச்ச நீதி மன்றம் ஆகியவற்றினுடைய உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்புணர்வோடு இந்த அவை நடந்து வந்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் அத்தனை பேரும் நன்கு அறிவார்கள்.



1992 மே 4] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அதுமட்டுமல்லாமல், இதே பேரவையில் 24—3—1983ல் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினரான திரு. ஆர். உமாநாத் அவர்கள் ஓர் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினார். அவர் எழுப்பிய பிரச்சினையாவது ரிட் மனு சமீபத்தில் நேற்று சென்னை உயர்நீதி மன்றத்தில் அனுமதிக்கப்பட்டு, வக்கீல் மூலமாகவோ அல்லது நேராகவோ வந்து முதலமைச்சர் பதில் சொல்ல வேண்டுமென்று சொல்லி நோட்டீஸ் அனுப்பி வைப்பது என்று ஹைகோர்ட் உத்தரவிட்டிருக்கிறது. அவர் அப்போது இந்த அவையிலே பேசியது, -'அங்கத்தினராக இருந்தாலும், முதலமைச்சராக இருந்தாலும் இங்கே பேசுவது சம்பந்தமாக ஒரே உரிமைதான் இருக்கிறது. ஆகவே முதலமைச்சர் என்று பார்க்காமல் கட்சி பேதமில்லாமல் இந்த அவையில் உள்ள எல்லா உறுப்பினர்களின் அடிப்படை உரிமையைப் பாதிக்கிறதென்ற முறையில் பார்க்க வேண்டும். ஆக இதுபோன்ற பிரச்சினைகளில் ஏதாவது கோர்ட் நோட்டீஸ் வந்தால் அதை முதல்வரவர்கள் பெற்றுக் கொள்ளலாமா, பதில் கூறலாமா, வக்கில் மூலம் தன்னுடைய சமாதானத்தைச் சொல்லலாமா என்பது குறித்து அவை முடிவு எடுக்க வேண்டும். அவையின் சார்பாக தாங்கள் முடிவு கூற வேண்டிய விஷயம் இது. என்னுடைய கருத்து என்னவென்றால், (திரு. உமாநாத் அவர்கள் கூறியது) 'முதலமைச்சர் நோட்டீசைப் பெற்றுக் கொள்ளக் கூடாது', சமாதானம் கூறக் கூடாது, அதை 'இக்னோர்' செய்ய வேண்டும் என்பதுதான் கான்ஸ்டிடியூஷனலாக நான் சொல்கிறேன்'' என்று அவர் குறிப்பிட்டார். அப்போது இருந்த தி.மு. கழக உறுப்பினர் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசுகிறபோது—பேரவைத் தலைவரைப் பார்த்து விளித்துக் கூறும்போது, ''சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில் தாங்கள்தான் சுப்ரீம் அத்தாரிட்டி. இங்கே என்ன நடைபெறுகின்றது, எப்படி நடைபெற வேண்டும் என்பவைகளை நீங்கள்தான் முடிவு செய்ய வேண்டும்'' என்று அவரே குறிப்பிட்டுள்ளார். அன்றைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இறுதியில் கீழ்க்கண்டவாறு தீர்ப்பு வழங்கினார்கள்.

முற்பகல் 10—25

''முதலமைச்சர் மீது தொடுக்கப்பட்ட வழக்கில், பேரவையில் அவர் பேசிய பேச்சு, என்னைப் பொறுத்தமட்டில் அது அரசமைப்புச் சட்டம் 211-வது பிரிவை மீறுவதாக இல்லையென்றாலும்—அவ்வாறு மீறுவதாக இருப்பினும் கூட, அவர் மீது எந்த நீதிமன்றத்திலும் நடவடிக்கை எடுப்பது இப்போது அரசமைப்புச் சட்டத்திற்கு விரோதமானது. இந்த அவையின் உரிமைகளைப் பாதிப்பதோடு, அவையைத் துச்சமாக மதிக்கின்ற குற்றத்திற்கு ஆளாவார்கள். எனவே இம்மாதிரியான சந்தர்ப்பங்களில், பாராளுமன்றத்திலும், மற்ற சட்டப் பேரவைகளிலும் கையாளப்படும் மரபுகளுக்கும் உரிமைகளுக்கும் ஏற்ப, முதல்வர் அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகி, வழக்கிலே

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1992 மே 4

வாதாடக் கூடாது என்று நான் தீர்ப்பளிக்கிறேன். அரசின் சார்பில் அரசின் வழக்கறிஞர்கள், நீதிமன்றத்தில் சட்டமன்றத் திற்குள்ளே அரசமைப்புச் சட்டத்தில் அளிக்கப்பட்டுள்ள தனி உரிமைகளை எடுத்துரைத்து, முதலமைச்சர் மீதுள்ள வழக்கைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று நீதிமன்றத்திற்குத் தெரிவிக்க லாம்'' என்று பேரவைத் தலைவர் அவர்கள் தீர்ப்பு வழங்க யிருக்கின்றார்கள்.

இதுபற்றிய பிரச்சினைகள் வருகின்றபோதுகூட, நாடாளு மன்றத்தில் என்ன முறைகள் கையாளப்பட்டிருக்கின்றன என் பதையும் இந்தப் பேரவை உறுப்பினர்கள் அறிந்து கொள்வது மிக நல்லதாகும். நாடாளுமன்றத்தைப் பொறுத்தவரையிலும், 3–4–1970 அன்று, சுப்ரீம் கோர்ட் சிலபல உறுப்பினர்களுக்கு நோட்டீஸ் அனுப்பிய அத்தகைய நிலைமையில், ஓர் உறுப்பினர் அவையில் எழுந்து பேசுகின்றபோது, "Whether the Court issues a summon or a notice does not make any difference to us Ultimately the privileges of the House are involved when Members, are asked to defend themselves for what they said in the House." என்று ஸ்பீக்கர் ரூலிங் கொடுத்தார். அதற்குப் பிறகு அந்த உறுப்பினர்கேட்டார். "When one of the Members who had been served with the notice on appeal by the Supreme Court expressed his desire to go and defend himself in the Court." இந்த நோட்டீசை வாங்கிய ஒரு உறுப்பினர், நான் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று அவர்களுடைய அழைப்பை ஏற்றுச் செல்வதாக இருக்கிறேன் என்று சொன்னபோது, உடனே சபாநாயகர் அவர்கள், "If he appears before the Court fully knowing Article 105 I think we will have to bring a privilege Motion against him..........."

அப்படி அந்த உறுப்பினர் இந்த அவையினுடைய உரிமையை மீறிப் போய் உச்ச நீதிமன்றத்திற்குச் செல்வாரேயானால், அந்த உறுப்பினர் மீது உரிமை மீறல் பிரச்சினை கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்படும் என்று பேரவைத் தலைவர் அவர்கள் குறிப் பிட்டார்கள்.

பொதுக் கணக்குக் குழு ஒரு கருத்தைக் கூறியது என்பதற்காக ஒருவர் வழக்குத் தொடுத்து, அந்த வழக்கு சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய், அதற்கு சுப்ரீம் கோர்ட் நோட்டீஸ் அனுப்பிய காலத்தில், ஸ்பீக்கர் சொல்லியிருக்கிறார்.— —

As had been the practice of the House he (Speaker) was asking the Chairman of the Committee to ignore the summons and not to put any appearance in the Court.



1992 மே 4] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

பொதுக் கணக்குக் குழுவினுடைய தலைவர் அவர்கள் நோட் டீஸ் வாங்கியிருந்தாலும், அவர்கள் அந்த நோட்டீசைப் பொருட் படுத்த வேண்டிய அவசியம் இல்லை. அவர் நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று நாடாளுமன்றத்தில் மக்களவைத் தலைவர் அவர்கள் ஆணை பிறப்பித்தார்கள்.

11–4–1979 அன்று கர்நாடக உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தொடுக்கப்பட்டு, அதற்காகப் பாராளுமன்றத்தின் மக்களவைச் செயலாளருக்கு—லோக் சபா செக்ரட்டரிக்கு ஒரு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. அதைப்பற்றி ஸ்பீக்கர் சொல்கிற போது, அந்த நோட்டீசை செயலாளர் அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்று குறிப்பிட்டார்கள். அதேபோன்று, பாட்னா உயர்நீதி மன்றத்தில், "The Chairman, Committee on Scheduled Castes and Scheduled Tribes was asked to appear before the Court to show cause, why the Writ Petition filed for the issue of a Writ of Mandamus for recognition of a Community in Bihar as Scheduled Tribe be not allowed ?" என்று சொல்லுகிறபோது தாழ்த்தப்பட்டவர் களுடைய குழுவினுடைய தலைவரை உயர்நீதிமன்றம் கோர்ட்டுக்கு அழைத்தபோது "As per past practice of the House, the Chairman, Committee on the Welfare of Scheduled Castes and Scheduled Tribes has been asked not to respond to the notice." ஆக அந்தக் கோர்ட்டினுடைய உத்தரவிற்கு பணியவேண்டிய அவசியம் இல்லை என்று அந்த கமிட்டியினுடைய தலைவருக்கே பேரவைத் தலைவர் அவர்கள் ஆணையிட்டிருக் கிறார்கள்.

முற்பகல் 10–30

ஆக, 6–11–1987-ல் பேரவைத் தலைவருக்கே ஒரு நோட் டீசை சுப்ரீம் கோர்ட் அனுப்பிய போது அதற்கு பேரவைத் தலைவர் அவர்கள் பாராளுமன்றத்தினுடைய லோக்சபாவிலே சொல்லுகின்றபோது, "As per well established practices and conventions of Lok Sabha, I have decided not to respond to the notice., என்று அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இவைகள் எல்லாம் பேரவை உச்ச நீதிமன்றத்தை மதிக்கக் கூடாது என்ற காரணங் களால் அல்ல. நாடாளுமன்றம், சட்டமன்றப் பேரவை ஆகிய வைகளுக்கென்று வழங்கப்பட்டுள்ள தனி உரிமைகளைப் பாது காப்பதற்காக எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கை. தீர்மானத்தில் சொல்லியிருப்பது போன்று உச்ச நீதிமன்றம் மற்ற நீதிமன்றங் களுக்கு என்று தனி உரிமைகளும் தனித் தன்மைகளும் இருக் கின்றன. அந்தத் தனித் தன்மைகளையும், தனி உரிமைகளை யும் நாடாளுமன்றத்திற்கு அரசமைப்புச் சட்டம் வகுத்துத் தந்திருக்கிறது அதைத்தான் நான் அதிலே குறிப்பிட்டிருக் கிறேன். ஒன்றை ஒன்று மதிக்கக் கடமைப்பட்டது. ஒன்றுக் கொன்று மரியாதை செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது. ஒன்றி

னுடைய நடவடிக்கையில் மற்றொன்று தலையிட முடியாது. ஆனால் ஒன்றையொன்று தழுவி பணிகளை ஆற்ற வேண்டும் என்ற ஜனநாயகப் பண்பின் அடிப்படையிலே பணிகள் ஆற்ற வேண்டும் என்பதுதான் நோக்கம்.

1952 -வது ஆண்டில் ஒரிசா மாநில முதலமைச்சர் அவர்கள் ஒரிசா நீதிமன்றத்தைக் குறித்து குறைவாகப் பேசினார் என்று சுரேந்திரன் என்பவர் உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கைத் தொடுத்தார். ஒரிசா முதலமைச்சர் என்ன பேசினார் என்றால்,

" At present, our Consttuction is new : the High Court is new. In many instances, the immaturity of the High Court is apparent. In many instances, the decision given by the High Court has been corrected by the Supreme Court. The Supreme Court also held that, in many instances, the High Court has abused the powers given to it." என்று ஒரிசா மாநிலத்தினுடைய முதலமைச்சர் பேசினார். அதனுடைய தமிழாக்கம்:

தற்போது நம்முடைய அரசமைப்புச் சட்டம் புதிது ; உயர் நீதிமன்றமும் புதிது. பல சமயங்களில் உயர்நீதி மன்றத்தின் அறிவு முதிர்ச்சி அடையாத நிலை வெளிப்படையாகத் தெரிகிறது. பல நேரங்களில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு, உச்ச நீதி மன்றத்தால் திருத்தப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றம் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பல சந்தர்ப்பங்களில் தவறாகப் பயன்படுத்தியுள்ளதாக உச்சநீதிமன்றம் கருத்துத் தெரிவித்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார். அதைப் பொறுத்து ஒரிசா உயர்நீதி மன்றத்தினுடைய நீதிபதி தீர்ப்பு வழங்கும்போது,

" Whatever that may be, the language of clause (2) of Article 194 is quite clear and unambiguous and is to the effect that no Law Court can take action against a Member of the Legislature for any speech made by him. That immunity appears to be absolute",

என்று அந்த ஒரிசா உயர் நீதிமன்றத்தின் நீதிபதி அவர்களே, முதல்வர் அந்த நீதிமன்றங்களையும், நீதிபதிகளையும் குறைவாகப் பேசினார் என்பதற்கு அளித்த தீர்ப்பில் அவர் குறிப்பிட்டிருப்பது, எது எப்படியிருந்தபோதிலும் அரசமைப்புச் சட்டத்தின் 194-வது பிரிவு, இரண்டாவது உட்பிரிவின் வாசகம் மிகத் தெளிவாக, ஐயப்பாட்டிற்கு இடம் இல்லாமல் உள்ளது. அதாவது எந்த நீதிமன்றமும், சட்டமன்ற உறுப்பினர் ஒருவர்மீது அவர் சட்டமன்றத்தில் ஆற்றிய உரைக்காக நடவடிக்கை எடுக்க இயலாது. அந்தப் பாது காப்பு சட்டமன்றத்திற்கு முழுமை வாய்ந்ததாக காணப்படு கிறது என்று அவர்கள் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.





1688ஆம் ஆண்டு பிரிட்டனில் அடிப்படை உரிமை வழங்கிய சாசனத்தில் (Bill of Rights) 9-வது பிரிவின்கீழ் கீழ்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது :

" that the freedom of speech and debates in the Proceedings in Parliament ought not to be repealed or questioned in any Court or any place out of Parliament".

பாராளுமன்றத்திற்கு வெளியே எந்த ஒரு நீதிமன்றத்திலோ அல்லது எந்த வெளியிடத்திலோ பாராளுமன்ற நடவடிக்கை குறித்து பேச்சுக்களுக்கும், விவாதங்களுக்கும் உள்ள சுதந்திரம் கேட்கப்படுவதோ, குற்றமாக்கப்படுவதோ கூடாது என்று குறிப்பிட்டு அதை பிரிட்டனுடைய பாராளுமன்றம் நடைமுறைப்படுத்தி வருகிறது என்பது மட்டுமல்லாமல் அதைத் தாய் பாராளுமன்றமாகக் கொண்டு உலகத்திலே உள்ள ஜனநாயக நாடுகளில் உள்ள சட்டமன்றங்கள், பாராளுமன்றங்கள் அந்த விதிமுறைகளைக் கடைப்பிடித்து வருகின்ற பாங்கினை நாம் நன்றாகக் காண்கிறோம்.

முற்பகல் 10.35

1964 ஆம் ஆண்டு உத்திரப்பிரதேச மாநிலத்தின் சட்டமன்றப் பேரவைக்கும் அம்மாநில உயர்நீதிமன்றத்திற்கும் உரிமைப் பிரச்சினை பற்றிய பிணக்கு ஏற்பட்டபொழுது, அப்பிரச்சினையை அரசமைப்புச் சட்டம் 143-வது பிரிவின்கீழ் குடியரசுத் தலைவர் அவர்கள் உச்ச நீதிமன்றத்தின் கருத்துக்கும் ஆலோசனைக்கும் அனுப்பிவைத்தார். இதற்காக உச்ச நீதி மன்றத்தின் 7 நீதிபதிகள் கொண்ட ஒரு விசாரணை அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. நீதிபதி சர்க்கார் அவர்கள், மற்ற 6 நீதிபதிகளின் முடிவில் ஒருமைப்பாடு தெரிவித்து, மேலும் சில ஆதாரங்களையும் கருத்துக்களையும் அவர் மட்டும் தனியாக அந்தத் தீர்ப்பிலே எழுதி உள்ளார்.

" Having conferred freedom of speech on the legislators, clause (2) emphasises the fact that the said freedom is intended to be absolute and unfettered. A similar freedom is guaranteed to the legislator in respect of anything said or any Vote given by him in the Legislature or any Committee thereof."

In other words, even if a legislator exercises his right of freedom of speech in violation, say, of Art. 211, he would not be liable for any action in any Court. Similarly, if the legislator, by his speech or vote is alleged to have violated any of the fundamental rights guaranteed by Part III of the Constitution in the Legislative Assembly he would not be answerable for the said contravention in any court " என்று அதற்குச்சொல்லி இருக்கிறார். அரசமைப்புச் சட்டம் 194-வது பிரிவில் பேச்சுரிமை மன்ற உறுப்பினர்களுக்கு

வழங்கியபின் 2-வது உட்பிரிவு அச்சுதந்திரம் முழுமையானது என்றும் எவ்வகையிலும் கட்டுப்படுத்தப்படவில்லை என்றும் மேலும் வலியுறுத்துகிறது. அதே சுதந்திரம் உறுப்பினர்கள் மன்றத்திலோ அல்லது குழுவிலோ அவர்கள் அளிக்கும் வாக்குகளுக்கும் பொருந்தும்படி அமைக்கப்பட்டுள்ளது. வேறு சொற்களில் கூறவேண்டுமானால் ஒரு மன்ற உறுப்பினர் தன்னுடைய பேச்சு சுதந்திரத்தைப் பயன்படுத்துவதில் 211-வது விதியை மீறினாலும் கூட —211-வது விதி என்பது நீதிபதிகளைப் பற்றி, நீதிமன்றத்தைப் பற்றிய எந்தக் கருத்தும் உள்நோக்கமும் கற்பிக்கக்கூடாது என்பது— எந்த ஒரு நீதிமன்றத்தின் நடவடிக்கைகளுக்கும் அவர் ஆளாக மாட்டார் ; அம்மாதிரியே ஓர் உறுப்பினர் தன் பேச்சிலோ அல்லது வாக்களிப்பிலோ அரசமைப்புச் சட்டத்தின் 3-வது பிரிவில் கொடுக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளைப் பேரவையில் மீறுவதாகக் கூறப்பட்டாலும் கூட, எந்த ஒரு நீதிமன்றத்திலும் அம்மாதிரி மீறியதற்கு விளக்கம் சொல்லக் கடமைப் பட்டவர் அல்ல என்று அவர் மிகத் தெளிவுபட எடுத்துச் சொல்லி இருக்கிறார், சர்க்கார் என்பவர்.

"It is plain that the Constitution makers attached so much importance to the necessity of absolute freedom in debates within the Legislative chambers, that they thought it necessary to confer complete immunity on the legislators from action in any Court in respect of their speech in the Legislative chambers in the wide termes prescribed by clause (2) Thus, a clause (1) confers freedom of speech on the legislators within the Legislative chambers and clause (2) makes it plain that the freedom is literally absolute and unfettered''

என்று தெளிவாக நீதிபதி சர்க்கார் குறிப்பிட்டு இருக்கிறார்.

அரசமைப்புச் சட்டத்தினை இயற்றியவர்கள் பேரவைக்கு முழுமையான சுதந்திரம் இருக்க வேண்டும் என்பதில் வெளிப்படையாகவும் மிக உறுதியாகவும் கூறி உள்ளபோது அம்மாதிரி அவர்கள் பேச்சுக்கள்மீது எந்த நீதிமன்றத்திலும் எந்த விதமான நடவடிக்கைகளையும் எடுக்க இயலாதவாறு மிகவும் பரந்த விரிவான முறையில் 2-வது விதியில் முழுப் பாதுகாப்புக் கொடுத்து இருக்கிறார்கள். 1-வது உட்பிரிவு மன்ற உறுப்பினர்களுக்கு அவையில் பேச்சு சுதந்திரத்தை அளிக்கிறது. 2-வது உட்பிரிவு அம்மாதிரியான சுதந்திரம் முழுமை வாய்ந்தது என்றும் கட்டுப்படுத்த முடியாது என்பதைத் தெளிவாக்குகிறது என்று குறிப்பிட்டு இருக்கிறார்.

1979-வது ஆண்டு கர்நாடக மாநிலத்தில் சட்டமன்ற மேலவையில் அளிக்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து திரு. சுப்பையா என்பவர் கர்நாடக உயர்நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத்



தொடுத்தார். சட்ட மன்ற மேலவையின் நடவடிக்கையின் மீது தொடுக்கப்பட்ட வழக்கு என்ற காரணத்தினால் உயர் நீதிமன்றம் அந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாமலேயே தள்ளுபடி செய்தது. உயர்நீதிமன்ற நீதிபதி தன் தீர்ப்பில் கூறிய முக்கியமான பகுதி வருமாறு :

" The Presiding Officer of the House is the supreme authority with regard to the regularity or otherwise of the proceedings. The question whether a Member, while exercising his freedom of speech has contravened Article 211 or any other provision of the Constitution is a matter which falls within his exclusive jurisdiction. As observed by the Supreme Court now, Courts have no say in the matter. Thus, the Court cannot go into the question and express any opinion on it. Hence, the question of sending for the records or quashing any such proceedings does not arise"

என்று கர்நாடக உயர் நீதிமன்றத்தினுடைய நீதிபதி தெளிவாகவே தீர்ப்பு அளித்திருக்கிறார்.

முற்பகல் 10-40

அவைக்குத் தலைமை தாங்குபவர், அவை நடவடிக்கைகள் முறையாக நடைபெறுகின்றனவா அல்லது வேறு விதமாக நடைபெறுகின்றனவா என்பதை முடிவு செய்வதற்கு முழு அதிகாரம் படைத்தவர். ஓர் உறுப்பினர் தம்முடைய பேச்சு சுதந்திரத்தைக் கொண்டு பேசும் எந்தப் பேச்சும் 211-வது பிரிவையோ அல்லது வேறு எந்தப் பிரிவையோ மீறுகிறதா என்று பார்க்க வேண்டிய முழுப் பொறுப்பும் உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டவாறு அவைத் தலைவருக்கே உரித்தாகும். அதில் நீதிமன்றங்கள் எவ்விதத்திலும் தலையிட இயலாது. எனவே, இந்த நீதிமன்றம் இப்பிரச்சினைக்குள் நுழைந்து, ஆய்ந்து தன்னுடைய கருத்தை வெளியிட இயலாது. எனவே, அவையின் ஆவணங்களை வரவழைப்பது, அவற்றைச் செல்லுபடியாகாதனவாகத் தகர்த்து எரிவது என்ற பிரச்சினையோ இப்போது எழுவில்லை என்று மிகத் தெளிவுபட எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.

1970-வது ஆண்டில் பாராளுமன்ற மக்கள் அவைத் தலைவர்மீதும், உள்துறை அமைச்சர் மீதும் மற்றும் சில உறுப்பினர்கள் மீதும் வழக்கு ஒன்றைக் கொண்டு வந்த போது, எடுத்த எடுப்பிலேயே அந்த வழக்கை டெல்லி உயர்நீதிமன்றமும், பின்னர் உச்ச நீதிமன்றமும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாமலேயே, இது சட்டமன்றம், நாடாளுமன்ற விவகாரமாக இருப்பதன் காரணமாக, இதிலே நீதிமன்றங்கள் தலையிட்டு

வதற்கு இல்லை என்று டெல்லி உயர் நீதிமன்றமும் தள்ளுபடி
செய்தது. அதற்குப் பிறகு, அவர்கள் அப்பீல் செய்தார்கள்.
உச்ச நீதிமன்றமும் அதைத் தள்ளுபடி செய்துவிட்டது.

இது போலவே, 1957, 1959 ஆம் ஆண்டுகளிலே பம்பாய்
உயர் நீதிமன்றத்திலும், 1958, 1965 ஆகிய ஆண்டுகளிலே,
அலகாபாத் உயர் நீதிமன்றத்திலும், சட்டமன்ற நடவடிக்கை
களை எதிர்த்துத் தொடுக்கப்பட்ட வழக்குகளில், நீதிமன்றங்கள்
அளித்த தீர்ப்புகளின் சாரத்தை தொகுத்து வெளியிட்டுள்ள
கவுல் அண்ட் ஷக்தார், தம்முடைய
" பாராளுமன்ற நடைமுறையும், நடவடிக்கைகளும் "—
"Practice and Procedure of Parliament" என்ற நூலில்

"....The courts of law in India have recognised that the House of Parliament or a State Legislature is the sole authority to judge as to whether or not there has been a breach of privilege in a particular case. It has also been held that the power of the House to commit for contempt is identical with that of the House of Commons and that a court of law would be incompetent to scrutinise the exercise of that power...."

என்று மிகத் தெளிவாக அதிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள்.
ஆகவே, அவர்கள் பல்வேறு நீதிமன்றங்களிலே கொடுக்கப்பட்ட
தீர்ப்புகளிலே உள்ளடங்கிய தன்மைகளை அலகாபாத் உயர்
நீதிமன்றத்திலேயும், பம்பாய் உயர்நீதிமன்றத்திலேயும் வழங்
கப்பட்ட தீர்ப்புகளையொட்டி, கவுல் அண்ட் ஷக்தர், தன்
னுடைய நூலில் தெளிவுபட சுருக்கி சாரமாகக் குறிப்பிட்டு
இருக்கிறார். ஒரு குறிப்பிட்ட பிரச்சினையில், அவை உரிமை
மீறல் இருக்கிறதா அல்லது இல்லையா என்பதை ஆராய்ந்து
பார்க்கக்கூடிய முழு அதிகாரம் படைத்த நீதிபதி பாராளு
மன்றமாகவோ அல்லது சட்டமன்றமாகவோதான் இருக்க
முடியும் என்பதை, இந்திய நீதிமன்றங்கள் பலவும் ஒப்புக்
கொண்டு இருக்கின்றன.

அவை உரிமை மீறல் பற்றியபிரச்சினையில் தீர்ப்பு வழங்கும்
அதிகாரம் இங்கிலாந்து பாராளுமன்ற நடவடிக்கை மரபுகளுக்கு
பொருந்த அமைந்திருக்கிறது என்பது நீதிமன்றங்களால்
ஏற்றுக்கொள்ளப்பட்டு இருக்கின்றது. அந்த அதிகாரத்தை
அலசிப்பார்க்கும் தகுதி நீதிமன்றத்திற்கு இல்லை என்பதை
அந்த நீதிமன்றங்கள் ஏற்றுக்கொண்டு இருக்கின்றன என்றும்
அவர் குறிப்பிட்டுள்ளார்.

1965-வது ஆண்டு, ஜனவரி மாதம் 11,12 நாட்களில்
பம்பாயில் கூடிய இந்திய நாடாளுமன்ற, சட்டமன்றப் பேரவை
யினுடைய அனைத் தலைவர்கள் மாநாட்டிலும், 1984-வது





ஆண்டு ஏப்ரல் 25-ஆம் நாள், புது டெல்லியில் கூடிய அவைத்
தலைவர்கள் அவசர மாநாட்டிலும், எடுக்கப்பட்ட முடிவுகள்
கூர்ந்து கவனிக்கத்தக்கவையாகும்.

"....that under Articles 105 and 119 of the Constitution
the Legislatures in India, had and were intended by
the founders of the Constitution, to have exclusive
jurisdiction to decide all matters relating to the privileges
of the House, their members and Committees without
any interference from the courts of law or any other authority"
என்று அந்தப் பேரவைத் தலைவர்களுடைய மகாநாடு, 2 முறை
களிலும் தீர்மானத்தை வலியுறுத்தி நிறைவேற்றியிருக்கிறது.

முற்பகல் 10—45

அவை, அவையின் உறுப்பினர்கள் மற்றும் குழுக்கள்
ஆகியவற்றைப் பொறுத்து, மதிப்பு உரைகள் மதிப்பு உரிமை
கள் பற்றிய எல்லாப் பிரச்சினைகளிலும் முடிவு எடுக்கவேண்
டிய முழு அதிகாரப் பிரிவுகளைக் கொண்டவை இந்தியாவில்
உள்ள சட்டமன்ற அமைப்புகளாகும் என்பதை அரசியல் அமைப்
புச் சட்டம் பிரிவுகள் 105 மற்றும் 194-வது ஆகியவைகள் வரை
யறுத்துக் கூறுகின்றன. இதுதான் அரசியல் அமைப்புச் சட்
டத்தை உருவாக்கியவர்களுடைய எண்ணமும், குறிக்கோளும்
ஆகும். நீதிமன்றங்கள் அல்லது வேறு பொறுப்பு ஆட்சி அமைப்பு
களோ அதில் எந்த வகையிலேயும் தலையிட இயலாது என்பதைப்
பேரவைத் தலைவர்களுடைய மகாநாடு திட்டவட்டமாகவும்,
தெளிவாகவும், திட்டமாகவும் கூறியிருக்கிறது. இப்போதுள்ள
செய்தித் தாள்கள் சங்கம் பலவும் அவை உரிமை மீறல் பிரச்
சினைகள் தொடர்பாக விதவிதமான தீர்மானங்களையும்,
விதவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டாலும் 1982-
ஆம் ஆண்டில் 'பிரஸ் கௌன்சில் ஆஃப் இந்தியா-வும், 'இண்டி
யன் லா இன்ஸ்டிட்யூட்' அமைப்பும் ஒன்றாக இணைந்து,
'பாராளுமன்ற, சட்டமன்ற மதிப்புரிமைகளும் செய்தித்தாள்
சுதந்திரமும்' என்ற தலைப்பில் ஆய்வு நடத்தி 1984-ஆம் ஆண்டு
அவை ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கின்றன. அந்த அறிக்கையில்
சில சமரசத் திட்டங்கள் கூறப்பட்டிருந்தாலும் அதில் குறிப்
பிடப்பட்டுள்ள முக்கிய பகுதியை மட்டும் இப்பேரவையின்
கவனத்தில் கொண்டுவர விரும்புகிறேன்.

"..The most potent weapon in the hands of a House to enforce its
privileges is the power to punish for its contempt or breach of privileges
Since this power is very broad and undefined it is for the House to
decide whether its contempt or beach of privilege have been committed,
என்று 'பிரஸ் கௌன்சில் ஆஃப் இந்தியாவும், 'இந்தியன் லா
இன்ஸ்டிட்யூட்டும்' சேர்ந்து நடத்திய கருத்தரங்கில் முடிவாக
எடுக்கப்பட்டு, அத்தகைய முடிவு அவை உரிமை புறக்கணிக்கப்

பட்டாலும், அல்லது அவையின் உரிமை மீறப்பட்டாலும் அவையின் கையில் உள்ள மிக வலிமையான ஆயுதம் அதற்குரிய தண்டனை வழங்கும் அதிகாரம் படைத்த மதிப்புரிமையை அவையானது பெற்றிருப்பதேயாகும். அவையின் அந்த அதிகாரம் விரிவானதாகவும், எளிதில் விளக்க முடியாததாகவும் இருப்பதால் எது அவை உரிமை புறக்கணிப்பு அல்லது எது அவை உரிமை மீறல் என்பதை அவைதான் முடிவு செய்ய வேண்டிய ஒன்றாக இருக்கிறதென்று அவர்களே தெளிவுபட எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

"....The Courts have accepted that the House is the sole authority whether its contempt or breach of privilege has been committed or not and as such they will not go into the questions of correctness, propriety or legality of the commitment." என்றும் அந்த கௌன்சில் முடிவு பண்ணியிருக்கிறது. "....Court does not sit in appeal over the decision of the House committing a person for its contempt" என்றும் அந்தக் கூட்டத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவை உரிமை புறக்கணிப்போ அல்லது அவை உரிமை மீறலோ நடைபெற்றதா அல்லது இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் முழு நீதிபதி அவைதான் என்பதை நீதிமன்றங்கள் பலவும் ஒப்புக்கொண்டிருக்கின்றன என்பதை 'பிரஸ் கௌன்சில் ஆப் இந்தியா-வும் ஒப்புக் கொண்டிருக்கிறது. அப்படி இருக்கும் பொழுது நீதிமன்றம் அவையின் நடவடிக்கையில் திருத்தம் செய்யவோ ஒழுங்குபடுத்தவோ, சட்டப்படி முறைப்படுத்தவோ இயலாததாக இருந்து வருகிறது. அவை உரிமையைப் புறக்கணித்த ஒருவர்மீது அவை மேற்கொண்ட முடிவினை ஒட்டி எழுப்பப்படுகின்ற வழக்கை எந்த ஒரு நீதிமன்றமும் விசாரிக்க முடியாது என்ற தெளிவைத்தான் 1984-ல் வந்த கூட்டறிக்கை மிகத் தெளிவுபட நமக்கு எடுத்துச் சொல்கின்றது. ஏற்கெனவே இருக்கின்ற இந்த அவையையும் நாம் பார்ப்போமேயானாலும்கூட, இப்படி இந்த அவையின் உரிமையை மீறுகின்ற அத்தகைய பிரச்சினைகள் வருகின்றபொழுது பத்திரிகைகளை வருத்தம் தெரிவிக்க வைத்திருக்கிறார்கள். பத்திரிகைகளை மன்னிப்புக் கேட்க வைத்திருக்கிறார்கள். பத்திரிகைகள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்றும் இந்த அவை வற்புறுத்தி வந்திருக்கிறது. இது மற்றைய மற்றைய ஆட்சிகளில் இருப்பதைவிட முன்னாள் முதல்வர் கருணாநிதி ஆண்டபொழுது என்னென்ன உரிமைப் பிரச்சினைகள் வந்திருக்கிறது, அதற்கு எந்த அளவிற்கு அந்த உரிமைக்கு அவர்கள் மதிப்பு தந்திருக்கிறார்கள், அதை வற்புறுத்தியும் வந்திருக்கிறார்கள் என்பதற்கு மட்டும் நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

**1972-ல்** நாத்திக ஏடு உறுப்பினர்களை அரசியல் கோமாளிகள் என்று எழுதியதற்காக திரு. சௌடி எஸ். சுந்தரபாரதியால் உரிமைப்பிரச்சினை எழுப்பப்பட்டு, அது உரிமை ஆய்வுக்



குழுவிற்கு அனுப்பப்பட்டு, நாத்திகம் ஏட்டின் ஆசிரியர், பதிப்பாளர் ஆகியோரை அவையின் கூண்டில் நிறுத்தி கண்டிக்க வேண்டுமென்று அது பரிந்துரை செய்திருக்கிறது. பிறகு யோசித்து அந்தப் பிரச்சினை—கூண்டில் நிறுத்துகின்ற பிரச்சினை அவையால் கைவிடப்பட்டது.

**1973-ல்** தென்னகம் ஏட்டில் வந்த டாக்டர் எச். வி. ஹண்டேயின் பேச்சு பற்றி உரிமைப் பிரச்சினை எழுப்பப்பட்டு, உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட்டு, உரிமைக் குழு ஆராய்ந்தது. டாக்டர் எச். வி. ஹண்டே, தென்னகம் ஏட்டின் ஆசிரியர், பதிப்பாளர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி ஆகிய இருவரும் கடுமையாக கடைசியில் கண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்.

**1974-ல்** மக்கள் குரல் ஏட்டில் வெளியிடப்பட்ட ஒரு நோட்டீஸ் குறித்து, அவை உரிமை மீறல் பிரச்சினை எழுப்பப்பட்டு, உரிமைக் குழுவால் ஆய்வு நடத்தப்பட்டது. திரு. அப்துல் சலாம், மற்றும் மக்கள் குரல் ஆசிரியர் ஆகியோர்மீது குற்றம் சுமத்தப்பட்டது. திரு. அப்துல் சலாம் வருத்தம் தெரிவித்து மன்னிப்பு கேட்டுக் கொண்டதால் மேற்கொண்டு நடவடிக்கை வேண்டாம் என்று கைவிடப்பட்டது. 1975-ல் மதிப்பீட்டுக் குழு பற்றி தவறான செய்திகளை வெளியிட்டதற்காக மக்கள் குரல், தென்னகம், அன்னைநாடு, சமநீதி ஆகியவற்றின்மீது உரிமைப் பிரச்சினைகள் எழுப்பப்பட்டு, ஆய்வுக் குழுவால் ஆய்வு செய்யப்பட்டு, ஆசிரியர்கள் பதிப்பாளர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

முற்பகல் 10—50

**1976** சனவரி 31-ல் சட்டமன்றம் கலைக்கப்பட்டதால் அறிக்கை செல்லுபடியாகாமல் போய்விட்டது. 1973ல் பேரவையில் துண்டு நோட்டீஸ் வீசியதற்காக திருமதி ஜகதீஸ்வரி அவர்கள் மீது இந்த அவை உரிமை மீறல் பணியை நடத்தினார்கள். துண்டு நோட்டீஸ்களை அவையில் வீசினார்கள் என்பதற்காக, அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டது. சிறைத் தண்டனையும் அளிக்கப்பட்டு அவர்கள் 14 நாட்கள் சிறைக்கு அனுப்பி வைக்கப்பட்டார் என்பது 1973-லே கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோது நடைபெற்ற செயல்கள்தான். 1975-ல் பேரவையில் துண்டு நோட்டீஸ் வீசியெறிந்ததற்காக திரு. ஜோரா பரசுராம் பிரபு என்பவர்மீது அவை உரிமை மீறல் குற்றம் சுமத்தப்பட்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு சிறையிலும் அவர் அடைக்கப்பட்டார்.

**1989-ல்** திருமதி பாப்பா உமாநாத் அவர்களுடைய பேச்சை திருத்தி வெளியிட்டதற்காக 'நமது எம்.ஜி.ஆர்' மீது அவை உரிமை மீறல் குற்றம் சுமத்தப்பட்டு, ஏற்பட்டு விட்டது தவறு என்ற உடனேயே, வருத்தம் தெரிவிக்க

மாட்டேன் என்றோ, அவைக்கு வர மாட்டேன் என்றோ, கூப்பிட்டால் வரமாட்டேன் என்றோ 'நமது எம்.ஜி.ஆர்.' ஏடு சொல்லவே இல்லை. இந்தக் குற்றம் சுட்டிக் காட்டிய உடனேயே தவறுக்கு ஆசிரியர் வருத்தம் தெரிவித்தார்கள். வருத்தம் தெரிவித்த உடனேயே 'நமது எம்.ஜி.ஆர்.' மீது தொகுக்கப்பட்ட உரிமைப்பிரச்சினை கைவிடப்பட்டது என்று தான் இருக்கிறது. இப்போது நாம் விரும்புவதும் அதுதான். தவறுக்கு வருந்துகிறோம், மன்னிப்பு என்று சொன்னால் அவ்வளவு பிரச்சினைகளும் தீர்ந்து விடும். ஆகவே எல்லாப் பெரிய பெரிய பத்திரிகைகளின் ஆசிரியர்களும், பரவலான பத்திரிகை ஆசிரியர்களும், தவறு என்று உணர்ந்து தவற்றுக்கு வருத்தமோ மன்னிப்போ தெரிவிப்பது என்பது உள்ளபடியே பெருந்தன்மைக்கு அடையாளமே தவிர, உணர்ந்து விட்டோம் என்பதற்கு அடையாளமே தவிர வேறல்ல. அறிந்து செய்ய வில்லை, இன்டென்ஷனோடு செய்யவில்லை, உள்நோக்கம் வைத்து செய்யவில்லை என்று குறிப்பிட்டு வருந்துகிறேன் என்று சொல்லிவிட்டால், மன்னிப்பு கேட்டுவிட்டால், இந்தப் பிரச்சனை இவ்வளவு வளர்ந்திருக்கவேண்டிய அவசியமே இருக்காது.

ஆனால் 1989-ல் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட எக்ஸ் பென்ஜ்ட் பகுதி— அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்பட்ட பகுதியை பத்திரிகைகள் வெளியிடக்கூடாது என்பது மரபு. அதிலே தொடர்ந்து பல உரிமைப் பிரச்சினைகள் வந்திருக் கின்றன. இப்போது கொண்டு வந்திருக்கிற பிரச்சினையும் அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்பட்டதை பிரசுரித்தார்கள் என் பதற்காகத்தான். ஆகவே பத்திரிகைகள் மீது நாம் நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியத்திற்கு வந்தோம். 1989-ல் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்பட்ட பகுதியை வெளியிட்டதற்காக தினகரன் ஏட்டின்மீது திரு. குமரி அனந்தன் அவை உரிமை மீறல் குற்றச்சாட்டைக் கொண்டு வந்தார். தினகரன் ஆசிரியர் தவற்றிற்காக வருத்தம் தெரிவித்ததன்பேரில், அதற்குப் பிறகு பிரச்சினை கைவிடப்பட்டது. ஆக தினகரன் ஏடு வருத்தம் தெரிவித்திருக்கிறது. அதிலே தவறாக வந்துவிட்டதற்காக.

1989-ல் பாப்பா உமாநாத் அவர்கள் தினமணி ஏட்டின் மீது அவை உரிமை மீறல் குற்றம் சுமத்தினார். தினமணி பிறகு கடுமையாக எச்சரிக்கப்பட்டு பிரச்சினை கைவிடப்பட்டதாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. 1989-ல் திரு. சி. கோவிந்தராஜன் அவர்கள் அவை பற்றிய தவறான செய்தியை மக்கள்குரல் வெளி யிட்டதாகக் கூறி அதன் மீது அவை உரிமை மீறல் குற்றச் சாட்டை சுமத்தினார், கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டு பிறகு பிரச்சினை விடப்பட்டிருக்கிறது. 1990-ல் திரு. கே.எம். கதிரவன் தினமலர் ஏட்டின் மீது, செய்தியைத் திரித்து வெளி யிட்டதாகக் கூறி, அவை உரிமை மீறல் குற்றச்சாட்டை சுமத் தினார். அந்த ஆட்சிதான் அதை எடுத்தது. தினமலர் ஏடு வருத்தம் தெரிவித்ததோடு திருத்தத்தையும் வெளியிட்டது.



திருத்தத்தையும் வெளியிட்டு வருத்தம் தெரிவித்துக் கொண்ட தற்காக இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு கட்டப்பட்டு, அந்தப் பிரச்சினை கைவிடப்பட்டது. 1990-ல் திரு. எஸ். ஆர். இராதா தூர்தர்ஷன் மீது அவை உரிமை மீறல் குற்றச்சாட்டை சுமத்தினார். தூர்தர்ஷனுடைய அதிகாரிகள் வருத்தம் தெரி வித்துக் கொண்டதால் பிரச்சினை முடிவுக்குக் கொண்டு வரப் பட்டது.

1989-ல் அவையில் துண்டு நோட்டீஸ் போட்ட திரு. வெம்பா வீராசாமி என்பவர் அவை உரிமை மீறல் குற்றச்சாட்டின்கீழ் உட்படுத்தப்பட்டதன் காரணமாக அவருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு சிறைத் தண்டனை கொடுக்கப்பட்டது.

இதை ஏன் சொல்ல வருகிறேன் என்று சொன்னால் முன் னாள் முதல்வர் அவர்கள் முதல்வராக இருந்து ஆட்சி நடத்திய போது இந்த அவையினுடைய உரிமையையும் அவை உறுப் பினர்களுடைய உரிமைகளையும் பிரச்சினைகளையும் பாது காக்க வேண்டிய பொறுப்பிலே எவ்வளவு அக்கறையோடு ஆர்வத்தோடு இருந்திருக்கிறார்கள் என்பது மருமகளாக இருக்கிறபோது இருக்கிற உணர்வு, மாமியாராக ஆகி விட்ட தற்குப் பிறகு இல்லை. வேறு ஒரு உணர்வு இருக்கிறது, என் பதற்கு இணங்க— தெரிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆளும் கட்சியாக இருந்தாலும் எதிர்க்கட்சியாக இருந்தாலும், இந்த நாட்டினுடைய ஜனநாயகத்தை, மரபைக் காப்பாற்ற வேண்டும் என்பதுதான் நிலை.

முற்பகல் 10—55

மற்றொன்றையும் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற பொழுது நாம் ஒன்றை கவனிக்க வேண்டும். இப்போது வந்திருக்கின்ற அத்தகைய பிரச்சினைகளுடைய அடிப்படையிலே பார்த்தால் மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்கள் பேசுகின்றபோது ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை நீங்கள் மதிக்கவில்லை என்றால் பங்காரப்பா மட்டும் எப்படி மதித்து தண்ணீர் தருவார் என்று. ஆனால் நாம் பேசுவது அரசைப் பற்றியோ அல்லது தனிப்பட்டவர்களைப் பற்றியோ மற்றவர்களைப் பற்றியோ ஏற்படுத்தப்படுகின்ற உரிமை, கோர்ட்டினுடைய தீர்ப்பைப் பற்றி அல்ல. நாம் எழுப்பி யிருப்பது இந்த அவையினுடைய உரிமையைக் காப்பாற்றுவது, இந்த அவைக்கு என்னென்ன உரிமை இருக்கிறது என்பதை. ஆகவே உச்ச நீதிமன்றத்தினுடைய நோட்டீசை வாங்க வேண்டிய அவசியம் இல்லை, அதற்குக் கட்டுப்பட வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்கின்றோமே தவிர அரசு கட்டுப் படாது என்றோ அரசு அலுவலர்கள் கட்டுப்பட மாட்டார்கள் என்றோ அரசமைப்பு கட்டுப்படாது என்றோ நான் சொல்ல வில்லை. சுப்ரீம் கோர்ட்டுக்கும் தமிழக அரசுக்கும் தகராறு இருந்து மோதல் இருந்து சுப்ரீம் கோர்ட் தமிழக அரசுக்கு

நோட்டீஸ் அனுப்பினால் கட்டாயம் போய்த்தான் தீர வேண்டும். எந்த ஒரு அதிகாரிக்கு அனுப்பினாலும் கட்டாயம் போக வேண்டியதுதான். ஒரு அரசுக்கிட்ட கட்டளையை பங்காரப்பா மீறுகிறார் என்றால் நீதிமன்றம் எல்லா வகையிலும் கண்டிக்க, கேட்க, வற்புறுத்த உரிமை உண்டு. நான் பேசுவது அவை உரிமைப் பிரச்சினை. அவைக்கு என்று வழங்கப்பட்டிருக்கின்ற, இதுவரையிலும் நான் படித்துக்காட்டிய அத்தகைய உரிமைகளைப் பொறுத்தது. ஆகவேதான் இது எந்த நீதிமன்றத்திலும் தீர்க்கப்படக்கூடியது அல்ல. நடைமுறையிலே ஏதாவது தவறு ஏற்படுமேயானால், வேறு பல நிலைமைகள் ஏற்படுமேயானாலும் அதை வைத்துக்கூட எந்த ஒரு நீதிமன்றமும் விசாரிக்கவும் முடியாது தலையிடவும் முடியாது என்பது தெள்ளத் தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டு இருக்கிறது. ஆகவேதான் பங்காரப்பா உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை மறுப்பதற்கும் நாம் உச்ச நீதிமன்றத்தினுடைய உரிமையிலே நாங்கள் தலையிட விரும்பவில்லை எங்களுடைய உரிமைகளிலே நீங்கள் தலையிடாதீர்கள் என்று சொல்வதற்கும் வேறுபாடு உண்டு என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். இப்போதும் நாம் என்ன சொல்கிறோம் என்றால் உச்ச நீதிமன்றத்திற்கும் நமக்கும் எந்த மோதலும் இல்லை. செய்தித்தாள்களுக்கும் நமக்கும் எந்த மோதுதலும் இல்லை. 51 செய்தித்தாள்களுடைய நிருபர்களுக்கு இங்கு அனுமதி அளித்திருக்கிறோம். 3 பேர் அவை உரிமையை மீறினார்கள் என்ற காரணத்திற்காகத்தான் காரண காரிய விளக்கங்கள் காட்டி அவர்கள் மீது நடவடிக்கை எடுத்தோமே தவிர வேறு எந்த ஒரு செய்தித் தாளுக்கும் இந்த அரசு எந்தத் தாக்கீதும் அனுப்பவில்லை. நோட்டீசும் அனுப்பவில்லை. அவர்களுடைய உரிமைகளும் மறுக்கப்படவில்லை. எழுதுபவர்கள் இன்றும் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். நேற்றும் எழுதிக் கொண்டிருந்தார்கள். தனிப்பட்ட முறையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையோ, அமைச்சர் பெரு மக்களையோ, உறுப்பினர் பெரு மக்களையோ தனிப்பட்ட முறையில் ஆபாசமாக இழித்தும், பழித்தும், ஏசியும் தூற்றியும் என்னென்னமோ எழுதுகிறார்கள். அதைப்பற்றி அல்ல இங்கே கொண்டு வந்த பிரச்சனை. அவைகள் நடந்து கொண்டிருக்கின்றன. நேற்றைய பத்திரிகைகளிலும் நடந்திருக்கின்றன. இன்றைய பத்திரிகைகளிலும் நடந்து கொண்டிருக்கின்றன. எல்லா பத்திரிகைகளிலும் நடந்து கொண்டே இருக்கின்றன. அவை அவரவர்கள் தனித்தனியாக கவனிக்க வேண்டிய ஒன்று. இங்கே கொண்டு வந்திருக்கின்ற பிரச்சினை அவை உரிமையை மீறியும் இந்த அவையைப் பொறுத்த ஒன்று. இந்த அவையினுடைய உரிமை காப்பாற்றப்பட்டால்தான் ஜனநாயகம் தழைக்கும், நிலைக்கும் என்பதற்காகத்தான் இந்தத் தன்மைகளே தவிர விமர்ச்சிக்கக் கூடாது என்பது அல்ல. இந்தப் பிரச்சனைகள் எடுத்துக் கொண்டதற்குப் பிறகு எந்தப் பத்திரிகை தங்களுடைய விமர்சனத்தை விட்டுவிட்டார்கள் என்று நீங்கள் கருதுகிறீர்கள்? இந்த அவை உரிமைப் பிரச்சனை கொண்டு





வந்ததற்காக எல்லா ஏடுகளையும் — அதிகமாகப் போக வேண்டாம் — சென்ற ஒரு வாரகாலமாக வந்த ஏடுகளையெல்லாம் வரிசையாக பரப்பி வைத்துப் பார்ப்பீர்களானால் அவர்கள் தங்களுடைய விருப்பப்படி முழுச் சுதந்திரத்தோடு விமர்சனம் செய்யாமலா இருக்கிறார்கள்? ஆகவே ஒரு ஊரிலே 500 பேர் இருக்கும்போது 3 பேர் திருடினார்கள் என்ற குற்றத்தைக் காட்டி அவர்களைப் பிடித்தால் ஊரிலே இருக்கின்றவர்களை எல்லாம் எதிர்த்தோம் என்ற அர்த்தமா? திருடியவன் 3 பேர். ஆகவே அவனைப் பிடித்தோம் என்றுதான் ஆகுமே தவிர ஊரிலே இருக்கின்றவர்களை எல்லாம் பிடித்தோம் என்று ஆகாது. அந்த முறையில் இன்றைக்கும் நான் சொல்கிறேன். நாம் யாரோடும் மோதவும் இல்லை. ஆனால் சில பேர் மோதப் பார்க்கிறார்கள். அதற்கும் இடம் கொடுக்கக் கூடாது என்பதுதான் நம்முடைய எண்ணமே தவிர இந்த அரசு, இந்தப் பேரவை செய்தித் தாள் துறையினரோடு மோதவே இல்லை. எந்தக் கண்டிப்பும் அவர்களிடத்திலே காட்டவில்லை. உச்ச நீதிமன்றத்தோடும் மோதவில்லை. இந்த அவைக்கு இருக்கிற உரிமை காப்பாற்றப்பட வேண்டும். என்ற காரண காரிய விளக்கத்தோடுதான் இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தத் தீர்மானத்தினுடைய நோக்கமே யாரையும் பழி வாங்க வேண்டும் என்றோ அல்லது யாருக்கும் கேடு விளைவிக்க வேண்டும் என்றோ, தீங்கு விளைவிக்க வேண்டும் என்றோ எண்ணமே இல்லை. இந்த அவையினுடைய முழு உரிமையும் காப்பாற்றப்பட வேண்டும். எல்லா சட்ட மன்றப்பேரவைகளும் நாடாளுமன்றமும் எப்படி, எப்படி இதற்கு முன்னால் காப்பாற்றிக் கொண்டு வந்து இருக்கிறார்களோ அந்த வழியைப் பின்பற்றித்தான் நாமும் நடக்கிறோம் என்பதை எடுத்துச் சொல்லி இந்தத் தீர்மானத்தை முழு மனதோடு ஆதரித்து நிறைவேற்றி இந்தப் பேரவையினுடைய உரிமையையும், மதிப்பு உரிமைகளையும் இதனுடைய தன்மையையும், இதனுடைய பெருமையையும் புகழையும் காப்பாற்ற வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 11—00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில் சட்டமன்ற உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்பதாலே உறுதியாக நிற்பதோடு மாநிலங்களுக்கு மேலும் கூடுதல் அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்று நீண்ட காலமாக போராடி வருகிற ஒரு கட்சியாகும். ** (குறுக்கீடுகள்).

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தம்புசாமி அவர்கள், நீங்கள் பேச ஆரம்பிக்கும்போதே என்னுடைய வேண்டுகோளையும் தெரிவிக்க வேண்டும் என்று இருந்தேன். இன்றைக்கு எடுத்துள்ள பிரச்சினை இந்த அவையினுடைய உரிமையை, இந்த அவைக்கு இருக்கக்கூடிய மதிப்பைக் காப்பாற்றுவதற்காக நாம் எடுத்திருக்கிற பிரச்சினை, இதிலே அரசாங்கம் எடுத்திருக்கின்ற நடவடிக்கைகள் என்பது விமர்சனத்திற்கு வரவேண்டிய அவசியமே இல்லை. ஒருமுகமாக நாம் நம்முடைய உரிமையை நிலைநாட்டுவதுதான் நல்லது. (குறுக்கீடு) நீங்கள் இதிலே வந்து (குறுக்கீடு). . இல்லை. . அரசாங்கத்திற்கும் எதிர்க்கட்சிகளுக்கும் பல்வேறு வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் இன்றைக்கு நாம் விவாதத்திற்கு எடுத்துக் கொண்டிருக்கிற பிரச்சினை இந்த அவையைப் பற்றியது. அரசாங்கத்தினுடைய நடவடிக்கைகளைப்பற்றி நாம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளவில்லை. இந்த அவையைப் பற்றிய பிரச்சினை. எனவே, இந்த அவைக்குள்ள தனித் தன்மையை, இந்த அவைக்குரிய மேலாண்மையைப் பற்றி நீங்கள் உங்கள் விவாதத்திலே எடுத்து வைப்பதுதான் நல்லது. அதை விடுத்து விட்டு அரசாங்கத்தின் மீது உங்களுக்கு இருக்கிற கோப தாபத்தை இந்தப் பிரச்சினையிலே வந்து காண்பிப்பது நல்லதல்ல. எனவே, நீங்கள் கூறுகிற அந்தப் பிரச்சினை இந்தத் தீர்மானத்திற்கு சம்பந்தம் இல்லாதது. எனவே, அதை விடுத்து விடவும். அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கி விடுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு).

திரு. வே. தம்புசாமி : இனி இப்பிரச்சினையை மேலும் சிக்கல் ஆக்காமல் இருக்க தமிழ்நாடு அரசு தன்னுடைய நிலையைப் பரிசீலனை (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பழனிசாமி அவர்கள் அமர வேண்டும். திரு. தம்புசாமி நீங்கள் அரசாங்கத்தின் மீது உங்களுக்கு இருக்கிற குற்றம் குறைகள் குறித்துப் பேச வேறு வாய்ப்பைப் பயன் படுத்த வேண்டும். இந்த வாய்ப்பில் இந்தப் பேரவை பற்றிய பிரச்சினைகளை மட்டும் நீங்கள் பேசுவது நல்லது. திரு. பழனிசாமி அவர்கள் உங்கள் இடத்தில் அமர வேண்டும்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்கள் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள வில்லை என்று சொல்லலாம் ; எதிர்க்கிறேன் என்று சொல்ல



லாம் ; திருத்தங்கள் இருக்கின்றன என்று சொல்லலாம். ** நான் சொன்னேன் எந்த பத்திரிகைகள் மீது தொடர்ந்து எந்த நோட்டீஸ் கொடுத்து இருக்கிறோம். 'இந்து' மீது கொடுத்து இருக்கிறோமா ; இந்தியன் எக்ஸ்பிரஸ் மீது கொடுத்து இருக்கிறோமா; வேறு பத்திரிகைகள் மீது கொடுத்திருக்கிறோமா; நீங்கள் எழுதக் கூடாது என்று சொல்லியிருக்கிறோமா, எதைப் பறித்து இருக்கிறோம். ஆக மொத்தம் பொதுவாக சொல்லுவது நல்லதல்ல. ஆக எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்றாவது சொல்லுங்கள். அது வேறு. குற்றச்சாட்டைச் சாட்டாதீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து திரு. தம்புசாமி அவர்களுக்கும் ஏனைய அனைத்து உறுப்பினர்களுக்கும் என்னுடைய வேண்டுகோள். இந்தத் தீர்மானம் என்பது அரசினர் தீர்மானம் அல்ல. அரசினர் தீர்மானம் என்றால் அதை சம்மந்தப்பட்ட அமைச்சர்கள் முன்மொழிவார்கள். இது பேரவையினுடைய தீர்மானம். நிதி அமைச்சர் என்ற நிலையில் அல்லாது பேரவை முன்னவர் என்ற நிலையில் அவரால் முன்மொழியப்பட்டு இருக்கிற தீர்மானம் இது. பேரவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்து இருக்கிற தீர்மானத்தின் மீது நீங்கள் கருத்துக்களைச் சொல்லுகிறபோது அரசாங்கத்தின் மீது உள்ள விமர்சனங்களைக் கொண்டு வந்து இதிலே சேர்ப்பது நல்லதல்ல. அதற்கு உங்களுக்கு வேறு வாய்ப்புக் கிடைக்கிற நேரத்தில் அந்த வாய்ப்பில் நீங்கள் வேண்டுமானால் அதைச் சொல்லலாம். அதற்கு அரசாங்கம் உரிய பதில் சொல்லும். எனவே, இப்போது இருக்கிற பிரச்சினை—(குறுக்கீடு) தயவுசெய்து திரு. தம்புசாமி அவர்கள் உட்கார வேண்டும், நான் சொல்லி விடுகிறேன். (குறுக்கீடு) அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி இந்தப் பேரவைக்கு இருக்கிற தனித் தன்மையைப் பாதிக்கிற வகையில் இன்றைக்கு ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கிறது. எனவே, அதைப் பாதிக்க அனுமதிக்கலாகாது என்பதை நம்முடைய கருத்தாகக் கொண்டு இந்தத் தீர்மானம் முன்மொழியப்பட்டிருக்கிறது. இந்தப் பேரவையினுடைய அந்தத் தனித் தன்மையைக் காப்பாற்ற வேண்டுமென்பதில் எல்லாக் கட்சியினருக்கும் முழு அக்கறை இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. எனவே அந்த நம்பிக்கை வீண் போகாத அளவில் உங்களுடைய கருத்துக்களைத் தெரிவியுங்கள். நாம் இந்தப் பிரச்சினையில் ஒன்றாக இருக்கிறோம் என்று நாட்டுக்கு காண்பிப்பதுதான் நல்லது. திரு. தம்புசாமி அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1992 மே 4

முற்பகல் 11-05

திரு. வே. தம்புசாமி : எனவேதான் இந்தப் பிரச்சினையை மேலும் சிக்கலாக்காமல். **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. தமிழக அரசுக்கு, இதிலே தமிழக அரசுக்கு எத்தகைய தொடர்பும் இல்லை. வேறுவிதமாக கொண்டு வந்து தமிழக அரசை நீங்கள் விமர்சிக்கலாம். இந்தப் பிரச்சினையில் தமிழக அரசு எங்கே வருகிறது. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. தம்புசாமி அவர்கள் சொல்லுகிறபொழுது, இந்த அரசு, அரசு என்று சொல்லாமல் இந்த அவை, அவை என்றுதான் சொல்லலாம். இது அவை கொண்டு வருகிற தீர்மானமே தவிர, அரசு கொண்டு வருகிற தீர்மானம் அல்ல. ஆகையால், நீங்கள், அரசு, அரசு என்று சொல்வதை விட்டுவிட்டு, இந்த அவை, அவை என்று சொல்வதிலே எங்களுக்கு எந்த மாறுபாடும் இல்லை, அரசு, அரசு என்று சொல்வது நியாயமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆகவேதான் சொன்னேன். அரசாங்கத்தைப் பற்றிய பிரச்சினையே இந்தத் தீர்மானத்தில் இல்லை. இந்த அவையில் ஒன்று சேர்ந்து நாம் எடுக்கவேண்டிய முடிவு. அதைப் பொறுத்துத்தான் இருக்கிறது.

திரு. என். பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு, தம்புசாமி அவர்கள் **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கிவிட்டோம். அரசைப் பற்றிய பிரச்சினைகளை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கியிருக்கிறேன். திரு. தம்புசாமி.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1992 மே 4]

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அளவில், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில் **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே தமிழக அரசு வரவில்லை. நான் திரும்பத் திரும்ப உங்களுக்குச் சொல்லுகிறேன். இந்த அவையினுடைய நடவடிக்கைகளைப்பற்றி நீங்கள் விமர்சிக்கலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்கள். ** என்றார். அதை அவர் விளக்கிச் சொல்லவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ** என்பதை உறுப்பினர் விளக்கிக் கூற முடியுமா ? (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித்தலைவர் அவர்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் சட்டப் பேரவை கூட்டப்பட்டிருப்பது, ஒரு அசாதாரணமான சூழ்நிலையில் கூட்டப்பட்டிருக்கிறது. நாளையதினம் சட்டப் பேரவையின் செயலாளர் உச்சநீதி மன்றத்தில் ஆஜராகவேண்டும் என்று வந்திருக்கிற சம்மென்ஸை ஏற்றுக்கொள்வதா அல்லது அதற்கு எந்தவிதமான பதில் அளிப்பது என்பதைப் பற்றித்தான் இங்கே விவாதிப்பதற்காக இந்தச் சட்டப் பேரவை இன்றையதினம் கூட்டப்பட்டிருக்கிறது. அரசின் மீது குற்றம் சுமத்துவதற்கு இந்தத் தீர்மானம் இடமளிக்கவில்லை. நீங்கள் அரசின்மீது குற்றம் சுமத்துவதாக இருந்தால், தனியாகத் தீர்மானம் கொண்டுவந்து, அரசின்மீது குற்றம் சுமத்தலாம். அல்லது அதற்கு வேறு நேரங்களை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். இங்கே நம்முடைய உரிமை, சட்டப் பேரவையின் உரிமை, எந்த அளவுக்குப் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றி மட்டுமே பேசுவது நலம் பயப்பதாக இருக்கும். நல்ல உறவுகளை வளர்ப்பதற்காக நீங்கள் பேசுவீர்களேயானால், நிச்சயமாக நாங்களும் உங்களுக்கு ஆதரவாக இருப்போம். ஆனால், தேவையில்லாமல், இப்போது, அரசாங்கம், அரசாங்கம் : அரசாங்கத்தின் நடவடிக்கைகள் என்று பேசுவது உள்ளபடியே பிரச்சினையைத் திசை திருப்புவதாகவே அமையும். (மேசையைத் தட்டும் ஒலி).

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1992 மே 4

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தம்புசாமி அவர் களுடைய கவனத்திற்கு இன்னொன்றையும் கொண்டு வருகிறேன். இதேபோல, உயர் நீதி மன்றத்திலேயிருந்து, இந்தப் பேரவை யில் முதலமைச்சராக இருந்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு ஒரு நோட்டீஸ் வந்தபோது, உங்களுடைய கட்சியின் தலைவர் திரு. உமாநாத் அவர்கள். 24—3—1983 அன்று, அன்றையதினம் அனைத்திந்திய அண்ணா தி. மு. க. வுக்கும் உங்களுக்கும் தோழமை உணர்வு இல்லை. இருந்தாலும் அவர் அன்றைக்கு இந்த அவையிலே எடுத்து வைத்த உணர்வை உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப் பட்டிருக்கிறேன். அவர் சொல்லுகிறார், பேசி முடித்துவிட்டு; '' என்னுடைய கருத்து என்னவென்றால், முதலமைச்சர் நோட் டீசைப் பெற்றுக் கொள்ளக் கூடாது ; (மேசையைத் தட்டும் ஒலி) சமாதானமும் கூறக் கூடாது ; (மேசையைத் தட்டும் ஒலி) இதை இக்னோர் செய்ய வேண்டும்''; ''கான்ஸ்டிடியூஷனலாகவே சொல்லுகிறேன்'' என்று அவர் சொன்னது...... இது உங்களுடைய கட்சித் தலைவர், இந்த அவையினுடைய உரிமை மீறப்படுகிறது என்கிற நிலைமை வந்தபோது எடுத்த முடிவு. (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைக்காவது முதலமைச்சர் மீது இருந்த பிரச்சினை. இன்றைக்கு இந்த அவையே பிரச்சினையாக்கப்பட்டு இருக்கிற நேரத்தில், மாண்பு மிகு திரு. தம்புசாமி அவர்கள் வேறு எங்கோ இந்தப் பிரச்சினையைக் கொண்டு செல்வது நல்லதல்ல. அரசாங்கம் என்பது இந்தத் தீர்மானத்தில் எந்தவகையிலேயும் தொடர்பு உடையது அல்ல. இது இந்த அவை எடுக்கிற முடிவு. எனவே, இந்த அவை எடுக்கிற முடிவில் உங்களுடைய கருத்து மாண்புமிகு பேரவை முன்னவரவர்கள் தெரிவித்த அந்தக் கருத்துக் களோடு ஒன்றியிருப்பதுதான் நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

திரு. வே. தம்புசாமி : ஒரு விஷயத்தை நான் முடித்து விடுகிறேன்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்ச ரவர்கள். அமைச்சர் சொல்லிவிடட்டும். அவர்கள் அப் பொழுதிலிருந்து ஏதோ ஒரு கருத்தை உங்களுக்குச் சொல்ல வேண்டும் என்று நினைக்கிறார்.



1992 மே 4]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரேயொரு கருத்தை மட்டும் நான் இங்கே சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு தம்புசாமி அவர்கள் இந்தத் தீர்மானத்தின் மீது என்ன வேண்டுமானாலும் பேசலாம். இந்த அவையினுடைய உரிமையை அடகு வைத் தாலும் பரவாயில்லை என்று கூட அவர் பேசுவதற்கு அவருக்கு உரிமை இருக்கிறது. அன்றைக்கு உமாநாத் பேசினார், அதையே இன்றைக்கும் அவர்கள் தொடர்ந்து பேச வேண்டுமென்ற அவசியமில்லை. நாளுக்கு நாள் மாற்றிக்கொண்டு கூட இருப்பார்கள். எனவே அதைப்பற்றி நாம் இப்பொழுது கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய கேள்வியெல்லாம் அவையின் சார்பாக அவை யினுடைய முன்னவர் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக் கிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கட்சியினுடைய சார்பாகப் பொறுப்பாக இங்கே பேசுகிற பொழுது** பேசுகிறார், அதுவே இந்த அவையி னுடைய உரிமையை மீறியது என்று நான் கருதுகிறேன். எனவே, அதைப்பற்றித் தலைவர் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆகவேதான் சொல்லி விட்டேன். அரசு பற்றி நீங்கள் தெரிவித்த கருத்துக்கள், இந்தத் தீர்மானத்திற்கும் அரசுக்கும் தொடர்பு இல்லாமல் இருக்கின்ற காரணத்தால் அதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கியிருக்கிறேன். இந்தத் தீர்மானத்தின் மீது உங்களுடைய மேலான கருத்துக்கள் ஏதேனும் இருக்குமானால் தெரிவியுங்கள்.

திரு. வே. தம்புசாமி : எனவேதான் இன்று அவை முன்னவர் அவர்கள் கொண்டு வருந்திருக்கிற இந்தத் தீர்மா னத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலே நாங்கள் ஏற்கவில்லை என்பதைத் தெரிவித்து வெளிநடப்பு செய்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(திரு. வே. தம்புசாமி வெளிநடப்புச் செய்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தமிழரசன்.

திரு. சஞ்சய் ராமசாமி : தலைவரவர்களே,........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து இதிலே வேண்டாம். வெளி நடப்புச் செய்கிற உரிமை அவர்களுக்கு உண்டு. (குறுக்கீடு) இதிலே வேண்டாம், (குறுக்கீடு) இதிலே

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1992 மே 4

வேண்டாம். வெளிநடப்பு செய்திருப்பதிலே வேண்டாம். (குறுக்கீடு) சரி திரு. சஞ்சய் ராமசாமி.

திரு. சஞ்சய் ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் தம்புசாமி பேசுகின்றபொழுது, ** என்று சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கியிருக்கிறேன். திரு. சஞ்சய் ராமசாமி, நான் அவைக்குறிப்பிலிருந்து நீக்கியிருக்கிறேன். நீக்கியிருப்பதிலே இந்தப் பிரச்சினை வேண்டாம். திரு. தமிழரசன் அவர்கள். (குறுக்கீடு) நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டேன். திரு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் சார்பாக அவை முன்னவர் டாக்டர் நாவலர் அவர்களால் கொண்டு வரப் பட்டிருக்கிற இந்தத் தீர்மானத்தை இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பிலே நான் வழிமொழிகிறேன்.

நம்முடைய நிர்வாகத்தை நீதி, நிர்வாகம், பாராளுமன்றம் சட்டமன்றம் என்று மூன்றாகப் பிரித்திருக்கிறோம். இதிலே பாராளுமன்றமும், சட்டமன்றமும் ஒரு தனித்துவம் மிக்க அமைப்புகளாக மக்களாட்சியின் தத்துவங்களாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. நீதிமன்ற நிர்வாகத்திலே சட்ட மன்றமும், நாடாளுமன்றமும் தலையிட முடியாது. அதேபோல, சட்டமன்ற, நாடாளுமன்ற நடவடிக்கைகளிலே நீதிமன்றமும் தலையிட முடியாது. இது எல்லாவற்றையும் விட ஒரு தனிச்சிறப்பு என்னவென்றால், நீதிமன்றங்களுக்கோ நிர்வாகத்திற்கோ இல்லாத ஒரு தனிச்சிறப்பு நாடாளுமன்றத் திற்கும், சட்டமன்றத்திற்கும் இருக்கிறது. அது என்னவென் றால், சட்டம் இயற்றுகின்ற பெரும் பொறுப்பு இந்தப் பாராளுமன்றத்திற்கும், சட்டமன்றத்திற்கும்தான் இருக் கிறது. இயற்றப்படுகின்ற சட்டங்களையும், இயற்றப் படுகின்ற அந்தச் சட்டங்களைச் செயல்படுத்துவதிலேயும் அவைகளைக் காப்பதிலேயும்தான் நீதிமன்றத்திற்கும், நிர் வாகத்திற்கும் பங்கு இருக்கிறது. எனவே, சட்டம் இயற்றுகிற பெரும் கடமை இருக்கிற அந்தச் சட்டமன்றத்தை, நாடாளுமன்றத்தை விமர்சிப்பதற்கோ, இந்தச் செயல்பாடுகளிலே தலையிடுவதற்கோ, நீதிமன்றத் திற்கும், நிர்வாகத்திற்கும் எந்தவிதமான உரிமையும் இல்லை.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அதற்றப் பெற்றது.



1992 மே 4] [திரு. செ. கு. தமிழரசன்]

அரசியல் சட்டத்தை எழுதுகிற பொழுது, அரசியல் நிர்ணய சபையிலே அரசியல் சட்டத் தந்தை என்று சொல்லப்படுகிற பாபாசாகேப் அம்பேத்கார் அவர்கள் சொன்னார். பாராளுமன்றம் மிகுந்த போற்றுதலுக்குரிய மன்றமும், சட்டமன்றங்களும் போற்றுதலுக்கும் மிகுந்த மரியாதைக்கும் உரிய ஒரு உச்சமன்றம் ஆகும். இதை விமர்சிப்பது என்பது, இதைக் குறை சொல்வது என்பது ஜனநாயகத்திற்கு விடுகிற சவாலாக இருக்கும். இதன் பேரிலே நம்பிக்கை இழப்பைச் செய்தால் அது ஜன நாயகத்திற்குத் தோல்வியாக இருக்கும். எனவே, பாராளு மன்ற, சட்டமன்ற நடவடிக்கைகளைக் குறை சொல்வதையும், விமர்சிப்பதையும் எந்த அரங்கமும் தவிர்க்க வேண்டும் என்று அவர் Constituent Assembly என்று சொல்லப்படுகின்ற அரசியல் நிர்ணய சபையிலே பலமுறை பேசியிருக்கிறார்கள். எனவே, அப்படிப்பட்ட ஒப்புயர்வற்ற இந்த மன்றத்தின் அதிகாரங்களிலே, இந்த மன்றத்தின் உரிமைகளிலே எவரும் தலையிட முடியாது. நான் ஒன்றை இங்கே சொல்ல விரும்புகின்றேன். நீதி மன்றங்களும், காவல் நிலையங்களும் முதலாளித்துவத்தின் சேவகர்கள் என்று கூட்டத்திற்குக் கூட்டம் முழங்கிய கம்யூனிஸ்ட் கட்சிகள் மக்கள் மன்றத்தை எதிர்த்து, நீதி மன்றத்திற்கு எப்படித் துணை போகிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி.) நீதி மன்றங்களும், காவல் நிலையங்களும் முதலாளித்துவத்தின் சேவகர்கள் என்று சொல்கிற அவர்கள் நீதிமன்றத்திற்கு வால் பிடிப்பது எதற்காக என்று எனக்குப் புரியவில்லை.

முற்பகல் 11-15

நாவலர் அவர்கள் இங்கே மிகத் தெளிவாக நாடாளு மன்றத்திலே 57 முறை உரிமை மீறல் பிரச்சினைகள் வந்திருக்கின்றன என்று சொன்னார்கள். இந்தச் சட்டப் பேரவையிலே எப்படி எல்லாம் உரிமை மீறல் பிரச்சினைகள் வந்திருக்கின்றன என்று சொன்னார்கள். இங்கே அவர்கள் குறிப்பிட்டுக்கூடச் சொன்னார்கள். எங்கள் இயக்கத்தைச் சார்ந்த ஜெகதீஸ்வரி சுந்தரராஜன் என்பவர் இந்த மன்றத்திலே அம்பேத்கார் படம் திறக்கப்பட வேண்டு மென்று ஒரு துண்டு அறிக்கையை வீசியதற்காக 14 நாட்கள் சிறையிலே வைக்கப்பட்டார். அன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழக முதல்வர் கருணாநிதி அவர்களிடம் எவ்வளவோ பேர்கள் எடுத்துச் சொல்லியும் ஒரு பெண்ணைச் சிறையில் வைக்கக்கூடாது என்று சொல்லியும்கூட—அம்பேத்கார் படத்தை இந்தப் பேரவையிலே வைக்க வேண்டும் என்று சொல்லி ஒரு துண்டு அறிக்கையைப் போட்டதற்காக 14 நாட்கள் சிறையில் தள்ளப்பட்டு, ஜாமீன் மறுக்கப்பட்டு, உடல் நலம் குறைந்து, பின்னாலே விடுதலை செய்யப்பட்டார். அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் எல்லாம் நடந்திருக்கின்றன. நான் இங்கே வேறு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

சப்-மேஜிஸ்டிரேட் கோர்ட்டிலே ஒரு வழக்கு இருந்தால் அதற்கு ஒரு தீர்ப்பு வந்தால் முன்சீப் கோர்ட்டுக்குப் போகலாம். முன்சீப் கோர்ட்டிலிருந்து ஹைகோர்ட்டுக்குப் போகலாம். ஹைகோர்ட்டிலிருந்து உச்சநீதிமன்றத்திற்குப் போகலாம். உச்சநீதிமன்றத்திலே ஏதாவது பிரச்சினை வந்தால் பெஞ்சுக்குப் போகலாம். எல்லா நீதிமன்றங்களிலும் மேல்முறையீடு என்கிற போது விசாரித்துத்தான் நடவடிக்கை எடுப்பார்கள். தண்டனையைக் குறைப்பதோ அல்லது அதிகப்படுத்துவதோ. அதற்குப் பிறகும் ஒரு கொலையாளியைக் கூட விடுதலை செய்யக்கூடிய உரிமை குடியரசுத் தலைவருக்கு—ஜனாதிபதிக்கு இருக்கிறது. எந்த விசாரணையும் இல்லாமல் அவர் நினைத்தால் விடுதலை செய்யலாம். அந்த உரிமை என்று வருகிற பொழுது—உரிமை எப்படி வருகிறது என்று சொன்னால் அவர் மக்களாட்சியின் தலைவராக இருப்பதனால், முதல் குடிமகனாக இருப்பதனால் அவர் விசாரணை இல்லாமலேயே விடுதலை செய்வதற்கு உரிமை இருக்கிறது. நம்முடைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் கூட அண்ணா பிறந்த நாளின் போது, சுதந்திரத் திருநாளின் போது, மற்ற தலைவர்கள் பிறந்த நாளின் போது பல ஆயுள் தண்டனைக் கைதிகளுடைய தண்டனைக் காலத்தைக் குறைத்திருக்கிறார்கள். எந்த அதிகாரத்திலே அவ்வாறு குறைக்கிறார். நீதிமன்றத்திலே தீர்ப்பு வந்திருக்கிறது. அவர்களுக்கு ஆயுள் தண்டனை இருக்கிறது. அந்த ஆயுள் தண்டனையை நம்முடைய முதல்வர் அவர்கள் வந்துகூட, இப்போது கடந்த சுதந்திர தின விழாவின்போது, அண்ணா பிறந்த நாள் விழாவின்போது குறைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எந்த அதிகாரத்திலே குறைத்தார்கள். ஆக தண்டனையைக் குறைக்கிற அதிகாரம் இருக்கிற இந்த அமைப்புக்கும், இந்த அமைப்பின் தலைவருக்கும் தண்டனை வழங்குவதற்கு அதிகாரம் இல்லை என்று சொல்வது என்ன நியாயம்? ஆயுள் தண்டனையைக் குறைக்கிற அதிகாரம் இந்த அமைப்புக்கு, இந்த அமைப்பின் தலைவருக்கு இந்த அவைக்கு, தண்டனை வழங்குவதற்கு அதிகாரம் இல்லை என்று சொல்லி விட முடியாது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

சுதந்திரம் என்று சொல்லுகிறார். சுதந்திரம் எதற்கு? மஞ்சள் பத்திரிகையிலே எழுதுவதற்கா? கடந்த வாரம் என்னைப் பற்றி தினப்புரட்சி பத்திரிகையிலே ஒரு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் என்னை அடித்துவிட்டார் என்று எழுதப்பட்டிருக்கிறது. என்னுடைய சமுதாய மக்களை எனக்கு எதிராகத் தூண்டி ஊட வேண்டும் என்பதற்காக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்ற உறுப்பினர் என்னை அடித்தார், உதைத்தார்—அடி, உதை, இந்தியக் குடியரசுக் கட்சி எம். எல். ஏ.—வுக்கு அடி, உதை என்ற பெரிய தலைப்போடு எழுதியிருக்கிறார்கள். முழுவதும் உண்மைக்கு மாறாக எழுதியிருக்கிறார்கள். இப்படி எழுதுவதற்குதான் அதிகாரம்.





சுதந்திரத்தைப் பற்றி முதல் முதலில் இலக்கணம் சொன்ன 'பிளேட்டோ' குடியரசு என்ற தலைப்பில் மிகப் பெரிய நூலை எழுதினார். பிளேட்டோவினுடைய அவையிலே ஒருமுறை ஒரு பிரச்சினை வந்தது. சுதந்திரம் என்றால் என்ன? என்ற ஒரு கேள்வி எழுந்தது. ஒரு மாணவன் சொன்னான். சுதந்திரம் என்பது எல்லோருக்கும் இருக்கிறது. எழுதுவதற்கு, பேசுவதற்கு, செயல்படுவதற்கு, தீர்ப்பு வழங்குவதற்குச் சுதந்திரம் இருக்கிறது என்று சொன்னான். இன்னொரு மாணவன் கேட்டான். அப்படியானால் ஒரு கொலையாளி கத்தி வைத்துக் கொள்வதற்கு உரிமை இருக்கிறதா என்று கேட்டான். அடுத்த மாணவன் அது எப்படி வைத்துக் கொள்ள முடியும் என்று சொன்னான். கடைசியிலே பிளேட்டோ சொன்னார். ஒவ்வொருவருக்கும் சுதந்திரம் இருக்கிறது. அதை அவன் கையில் இருக்கிற வரை இருக்கிறது. அடுத்தவன்மேல் இவன் கைவிழுந்தால் அவன் சுதந்திரம் போகிறது. சுதந்திரம் என்பதே அவன் கைக்கு எட்டியவரை என்று மிக அழகாகச் சொன்னார். ஒரு மனிதனுடைய சுதந்திரம் எதுவரையில் இருக்கிறது என்று சொன்னால் அடுத்தவனுடைய சுதந்திரத்திலே தலையிடாத வரை இருக்கிறது. அதுதான் சுதந்திரத்திற்கு இலக்கணம். வரையறையே இல்லாமல் யாரைப் பற்றி வேண்டுமானாலும் எழுதலாம். எதைப்பற்றி வேண்டுமானாலும் எழுதலாம். அவர்கள் விருப்பத்திற்கு, வியாபாரத்திற்கு எழுதுவோம் என்று சொன்னால் அதற்குப் பெயர் சுதந்திரம் என்று எப்படிச் சொல்ல முடியும்?

முற்பகல் 11-20

இன்னொரு முறை சுதந்திரம் பற்றி இலக்கணம் சொல்கிறபோது ஒரு அறிஞன் சொன்னான், பெரும்பான்மைக்குப் பெயர்தான் சுதந்திரம் என்று. இந்த மாநிலத்தில் மதுவிலக்கு இன்றைக்குத் தடை செய்யப்பட்டிருக்கிறது. இது இங்கே குற்றம் என்றால் பக்கத்திலே அதைத் தடை செய்யாமல் இருக்கலாம். அங்கே அது நியாயமாக இருக்கலாம். இன்னொரு மாநிலத்தில் கடைகள் திறக்கப்பட்டிருக்கலாம். ஆகவே அங்கே ஒரு நியாயம் இங்கே ஒரு நீதி இருக்கிறது என்றால் பெரும்பான்மையின் மறு பெயர்தான் சுதந்திரம், நீதி என்று இன்னொரு அறிஞன் சொன்னான். ஆக மக்கள் மன்றம் இருக்கிறதே அது பெரும்பான்மையின் சின்னமாகவே விளங்கிக் கொண்டிருக்கிற மன்றம். இந்த மன்றத்தினுடைய இந்த ஏகோபித்த முடிவை, இந்த அவையின் முடிவை நாம் நீதியாக, சுதந்திரமாக, சட்டமாக ஏற்றுக்கொள்வதுதான் மரபு. எந்த வகையிலே பார்த்தாலும், மரபு என்று சொன்னாலும் சரி, பெரும்பான்மை என்று சொன்னாலும் சரி,

[திரு. செ. கு. தமிழரசன்] [1992 மே 4

நீதி என்று சொன்னாலும் சரி, எல்லா வகையிலும் இந்த அவைக்கு இருக்கிற சுதந்திரம் காப்பாற்றப்பட வேண்டும். எனவே அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பிலே நான் மனப்பூர்வமாக வரவேற்று வழிமொழிந்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையினுடைய . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் உறுப்பினர்களைப் பார்த்து அவ்வப்போது பேசிக் கொண்டிருக்கக்கூடாது. என்னைப் பார்த்துப் பேச வேண்டும்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பேரவையினுடைய முன்னவர் அவர்கள் கொண்டுவந்த இன்றைக்கு நீதிமன்றத்திலிருந்து, பேரவையினுடைய செயலாளர் அவர்களுக்கு, விளக்கம் அளிக்க வேண்டும் என்பதற்காக அனுப்பப்பட்டிருக்கிற உத்தரவை மறுக்கிற இந்தத் தீர்மானத்தின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்தை கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன். தொடர்ந்து சில பத்திரிகைகள் பொறுப்பற்ற தன்மையில் எழுதுகிறார்கள் என்பதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிற உரிமை மீறல் பிரச்சினை, இன்றைக்கு தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியா முழுமையும் பூதாகரமாகக் கிளப்பப்பட்டிருக்கிறது. அதோடு மட்டுமல்ல (குறுக்கீடு) இந்தியாவில் இருக்கிற எல்லா பத்திரிகைகளும் (குறுக்கீடு) தமிழக அரசு இதைக் கொண்டு வர வேண்டும் என்பது சரிதானா என்பதை (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பழனிசாமி அவர்களுக்குத் தெரிவிக்கிறேன். இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பது அவை முன்னவரே தவிர அரசு அல்ல, எனவே நீங்கள் இதைத் தமிழக அரசு கொண்டு வருவதற்கு முன்னர் என்று ஆரம்பிக்கிறபோதே அதாவது திரு. தம்புசாமி அவர்கள் பேசுகிறபோதே சொன்னேன், நீங்கள் இந்தப் பேரவை எடுத்திருக்கிற முடிவை, இந்தப் பேரவையின் சார்பில் இந்த பேரவையினுடைய தனித் தன்மையைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக அவை முன்னவர் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறீர்கள் அல்லது எதிர்க்கிறீர்கள் என்பதைத்தான் சொல்வதற்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, அரசின் மீது விமர்சனம் சொல்வதற்கோ, இந்தத் தீர்மானத்திற்கு அப்பாற்பட்ட விஷயங்களைப் பேசுவதற்கோ வழியில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1992 மே 4]

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தியா முழுமையும் பூதாகரமாக பத்திரிகைகள் முழுமையும் (குறுக்கீடு) இன்றைக்கு பல்வேறு கண்டனங்கள் தெரிவிக்கப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நாங்கள் சொல்வதெல்லாம் இந்தப் பிரச்சினையை நம்முடைய இந்தப் பேரவை அனேகமாக ஒரு 15 தினங்களாக நீண்டதொரு விவாதமாகப் பேசி இந்தச் சபையின் நேரங்களை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

தமிழகத்தினுடைய மக்களின் பல்வேறு பிரச்சினைகளில் நாம் விவாதித்து அவர்களுடைய வாழ்க்கைப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு பதிலாக (குறுக்கீடு) இன்றைக்கு இந்த உரிமைப் பிரச்சினை மீது. . . .

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள். திரு. பழனிசாமி, திரு. தம்புசாமி போன்றவர்களுக்கு வெளியே சில நிர்பந்தங்கள் இருக்கின்றன என்பதை நாங்கள் நன்றாகவே அறிவோம். எங்களுக்குப் புரிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எப்படியோ இந்த அரசைக் குறை சொல்ல வேண்டும் என்று பேசிக் கொண்டே அவர்கள் முன்னேற்பாடாக இங்கே வந்து இருக்கிறார்கள் என்பதும் புரிகிறது. இன்று இந்தியா முழுமையிலும் இந்தப் பிரச்சினை பூதாகரமாகக் கிளப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் இங்கே சொன்னார்கள். இன்று இந்தியா முழுமையிலும் உள்ள பத்திரிகைகளில் சில பத்திரிகையாளர்கள் சங்கங்கள்தான் இதைப் பூதாகரமாகக் கிளப்பி இருக்கிறார்கள் என்பதையும், இந்த அரசு அல்ல என்பதையும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து மக்கள் பிரச்சினைகள் எத்தனையோ இருக்கிறபோது இந்தப் பிரச்சினையை விவாதிப்பதற்காக அவையின் நேரத்தை வீணாக்குவதா என்ற கேள்வியையும் இங்கே எழுப்பினார்கள். ஏறத்தாழ இரண்டு மாத காலம் மக்கள் பிரச்சினையை அலசி ஆராய்ந்து அவற்றுக்கு தீர்வு காணத்தான் இந்த அவை கூடியது. இன்றையதினம் கூட்டப்பட்டிருக்கின்ற இந்த கூட்டம் ஒரு விஷேச கூட்டம், ஒரு 'எக்ஸ்ட்ரா ஆர்டினரி மீட்டிங்' இந்தக் கூட்டத்தினுடைய நோக்கமே, சுப்ரீம் கோர்ட்டிலிருந்து இந்தப் பேரவையின் செயலாளரை அங்கே ஆஜர்படுத்த வேண்டும் என்று ஒரு உத்தரவு வந்திருக்கிறது. அதை ஏற்பதா வேண்டாமா என்பதை முடிவு செய்யத்தான் இந்தக் கூட்டமே கூட்டப்பட்டு இருக்கிறது. வேறு பொருளை விவாதிப்பதற்காக அல்ல. எனவே, அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தின்

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1992 மே 4

மீது மட்டும் உறுப்பினர் அவர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்தால் அது பொருத்தமாக இருக்கும் என்பதை மட்டும் சொல்லிக் கொள்கிறேன்.

முற்பகல் 11-25

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறும்போது, வெளியிலே எங்களுக்கு ஏதோ ஒரு நிர்பந்தம் வந்திருப்பதாக கூறினார்கள். எந்த ஒரு நிர்பந்தத்திற்கும் நாங்கள் ஆட்பட்ட வர்கள் அல்ல. யாருடைய நிர்பந்தத்திற்கும், நாங்கள் அடிமைகள் இல்லை. எங்களுக்கு என்று தனிக் கொள்கை இருக்கிறது. சித்தாந்தம் இருக்கின்றது. அதைக் கொண்டு செயல்படமுடியும் என்பதனை நான் இந்த சந்தர்ப்பத்திலே கூறிக் கொள்கிறேன்.

இன்றைக்கு பல்வேறு சட்டமுன் வடிவுகளை எடுக்கக்கூடியது தான் நாடாளுமன்றமும், சட்டமன்றமும், மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கு. தமிழரசன் அவர்கள்கூட கூறினார்கள். நாடாளு மன்றமும், சட்டமன்றமும் இந்த சபையிலே எடுக்கக்கூடிய தீர்மானங்களை நீதிமன்றம் நடைமுறைப்படுத்துகிறது என்று சொன்னார். இந்த சபையிலே எடுக்கக்கூடிய சட்டமுன்வடிவு களை ஏற்றுக்கொண்டிருக்கின்றது நாடாளுமன்றம். சட்ட மன்றம் மறுப்பதற்கு என்ன நியாயம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். அப்படி என்று சொன்னால், அதை அவர்கள் மறுக்கிறாரா, அதை தெளிவாக சொல்ல வேண்டும். நான் மறுக்கவில்லை. இன்னொன்றும் சொன்னார்கள். (குறுக்கீடு) நான் சொல்கிறேன். என்னைப் பேசவிடுங்கள். என்னைப் பேச விடமாட்டேன் என்கிறீர்கள். என்னுடைய சிந்தனையை வேறு கவனத்திற்குக் கொண்டு போகக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. கவனத்தைத் திருப்பவில்லை.

திரு. ஜி. பழனிசாமி : பேச வேண்டாம் என்று சொல்லி விடுங்கள். நான் பேசவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து, வேறு திசையிலே நீங்கள் திருப்பிக்கொண்டு பேசுகிறபோதுதான் விவ காரமே வருகிறது. நீங்கள் இந்தத் தீர்மானத்தின் மீது மட்டும் உங்களுடைய கருத்துக்களைச் சொன்னால், பிரச்சினையில்லை. (குறுக்கீடு) அதற்குப் பதில் சொல்லுங்கள்.



1992 மே 4]

திரு. ஜி. பழனிசாமி : அவர் சொல்வது ரெக்கார்ட் ஆகிறது. நான் சொல்வது ரெக்கார்ட் ஆகிறதில்லையா? என்ன இது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்குப் பதில் சொல்லுங் கள். இல்லை. நீங்கள் சொல்லுங்கள், திரு. செ. கு. தமிழரசன் பேசினதற்கு (குறுக்கீடு).

திரு. ஜி. பழனிசாமி : தமிழரசன் பேசினதற்கு நான் பதில் கூறுவதா இல்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அதற்குப் பதில் சொல்லுங்கள். அதற்குப் பதில் சொல்வதை விட்டுவிட்டு வேறு எங்கேயோ ஏன் போகிறீர்கள்? அதற்குப் பதில் சொல்லுங்கள். தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு). திரு. பண்ருட்டியார் அவர்கள் உட்காருங்கள். அவர் பேசிக்கொண்டு இருக்கின்றார். அவருக்குப் பதில் சொல்ல நான் வாய்ப்பு அளிக்கிறேன். சரி அதற்குப் பதில் சொல்லுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. செ. கு. தமிழரசன் அவர்கள் கூறுகிறபோது இன்னொன்றை சொன்னார்கள். அரசாங்கத்தினுடைய ஏவு கணையாக நீதிமன்றத்தையும் காவல் துறையையும் அரசாங்கம் ஏவுகிறது என்று கம்யூனிஸ்ட் கட்சியினர் கூறுகிறார்கள் என் றெல்லாம் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசாங்கம் ஏவுகிறது என்று அவர் சொல்லவே இல்லை. (குறுக்கீடு) அவர் சொன் னதை நீங்கள் அப்படியே ரிப்பீட் பண்ணினால் பரவாயில்லை. அவர் சொல்லாததை நீங்கள் சொல்கிறபோதுதான் பிரச்சினை வருகிறது. திரு. தமிழரசன். அவரே சொல்வார் திரும்பவும். தயவுசெய்து அமருங்கள். திரு. தமிழரசன் அவர்களே சொல் வார், அவர் என்ன சொன்னார் என்று. அதைக் கேட்டுச் சொல்லுங்கள். அவர் பேசுகிறபோது அரசாங்கத்தின் ஏவு கணையாக நீதிமன்றம் இருக்கின்றது என்ற சொற்றொடரைப் பயன்படுத்தவே இல்லை. அவர் பேசாததை நீங்கள் பேசக் கூடாது. அவர் பேசியது என்ன என்று உங்களுக்குச் சொல்வார். அதற்குப் பிறகு அதற்கு மட்டும் பதில் சொல்லுங்கள்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிடாத ஒரு கருத்தை சொன்னதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள் பேசு கிறார். நான் சொன்னது நீதிமன்றத்திற்கும் நிர்வாகத் துறைக்கும் இல்லாத ஒரு சிறப்பு அதிகாரம் நாடாளுமன்றத் திற்கும் சட்டமன்றத்திற்கும் இருக்கிறது. அது என்னவென்றால், சட்டம் இயற்றுகிற அதிகாரம். இந்த நாடாளுமன்றத்திற்கும்

சட்டமன்றத்திற்கும்தான் இருக்கிறது என்று சொன்னேன். அதை விட, நீதிமன்றத்தை விட, நிர்வாகத் துறையை விட ஒரு தனித்துவம் சிறப்பு அதிகாரம் இந்த மாமன்றத்திற்கு இருக்கிறது என்பதைத்தான் நான் சொன்னேனே தவிர, சேவகர்களாகவும், ஏவலர்களாகவும் நீதிமன்றமும் நிர்வாகமும் செயல்படவேண்டும் என்ற கருத்தை நான் சொல்லவில்லை.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் பேசவிடுங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை. நீங்கள் அவர் பேசாததைப் பேசினார் என்று நீங்கள் சொல்வதற்கு உரிமை இருக்கிறது என்கிறீர்கள். அவர் பேசாததைப் பேசினார் என்று சொல்லி அது ரிக்கார்ட் ஆக விட்டு பிறகு நான் பதில் சொல்கிறேன் என்று சொன்னால் அதற்குப் என்ன அர்த்தம்?

முற்பகல் 11-30

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக்கூட்ட மேடைகளிலே கம்யூனிஸ்ட்டுகள் நீதி மன்றங்களும், காவல் நிலையங்களும் முதலாளித்துவத்தின் சேவகர்கள் என்று பேசி வருகிறார்கள் என்றுதான் சொன்னேன். அது சரியா இல்லையா? (குறுக்கீடுகள்)

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்யூனிஸ்ட் கட்சி ஒருபோதும் நீதி மன்றங்களைப் பற்றி அவ்வளவு குறைத்து மதிப்பிடுவதில்லை. ஏன் என்று சொன்னால் உறுப்பினர் பேச்சிலேயே அவருடைய கேள்வியும் பதிலும் அடங்கியிருக்கிறது. சட்டமன்றமோ, நாடாளுமன்றமோ இயற்றுகிற சட்டங்களை, நம்முடைய சபை மதிக்கிறதா மதிக்கவில்லையா இது தான் இன்றைக்கு இருக்கிற கேள்வி. அதற்கு அவர் சரியாக பதில் சொல்ல வேண்டும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமுன்வடிவுகள் அரசு கொண்டு வருவது. இது பேரவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற பேரவையின் தீர்மானம். நீங்கள் இரண்டையும் போட்டுக் குழப்புகிறீர்கள். அதாவது நீங்கள் எதையோ நினைத்துக் கொண்டு இந்த சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தை இழுக்கிற காரணத்தாலேதான் விவாதம் எங்கோ போய்க் கொண்டிருக்கிறது. உங்களுடைய (குறுக்கீடுகள்) தயவுசெய்து நீங்கள் இந்தத் தீர்மானத்தின்மீது பேச வேண்டும். அவர் பேசாததைப் பேசியதாகக் குறிப்பிட்டுப்



பேசுகிறீர்கள். இதற்குச் சம்பந்தம் இல்லாமல் பேசுகிறீர்கள். அரசாங்கம் கொண்டு வந்த சட்ட முன்வடிவுகள் நிறைவேற்றப்பட்டுச் சட்டம் ஆகிறது. சட்டமுன்வடிவுகளைப் போன்றவை அல்ல இந்தத் தீர்மானம். (குறுக்கீடுகள்) திரு. பி. வி. இராஜேந்திரன்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அரசியல் அமைப்புச் சட்டம்—Third Schedule, Form VII-B—ன்படிதான் நாம் எல்லோரும், சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் பதவிப் பிரமாணம் உறுதிமொழி எடுத்திருக்கின்றோம். அதனுடைய கடைசி வரிகள் "....I will faithfully discharge the duty upon which I am about to enter" என்று சொல்லித் தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் உறுதிமொழி எடுத்திருக்கிறார்கள். நம்முடைய கடமைகளை நிறைவேற்ற, நாம் நடவடிக்கைகளை எடுக்கின்ற ஒரே இடம், இந்த ஃபாரம் தான். சட்டமன்ற லெஜிஸ்லேட்டிவ் பாடி தான் இங்கே இருக்கிறது. இன்றைக்கு இருக்கின்ற சவால்களை இதனுடைய உரிமைகள் நீதிமன்றத்தினுடைய உரிமைகள் இவற்றில் எதன்மீது எது ஆக்கிரமிப்பு செய்திருக்கிறது என்பதுதான். அதிலே நம்முடைய உரிமையை விட்டுக் கொடுக்க தயாராக உறுப்பினர் இருக்கிறாரா? இதை ஒரே வரியில் சொல்லி முடிக்கலாமே.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது இந்தப் பேரவை பற்றிய உரிமைப் பிரச்சினை. ஆகவே, இந்தப் பேரவையினுடைய உரிமை காப்பாற்றப்பட வேண்டும் என்றுதான் இங்கே தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தப் பேரவையினுடைய விதிமுறைகளில் அவைத் தலைவர் அவர்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கியப் பகுதிகள் வெளியிடப்படக் கூடாது என்பது விதி. வெளியிடலாம் என்கிறீர்களா? நடக்காததை நடந்ததாக சொல்வது, வெளியிடுவது, திருத்தி வெளியிடுவது தவறு என்று விதி சொல்கிறது. அப்படிசெய்யலாம், திருத்தலாம் என்கிறீர்களா? மூன்றாவதாக நடக்க முடியாத ஒன்றை, நடந்ததாக எழுதுகின்றபொழுது நடந்திருக்க முடியாதே என்று காரிய காரணங்களை எடுத்துச் சொன்னதற்குப் பிறகும் நடந்தது தான் என்று எழுதுவதைச் சரி என்கிறீர்களா? சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடுத்தார்கள் என்றால் இந்தியாவில் இருக்கிற எல்லா சட்டமன்றங்களும் மறுத்திருக்கும்போது, நாடாளுமன்றம் மறுத்திருக்கும்போது, நாடாளுமன்ற பேரவைத் தலைவர் அவர்களோ மறுத்திருக்கும் போது, மீறி யாராவது அப்படி

உச்சநீதி மன்றத்திற்கு போவீர்களானால் அவர்கள்மீதே நான் உரிமைப் பிரச்சினை எழுப்புவேன் என்று சொல்லியிருக்கும்போது உச்சநீதிமன்றம் சட்டமன்றத்திற்கு நோட்டீஸ் அனுப்பலாம் என்கிறீர்களா? அதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் என்கிறீர்களா? செயலாளரை அங்கே அனுப்பி வைக்கத்தான் வேண்டும் என்கிறீர்களா? இதற்கு மட்டும் பதிலை சொன்னால் போதும். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னொன்றையும் உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்களுடைய கவனத்திற்குச் சொன்னதைப்போல சொல்கிறேன். இதே பேரவையில் காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் திரு. லாசர் 1960-வது ஆண்டு ஒரு கருத்தைத் தெரிவித்தார் என்பதற்காக, அதன் காரணமாக என்னுடைய தொழில் நிறுவனம் பாதிக்கப்பட்டது என்று சொல்லி ஒருவர் உயர் நீதிமன்றத்திற்குச் சென்றார். காங்கிரஸ் உறுப்பினர் இங்கே பேசியது, உயர்நீதிமன்றத்திற்குச் சென்ற அந்த பிரச்சினை என்பது இந்த அவை உரிமை மீறல் பிரச்சினை என்று இங்கே தீர்மானத்தை முன்மொழிந்து திரு. லாசர் அவர்கள் உயர்நீதிமன்றத்தில் ஆஜராகக்கூடாது என்று வாதாடியவர் உங்களுடைய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய முதுபெரும் தலைவராக இருந்த திரு. கல்யாணசுந்தரம் என்பதை உங்களுடைய நினைவுக்கும் இப்போது கொண்டுவருகிறேன். எனவே, உங்களுடைய கட்சியினுடைய கொள்கையாக இருக்க வேண்டுமென்று சொன்னால், திரு. உமாநாத் அவர்கள் எடுத்து வைத்து வாதிட்டது போல, மிக விரிவாக ஒரு காங்கிரஸ் உறுப்பினருக்காக இங்கே வாதாடிய உங்கள் தலைவர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் பேசியதாகத்தான் இருக்க வேண்டும். வேறு வழியில் இங்கே ஏதாவது சொல்வீர்களானால் அது வேறு நிர்பந்தமாகத்தான் இருக்க முடியும். வேறு வழியில்லை.

முற்பகல் 11-35

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையினுடைய முன்னவர் அவர்கள் இங்கே 2 கேள்விகளை வைத்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் 4 கேள்விகளை வைத்தார்கள் என்று சொல்லுகிறார்கள்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிக் குறுக்கிட்டால் நல்லதல்ல. (குறுக்கீடுகள்)





மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் 4 கேள்விகள் கேட்டார்கள். நீங்கள் 2 என்று சொல்லுகிறீர்கள். (குறுக்கீடுகள்).

திரு. ஜி. பழனிசாமி: இதுவே உரிமை மீறல். ஓர் உறுப்பினர் பேசும்போது அவருடைய பேச்சுரிமையை பறிப்பது என்றால் எப்படி? (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள்தான் மற்ற உறுப்பினர்களுடைய உரிமையை எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். பேரவை முன்னவர் அவர்கள் உங்களிடம் 4 கேள்விகள் கேட்டார்கள். 2 கேள்விகள்தான் கேட்டார்கள் என்று சொன்னால் அவருடைய உரிமையை நீங்கள் எடுத்துக் கொள்கிறீர்கள் என்றுதான் பொருள். மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது உறுப்பினர்களுடைய உரிமையை பாதிக்கும் அளவுக்கு இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். நீங்கள் எந்தக் கருத்தை வேண்டுமானாலும் இங்கே சொல்லிவிட்டுப் போகலாம் என்று சொல்லும்போது, அதற்கு நாங்களும் எங்கள் கருத்துக்களைச் சொல்வதற்கு எங்களுக்கும் உரிமை இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். உங்களுடைய கொள்கைகளைச் சொல்லுங்கள் என்றுதான் கேட்டார்கள். உங்களுடைய தலைவர்கள் விட்டுச் சென்ற கொள்கைகளை நீங்கள் கடைப்பிடிக்கிறீர்களா அல்லது யார் யாரோ வெளியிலிருந்து சொல்கிற கொள்கைகளை நீங்கள் கடைப்பிடிக்கிறீர்களா என்பதைத்தான் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவைக்கு முழுப் பேச்சுரிமை உண்டு. அந்தப் பேச்சுரிமையில் தலையிடுவதற்கு இந்தியாவில் இருக்கும் எந்த ஒரு அமைப்புக்கும், எந்த ஒரு தனி மனிதனுக்கும், எந்த ஒரு நீதி மன்றத்திற்கும் உரிமையில்லை என்பதுதான் இப்போது நம்முடைய பிரச்சினையே. ஆனால் இங்கே இருக்கிறது முழுப் பேச்சுரிமை. ...ன்றாலும், நமக்கு

நாமே வரையறுத்துக் கொண்டுள்ள சில கட்டுப்பாட்டுக்குள் தான் பேச வேண்டுமே தவிர, நாம் வரையறுத்துள்ள விதி முறைகளுக்கு உட்பட்டுதான் பேச்சுரிமை இருக்க வேண்டுமே தவிர, அதை மீறிய வகையில் பேச்சு உரிமை என்பது இல்லை. அதற்காகத்தான் இங்கே அரசியல் அமைப்புச் சட்டம் தந்த உரிமைகளின் அடிப்படையில் விதிமுறைகளை வகுத்திருக்கிறோம். அப்படி நாம் அதை வகுத்து, நாமே ஏற்றுக்கொண்டு, இங்கே நடைமுறைப்படுத்துகின்ற வகையிலேதான் இருக்கிறோம். ஆகவே தான் வரையறைக்குட்பட்டு பேச வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஆணையிடுகிறார்கள். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் பேசட்டும். அவர் பேசிய பிறகு உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். திரு. ஜி. பழனி சாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையினுடைய முன்னவர் அவர்கள், மரியாதைக் குரிய நாவலர் அவர்கள் அன்றையதினம் என்று சொல்கிற போது, நாடாளுமன்றத்தில் புபேஷ் குப்தா அவர்கள் கொண்டு வந்த உரிமை மீறல் பிரச்சினையைக் குறிப்பிட்டார்கள். இன் றையதினம் மறைந்த மரியாதைக்குரிய எம். கல்யாணசுந்தரம் அவர்கள் அன்று கொண்டு வந்த உரிமை மீறல் பிரச்சினையை யும் நினைவுபடுத்தினார்கள். நாங்கள் உரிமை மீறல் பிரச்சினை பற்றி மட்டும் கொடுக்கவில்லை, அந்தப் பத்திரிகைகள் உரிமை பற்றியும் பேசியிருக்கிறோம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தில் உரிமை பிரச்சினை பற்றி மட்டும்தான் சொல்லுகிறார்கள். நாடாளு மன்றத்தில், மரியாதைக்குரிய மறைந்த முன்னாள் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களுடைய கணவர் திரு. பெரோஸ் காந்தி அவர்களுடைய இனிய நண்பர் புபேஷ் குப்தா. பத்திரிகை உரிமைக்காக 75 நிமிடங்கள் பேசியது இன்றும் பாராளு மன்ற நடவடிக்கைக் குறிப்பிலே இருக்கிறது. அதை எல்லாம் சொல்ல மாட்டேன் என்கிறார்கள். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.

*மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித் துறை மானியத்தின் போது நான்கூட ஒரு மணி நேரம் பேசினேன். அதற்காக இப்போது அது பற்றி பேசிக் கொண்டிருக்க முடியுமா?





இப்போது அவை முன்னாலே என்ன தீர்மானம் வந்திருக்கிறதோ அந்தத் தீர்மானத்தின் மீது பேசுவதுதான் முறை. (மேசை யைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பீட்டர் அல்போன்ஸ்.

*திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2 மாதங்களாக இந்தச் சட்ட மன்றத்திலே உட்கார்ந்து, அனேக விவாதங்களிலே பங்குகொண்டு ஊருக்குத் திரும்பிய நாங்கள் எல்லோரும் இன்று உங்களுடைய அழைப்பை ஏற்று திரும்ப வந்திருக்கிறோம். 2 நாட்கள் தொகு தியில் இருந்து பணியாற்ற வேண்டுமென்று நினைத்தாலும் கூட நீங்கள் அழைத்த காரியம் முக்கியமான காரியம். நாம் எவ்வளவு வரலாற்றுப் புகழ் மிக்க தீர்மானத்திலே பங்கு கொண்டிருக்கிறோம்.

முற்பகல் 11-40

இன்றையதினம் மரியாதைக்குரிய நமது அவை முன்னவர் நாவலர் அவர்கள் அநேக மேற்கோள்களை, முன்னுதாரணங் களைக் காண்பித்தார்கள். அதேபோல், இன்னும் 25 ஆண்டு களுக்கு பின்பு இந்த மன்றத்தில் இருப்பவர்கள் நாம் இப்போது பேசுகின்ற ஒவ்வொரு வார்த்தைகளையும் மீண்டும் மேற் கோள் காட்டுவார்கள். அப்படிக் காட்டக்கூடிய சரித்திரம் மீண்டும் திரும்பும். அப்படி ஒரு முக்கியமான தீர்மானத்தின் மீது பேசுகின்றபோது, சிலபேர் அரசியல் ஆதாயம் பெற நினைக் கிறார்கள். அதை நாம் தடுத்துவிடமுடியாது. அவைக்குள்ளும் சரி, அவைக்கு வெளியிலும் சரி, ஏதோ உச்சநீதிமன்றத் தின் மீது பெரிய வெறுப்பை நாம் சம்பாதித்துக் கொண்டிருப் பதைப் போலவும், இந்த மன்றம் அவர்களோடு ஒரு முரண் பாடான நிலையை எடுத்துக் கொண்டிருப்பதைப் போலவும் காண்பிக்கக்கூடிய சில அரசியல்வாதிகள் இந்த மன்றத்திற்கு வெளியில் இருக்கிறார்கள். நாம் இந்த அவையின் உரிமை களைப் பற்றி தீர்மானித்துக் கொண்டு இருக்கிறோம். ஒருவர் எழுதுகிறார், நாளைக்கு காவிரிப் பிரச்சினையில் சுப்ரீம் கோர்ட் என்ன சொல்லும் என்று. இப்போதே தமிழகத்திற்கு விரோதமான ஒரு நிலையை மேற் கொள்ளவேண்டுமென்று சுப்ரீம்கோர்ட்டுக்கு அறிவுறுத்துவதைப்போல ஒரு செய்தித் தொகுப்பு வெளியில் வருகிறது. அவர்கள் வெளியில் இருக்கி றார்கள். அவர்கள் தாளம் கொட்டும் மாமியார்கள், உள்ளே இவர்கள் அவர்களுக்கு மேளம் கொட்டும் மாப்பிள்ளைகள். எனவேதான் இந்தத் தீர்மானத்தைப் பற்றி மிக ஆழமாக விவாதிக்க வேண்டிய பொறுப்பு இந்த அவையில் இருக்கிற ஒவ்வொரு உறுப்பினருக்கும் உண்டு. இந்தத் தீர்மானத் திலே, We are with the spirit of the resolution

எங்களைப் போன்ற ஆரம்பகால உறுப்பினர்கள் இன்னும் அநேக தகவல்களை மாண்புமிகு அவை முன்னவர் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம். இந்தத் தீர்மானத்திலே கூட, யாரையும் பாதிக்காத வகையில், விளக்கங்களையோ தகவல்களையோ அறிந்துகொள்ள விரும்பினால், அவற்றை அரசு வழக்கறிஞர் மூலம் தெரிவிக்க இந்தப் பேரவை ஆயத்தமாக இருக்கிறது என்று தீர்மானம் போட்டிருக்கிறீர்கள். எங்களுக்கு என்ன சந்தேகம் என்று சொன்னால், இந்த வழக்கறிஞர்கள் யாருடைய வழக்கறிஞர்களாக உச்சநீதிமன்றத்தில் இருப்பார்கள்? One file memo of appearance on behalf of whom? Whether he will file memo of appearance on behalf of Secretary or on behalf of the House or on behalf of the Speaker.

இரண்டாவது விளக்கங்களைக் கொடுக்கிறபோது, we will become a party to the adjudication. நாம் டிஸ்பியூட்டுக்கு ஒரு பார்ட்டியாக ஆகிவிடுகிறோம் உச்ச நீதிமன்றத்திலே. அப்போது மறுத்துப் பேசுகிறோம், எதிர்த்துப் பேசுகிறோம் என்று சொன்னால், நாம் அதை ஏற்றுக்கொண்டால்தான் அந்த உச்சநீதிமன்றத்திற்குப் போக முடியும். ஆகவே அப்படிப்பட்ட ஒரு தீர்மானம் எப்போது போட்டிருக்கிறோமோ, நாம் அதைப்பற்றி விவாதிப்பதற்கு அது விரோதமாக இது இருக்குமல்லவா? எனவே நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால், இந்த சுப்ரீம்கோர்ட்—if the Supreme Court sends a Commissioner to the House and inspect the records —ஆவணங்களை மட்டும் தாக்கல் செய்யக்கூடிய பொறுப்பை ஏற்றுக்கொள்வதுதான் சரியாக இருக்கும் என்று நான் எண்ணுகிறேன். தகவல்களையோ, விளக்கங்களையோ நாம் சொல்வதற்கு அரசு வழக்கறிஞரை அனுப்புகிறோம் என்று சொல்வது, we will become a party to the writ petition or party to the proceedings before the Supreme Court. அது நாம் இப்போது இயற்றும் தீர்மானத்தின் ஸ்பிரிட்டுக்கு எதிராக இருக்கிறது. அதையும் நாவலர் அவர்கள், அவருடைய ஆழ்ந்த சட்டமன்ற ஞானத்தில் விளக்க வேண்டும்.

We are with the spirit of the resolution. அதை நான் சொல்லிவிடுகிறேன். ஆகவே, அதை எப்படி அமல்படுத்துவது என்பதை இந்தத் தீர்மானத்தில் விவாதிக்க வேண்டுமே தவிர ........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அதை எதிர்க்கட்சித் தலைவர் பேச இருக்கிறார். விளக்கம் கேட்டீர்கள். அதற்கு மேல் வேண்டாம்.

<u>திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் :</u> ஏன் சொல்கிறேன் என்றால், அதைப்பற்றித்தான் இங்கே விவாதம் இருக்க வேண்டும். விவாதம் அரசியல் ஆதாயம் பெறுவதற்கு இருக்க முடியாது.



அருமை உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள், Is the with the spirit of the resolution என்பதைச் சொல்ல வேண்டும். அதற்குப் பிறகுதான் இந்தத் தீர்மானத்தை நாம் நிறைவேற்ற இருக்கிறோமே தவிர, ஏதோ தேவையில்லாத விஷயங்களைப் பற்றி பேச வேண்டாம் என்று சொல்லிக்கொண்டு, அமைகிறேன், நன்றி.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. பழனிசாமி அவர்கள் கவனிக்க வேண்டும். நான் அதைத்தான் சொன்னேன். அதாவது, செயலாளர், உச்ச நீதிமன்றத்தில் ஆஜராகவேண்டுமென்று தாக்கீது வந்துள்ளது. அதற்காகத்தான் தீர்மானம். இதுவரையிலும் நாம் கடைப்பிடித்து வந்திருக்கிற நடைமுறைகளின்படியும், மரபுகளின்படியும், அது தேவையில்லை என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதிலே உங்களுடைய கருத்து, இல்லை இல்லை, செயலாளரை அனுப்புங்கள் என்று சொல்கிறீர்களா? அதுபோன்ற விபரங்களைச் சொல்லாமே தவிர, இந்தத் தீர்மானத்திற்கு அப்பாற்பட்ட விஷயத்திற்கு நீங்கள் செல்கிற காரணத்தால்தான் நிறையக் குறுக்கீடுகள் எல்லாம் வருகின்றன. நானும் உங்களுக்கு நினைவுபடுத்தினேன். உங்கள் கட்சி உறுப்பினர்களுக்காக உங்கள் கட்சித் தலைவர் அப்போது பேசவில்லை. காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்காக அவருடைய உரிமையைப் பாதுகாப்பதற்காகப் பேசியிருக்கிறார்கள். இந்த அவையின் உரிமைக்குப் பாதுகாப்பு என்கிற அந்த மன நிறைவோடு உங்கள் தலைவர் இந்த அவையிலே கருத்துத் தெரிவித்திருக்கிறார். அதையெல்லாம் மனதில் வைத்து இந்த அவையினுடைய தனித்தன்மையைக் காப்பாற்ற வேண்டுமா? வேண்டாமா? இதற்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டும்.

<u>திரு. ஜி. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பேச்சின் முன்னுரையில் ........

<u>*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் சொல்வதைப் பொறுத்தவரையில் இந்த அவையின் முழுப் பொறுப்பும் "ஸ்பீக்கருக்குத்தான்." ஸ்பீக்கரைத் தவிர வேறு யாரும் வெளி உலகத்தோடு தொடர்பு கொள்ளக்கூடாது. ஸ்பீக்கருக்கு முழுக்க முழுக்க உரிமை உண்டு. உரிமை படைத்தவர். இங்கிலாந்து பாராளுமன்றத்திலேகூட ஸ்பீக்கர் என்றுதான் பெயர் இருக்கிறது. அவையினுடைய கருத்துக்களை அரசருக்குத் தெரிவிக்கவும் அரசருடைய கருத்தை அவைக்குத் தெரிவிக்கவும் வாய்ப்பைப் பெற்றவர் ஸ்பீக்கர் ஒருவரே. வேறு யாரும் எந்தத் தொடர்பும் கொள்ளக்கூடாது. அதனால்தான் செயலாளரோ மற்ற அதிகாரிகளோ தொடர்பு

கொள்ளக்கூடாது என்று சொல்லியிருக்கிறோம். ஆனால் இதிலே ஒரு வார்த்தையை சேர்த்துக் கொள்வது பற்றி நமக்கு ஆட்சேபணை இல்லை, மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் சொன்னதுபோல. பாராளுமன்றத்திலேயும் சரி, சட்டமன்றப் பேரவையிலேயும் சரி என்ன முறை மேற்கொள்ளப் பட்டிருக்கிறது என்றால்—

"....As had been the practice of the House, he was asking the Chairman of the Committee to ignore the summons and not to put any appearance in the court...." என்று சொல்லிவிட்டு "....However, he was passing on the relevant papers to the Minister of Law for taking such action as he might deem fit to apprise the court of the correct constitutional position in this regard" என்று பேரவைத் தலைவர் சொல்கிறார். ஆகவே, சட்ட அமைச்சர் மூலமாக என்ன முறைகளிலே இந்த ஆணைங்களை, வழக்கறிஞர் மூலம், அட்வகேட்-ஜெனரல் மூலமாக எப்படி தெரிவிக்கலாமோ அந்த உரிமையை பேரவைத் தலைவர் லா மினிஸ்டருக்குத் தந்திருக்கிறார். அப்படித்தான் ஒவ்வொன்றிலும் "....As per the practice of the House, the Chairman of the Committee on the welfare of the Scheduled Castes and Scheduled Tribes has been asked not to respond to the notice. The Minister of Law, Justice and Company Affairs is being requested to apprise the Patna High Court of the correct constitutional position என்று வேண்டுமானால் திருத்தம் செய்வதிலே ஆட்சேபணை இல்லை.

முற்பகல் 11—45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஸ்பீக்கருடைய ரூலிங்ஸ், இங்கேகூட இதுபோன்று பல்வேறு பிரச்சினைகளில் செயலாளருக்குத் தாக்கீது வந்தபோது இது பற்றி உண்மை நிலவரத்தை சட்டத் துறையின் மூலமாக, சட்டத் துறை அதிகாரிகள் மூலமாக வழக்குமன்றத்திற்குத் தெரிவிக்கலாம் என்றுதான் இதற்கு முன்னரும்கூட பேரவைத் தலைவர்கள் அவ்வப்போது அறிவிப்புச் செய்திருக்கிறார்கள். எனவே, தீர்மானத்திற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. என்னுடைய அறிவிப்பு வருகிறபோது நான் அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வருகிறபோது ஏற்கெனவே எந்த முறையிலே நம்முடைய வழக்கு எந்த முறையில் இருந்து வந்ததோ அதே முறையிலே தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இங்கே ஒரு சந்தேகத்தை எழுப்பினார்.



"If we are going to hire the services of an Advocate whom will the Advocate represent ? Will he be representing the Speaker ; will he be representing the Secretary of the Assembly ?" என்று கேட்டார். Now summons has been issued from the Supreme Court to the Secretary of the Assembly to furnish certain particulars, certain information in the Supremet Court. According to the rules of the Legislature, Secretary cannot furnish any information to any Court without the express consent of the Speaker. So, now we are taking the stand that instead of sending our Assembly Secretary to appear in the Supreme Court, with the permission of the Speaker, the necessary infromation may be furnishe through a counsel, through a lawyer. So, in effect, the lawyer will be handing over the information furnished by the Secretary of the Assembly. (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

*திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறுகிறபோது ஒன்றைச் சொன்னார்கள். இங்கே நம்முடைய அவைக்கு இருக்கக்கூடிய இறையாண்மையை காக்கும் வகையிலே அவையின் செயலாளர் உச்ச நீதிமன்றத்திற்குச் செல்லக்கூடாது. அப்போதுதான் அவையின் இறையாண்மை காப்பாற்றப்படும். அந்தச் சூழ்நிலையில் உச்சநீதிமன்றத்தின் அழைப்பாணையை இக்நோர் செய்யவேண்டும் என்று கூறிவிட்டு அதே நேரத்தில் செயலாளருக்காக ஒரு கவுன்சலை (வழக்கறிஞரை) நாம் அனுப்பி வைப்போமானால்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கடைசியாக எதிர்க்கட்சித் தலைவர் உங்களுடைய கருத்துக்களையெல்லாம் சொல்லப் போகிறார்(குறுக்கீடு). பிரச்சினைக்குள் நீங்கள் போகவேண்டாம். அப்படியென்றால் எல்லா உறுப்பினர்களும் பேசுவதுபோல வரும். தயவுசெய்து இந்தப் பிரச்சினையில் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான கருத்துக் கூறினால் எப்படி? கடைசியில் உங்கள் எல்லோருடைய கருத்தையும் ஒட்டுமொத்தமாகச் சேர்த்து எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தெரிவிக்கப்போகிறார் (குறுக்கீடு). உங்களுக்கு அத்தகைய கருத்து இருந்தால் உங்களுடைய தலைவரிடத்திலே கொடுத்துவிட்டால் அவர் உங்கள் அத்தனை பேருடைய கருத்துக்களையும் சேர்த்து வைப்பார்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை மேலும் விளக்க விரும்புகிறேன்.

The Supreme Court has directed the Secretary of the Legislative Assembly to appear in person and to furnish some information. The Secretary of the Legislative Assembly will not appear

before the Supreme Court. In this case, on the basis of the resolution of the House under direction of the Speaker the Secretary will send a letter to the Registrar General of the Supreme Court (thumping of desks) through the Tamil Nadu Advocate on Record giving the information. He will not file any counter statement. இதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி இந்த அடிப்படை விளக்கங்களின் அடிப்படையில் உங்களுடைய கருத்துக்களை, மேலான கருத்துக்களைத் தெரிவியுங்கள். இப்போது விளக்கம் பெற்றிருப்பீர்கள் என்று நான் நினைக்கிறேன்.

முற்பகல் 11–50

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்களுக்கு ஒரே ஒரு வேண்டுகோளை இந்த நேரத்தில் விடுகிறேன். அவர் இதற்கு முன்பு பேசுகின்றபோது அவருடைய கட்சிக்கு கொள்கைகள் இருக்கின்றன என்பதைக் குறிப்பிட்டார். எல்லாக் கட்சிகளுக்கும்தான் கொள்கைகள் இருக்கின்றன. இருப்பினும் அவரது கட்சியின் கொள்கை என்ன என்பதனை இந்த நேரத்தில் தெரிவித்தால் நன்றாக இருக்கும். ஏற்கெனவே, மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி அவர்கள், இன்னொரு கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதி வெளிநடப்புச் செய்தார். உண்மையிலேயே இதற்காக நான் வருந்துகிறேன்; இது மிகவும் துரதிஷ்டமானது என்று கூற விரும்புகிறேன். இன்றையதினம் நம் முன்னால் இருக்கின்ற பிரச்சினை, சுப்ரீம கோர்ட் இடுகின்ற உத்தரவை மதிக்க வேண்டுமா, வேண்டாமா என்பதல்ல; இந்த அவையின் உரிமை, இந்த அவையின் தனித் தன்மை காக்கப்பட வேண்டுமா, இல்லையா என்பதுதான் இன்று நமக்கு முன்னே இருக்கின்ற பிரச்சினை. (மேசையைத் தட்டும் ஒலி). இந்த அவையின் தனித் தன்மை, உரிமை, இந்த அவையின் இறையாண்மை காக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் அவை முன்னவர் அவர்கள் இன்றையதினம் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்து இருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி அவர்கள் இந்தத் தீர்மானத்தை எதிர்க்கிறேன் என்று சொல்லிவிட்டு வெளிநடப்புச் செய்து இருப்பது உண்மையிலேயே துரதிர்ஷ்டமானது. எனவே, மாண்புமிகு பழனிசாமி அவர்களின் கருத்து என்ன? அவருடைய கட்சியின் கொள்கை என்ன? இந்த அவையின் தனித் தன்மையும், உரிமையும், இறையாண்மையும் காக்கப்பட வேண்டாம் என்பதுதான் உங்கள் கட்சியின் கொள்கையா என்பதை மட்டும் விளக்கிக் கூறினால் நன்றாக இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).



மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து அந்த வகையில் உங்களுடையது இருக்கட்டும். இந்தத் தீர்மானத்தின் மீது உங்களுடைய கருத்துக்கள் இருக்கட்டும்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சபையினுடைய இறையாண்மை நிச்சயமாகக் காக்கப்படவேண்டும். அதிலே எங்களுக்கு ஒரு மாற்றுக் கருத்தும் இருப்பதற்கு இடமே இல்லை. (குறுக்கீடு) ஆனால் நான் சொல்வது எல்லாம், எங்களுடைய கட்சி சொல்வது எல்லாம், நாடாளுமன்றம், சட்டமன்றங்களிலே நிறைவேற்றக்கூடிய சட்டங்களை இந்தச் சபையே மதிக்க வேண்டும் என்பதுதான், நமது பேரவைச் செயலாளர் அவர்கள் (குறுக்கீடு). உச்ச நீதிமன்றத்தில் (குறுக்கீடு) எனக்கு குழப்பமே இல்லை: தெளிவாகத்தான் சொல்கிறேன், இந்த சபையிலே உரிமைப் பிரச்சினை மீது எடுக்கப்பட்ட முடிவுகளை சென்று சொல்ல வேண்டும் என்பதுதான் எங்கள் கட்சியின் கருத்து. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி, அதோடு விட்டுவிடுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி : அதிலே ஒன்றும் தவறில்லை. (குறுக்கீடு). இந்த பத்திரிக்கைகளினுடைய உரிமைப் பிரச்சினை குறித்து மாண்புமிகு உறுப்பினர் கொண்டுவந்த போதெல்லாம் இந்தப் பிரச்சினைக்கு ஒரு சுமூகமான தீர்வு காண வேண்டும் என்பதற்கு. மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் சட்டமன்றத்திலே தொடர்ந்து வலியுறுத்தி வந்து இருக்கிறேன். இந்தப் பிரச்சினை உரிமைக் குழுவிலே மீண்டும் நீங்கள் பரிசீலனை செய்ய வேண்டும். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது இந்தத் தீர்மானத்தில் வரவில்லை (குறுக்கீடு). உரிமைப் பிரச்சினையினுடைய விவரங்கள் இந்தத் தீர்மானத்தில் வரவில்லை. நீங்கள் சொல்லி விட்டீர்கள், உங்களுடைய கட்சியின் கருத்து, ஒரு இறையாண்மை மிக்க ஒரு பேரவையின் செயலாளர் இதுவரையிலே எந்தச் சட்டமன்றத்திலேயும், எந்த நாடாளுமன்றத்திலேயும் இரு அவைகளினுடைய செயலாளர்களும் வழக்குமன்றத்திலே போய் ஆஜராகாத நிலையில், இன்றைய செயலாளர் ஆகலாம் என்பது எங்கள் கட்சியினுடைய கொள்கை என்று சொல்லி விட்டீர்கள். அதற்கு மேலே, அந்தக் கொள்கையின் மீதே நீங்கள் பேசுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி : [illegible] தலைவர் அவர்களே, எந்த ஒரு [illegible] ஜன நாயகத்தை பாதுகாக்கின் [illegible] வகையில் பேச [illegible] எழு

164946
D
V 211,31 N92
N92.2881

துரிமை, நீதித்துறை—இவை ஒருபோதும் மறுக்கப்படாத வகையிலே நம்முடைய சபை நடவடிக்கையில் ஈடுபட வேண்டுமென்று கேட்டு நான் அமர்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதுவும் கருத்துத் தெரிவிக்கிறேன் என்று எனக்குச் சொல்லவில்லையே. உங்களுடைய கருத்துக்களை எல்லாம் எதிர்க் கட்சித் தலைவர் பேசுகிறார். (குறுக்கீடு). இல்லை, தயவுசெய்து இதில் வளர்க்க வேண்டாம். இது ஒரு சிக்கலான பிரச்சினை. ஒவ்வொருவரும் ஒரு கருத்தைச் சொல்லி, அதற்கு இன்னொரு மாற்றுக் கருத்து இன்னொரு உறுப்பினரே சொல்வது என்பது அது நடைமுறையிலே சரியாக வராது. (குறுக்கீடு) கிளாரிஃபிகேஷன் எதிலே? இதிலே வந்து ஒவ்வொருவரும் கேட்டுக்கொண்டு இருந்தால் எல்லா உறுப்பினர்களும் பேசுகிற நிலைமை வரும். வேண்டாம். திரு. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய இறையாண்மையை காக்க வேண்டும் என்பதில் எங்களுக்குக் கருத்து வேறுபாடு கிடையாது. ஆனால், தொடர்ச்சியாக நாம் பார்க்கின்றபோது, இந்தக் குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக நமக்கு **எதிராகச் செயல்படுகிற பத்திரிகைகள் குறிப்பாக (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** இதிலே வரவில்லை. (குறுக்கீடு) ** அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) நீங்கள் தயவுசெய்து இப்போது பேச வேண்டாம்.

டாக்டர் தே. குமாரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாலை முரசு, முரசொலி, தினகரன் நிருபருக்கு 10 நாள் சஸ்பெண்ட், இல்லஸ்டிரேட்டட் வீக்லி—இப்படி எல்லா பத்திரிக்கைகளின் மீதும் தொடர்ச்சியாக நாம் உரிமை மீறல் கொண்டுவருகிறபோது, இந்த அவை தான் சுப்ரீம் என்கிற (குறுக்கீடு) என்ன சார், என்னை பேச விடுங்கள் (குறுக்கீடு)

முற்பகல் 11-55

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுவதற்கு எப்படி உரிமை இருக்கிறதோ, அதேமாதிரி, குறுக்கிடுவதற்கும் உரிமை இருக்கிறது. ஒருவர் எழுந்து இருக்கிறார்,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





நான் அவரை அனுமதிப்பதும், அனுமதிக்காததும் என்னைப் பொறுத்தது. நீங்கள் ஒரு உறுப்பினர், இங்கே 161 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). அவரைப் பேசக்கூடாது என்று நீங்கள் மறுப்பது சரியல்ல. நான் 161 உறுப்பினர்களுடைய உரிமையையும் பாதுகாக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி). திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் ஒரு உறுப்பினராக இருந்து செயல்படலாம். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதற்குச் சொல்லவில்லை. ஒரு உறுப்பினருடைய உரிமையைப் பாதுகாப்பதைப் போல, 161 உறுப்பினர்களுடைய உரிமையையும் நான் பாதுகாக்க வேண்டும். (குறுக்கீடு). ஒரு உறுப்பினருக்காக, பேரவைத் தலைவர் வரிந்து கட்டி, நான் உங்கள் உரிமையை பாதுகாப்பதைப்போல இந்த 161 உறுப்பினர்களுடைய உரிமையையும் பாதுகாத்துத்தானே தீரவேண்டும். (குறுக்கீடு). ஒருவர் எழுந்து இருக்கிறார். அவர் எல்லாப் பத்திரிகையையும் என்றார், ஒருவர் எழுந்து அதற்கு மறுப்பு தெரிவிக்கிறார். அவர், பேச ஆரம்பித்த உடனேயே எல்லாப் பத்திரிகையையும் என்றார், இவர் இல்லை, எல்லாப் பத்திரிகையும் இல்லை, 3 பத்திரிகைகள்தான் என்று இன்னொரு உறுப்பினர் எழுந்து விளக்கம் சொல்கிறார். இந்த உரிமையை நான் அவருக்குத் தராமல் இருக்க முடியுமா? மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் வெளிநடப்புச் செய்தார்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே எடுக்கப்பட்டு இருக்கிற பிரச்சினை, பேரவைத் தலைவருடைய உரிமையைப் பாதுகாக்க வேண்டும் என்ற பிரச்சினையே தவிர, அரசு எடுத்த நடவடிக்கைகளையொட்டி அல்ல. அரசினுடைய நடவடிக்கைகள் அல்ல. இது பேரவையினுடைய நடவடிக்கைகள். அதுவும் 51 பத்திரிகைகளிலே, மூன்றே மூன்று பத்திரிகைகள். அந்த மூன்று பத்திரிகைகளினுடைய காரண காரிய விளக்கங்களைக் கேட்டு, அந்தக் காரண காரிய விளக்கங்கள் இதுதான், என்ன என்ன என்று நான் சொன்னேன். இது சரிதான் என்கிறீர்களா? அப்படி வெளியிடலாம் என்கிறீர்களா, இதுதான் முறை என்கிறீர்களா, என்பதுதான் பிரச்சினையே தவிர, பேரவை எடுத்த முடிவே தவிர, அரசு எடுத்த முடிவு அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்

*மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் எழுப்பிய சங்கடமான கேள்விகளுக்கு பதில் சொல்லாமலேயே, மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் அவர்கள், உட்கார்ந்து விட்டார்கள். அதேபோல், ஜனதா தளத்தைச் சேர்ந்த உறுப்பினர், எந்தவிதமான கருத்தையும் இதிலே தெரிவிக்காமல்,—நம்முடைய அவை உரிமை பாதிக்கப்படுகிற நேரத்தில், இதைப் பாதுகாப்பதா இல்லையா என்று சொல்லாமலேயே வெளியேறிவிட்டார்கள். என்னைப் பேச விடவில்லை. ஆகவே, நான் கருத்துக்களைச் சொல்லவில்லை என்கிற ஒரு தோற்றத்தை வெளியிலே ஏற்படுத்துவதற்கு இதைப் பயன்படுத்திக் கொள்ளாமல், அவருடைய கருத்து என்ன என்பதை வெளிப்படையாக அவர்கள் பேச வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசி முடித்து விட்டீர்கள். அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு).

திரு. ஜி. பழனிசாமி: என்னுடைய கருத்தைச் சொல்லவில்லை என்று சொல்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் சொன்னது, பேரவை முன்னவர் அவர்கள் உங்களை 4 கேள்விகள் கேட்டார். அதற்கு நீங்கள் பதில் சொல்லாமல் உட்கார்ந்து விட்டீர்கள் என்றுதான் சொன்னார். நீங்கள் பேசி முடித்து விட்டீர்கள். அவர்கள் கேட்ட பிறகு, நீங்கள் பேசி முடித்து விட்டீர்கள். அவருக்கும் நான் வாய்ப்பு அளித்தேன். ஜனதா தள உறுப்பினருக்கும் நான் வாய்ப்பு அளித்தேன். திரும்பப் பேசுவதற்கும் வாய்ப்பு அளித்தேன். அவர் பேசுகிறபோது, இன்னொரு உறுப்பினர் குறுக்கிட்டு, அனைத்து பத்திரிகைகளும் அல்ல. 3 பத்திரிகைகள்தான் என்று சொல்ல அனுமதித்தது தவறு என்று என்னைப் பேசவிடவில்லையே என்று அவர் கொல்லி விட்டுப் போய் விட்டார். ஆக, மொத்தம், உங்களுக்கு என்ன சொல்லி, அனுப்பி இருக்கிறார்களோ, அதை இங்கே எப்படியோ செய்வதற்குத் தயாராகிவிட்டீர்கள் என்று தான் தெரிகிறதே தவிர, வேறு ஒன்றும் இல்லை. அவை முன்னவர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர், பழனிசாமி, அவர்கள் தெளிவாகச் சொல்லி விட்டார்கள். அவருடைய கட்சியினுடைய கொள்கை இதுதான் என்று திட்டவட்டமாகவும் சொல்லி விட்டார்கள். இந்தப் பேரவையினுடைய தலைவர், சுப்ரீம் கோர்ட் அழைத்



தால் போக வேண்டும் என்பது அவருடைய கொள்கை. அதற்கு மேல் நான் என்ன செய்ய வேண்டுமோ, அதை முடிவு பண்ணலாம். (குறுக்கீடு). ஆகவே, புரிந்து விட்டது. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே கிளாரிபிகேசன் வேண்டாம். (குறுக்கீடு). திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் பழனிசாமி அவர்கள் பேசும்போது சொன்னார்கள். பார்லியமெண்ட் இஸ் சுப்ரீம் என்றுதான் நாங்கள் படித்து இருக்கிறோம். சுப்ரீம் கோர்ட்டினுடைய சப் ஆர்டினேட் சர்வீசா நம்முடைய அவை என்பதை விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் பேசி முடித்து விட்டார்கள். (குறுக்கீடு). திரு. தண்டாயுதபாணி.

நண்பகல் 12.00

திரு. வி. தண்டாயுதபாணி: தலைவர் அவர்களே, இவ்வளவு நேரம், நம்முடைய அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தைப் பற்றி, நடைபெற்ற விவாதங்கள் அத்தனையும், இது எல்லாவற்றிற்கும் மேலாக, மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி மற்றும் குமாரதாஸ் அவர்கள் எழுந்து போனதையும் மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் பேசுகின்ற தொனியையும் நீங்கள் பார்த்தால்,—நிச்சயமாக இந்த அரசாங்கம் அமைதியான முறையிலே அரசாட்சி நடத்தி வருகிறது, எந்தப் பிரச்சினையையும் எடுத்துக் கொண்டாலும், புரட்சித் தலைவி அவர்கள் சுமுகமாக தீர்த்து விடுகிறார்கள்,—ஏதாவது நமக்குக் கிடைக்காதா என்று பார்த்து, இந்த உரிமை மீறல் பிரச்சினையை வைத்து, இந்தியா முழுமைக்கும், ஒரு தவறான பிரச்சாரத்தைச் செய்வதற்காக இதைப் பயன்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். 'அவலை நினைத்து உரலை இடிப்பது போல' உரிமை மீறல் பிரச்சினையை கொண்டு வந்தது நாங்கள். எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.ஆர்.பி., அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சந்திரசேகர் அவர்கள், இவர்கள்தான் இந்த உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டு வந்து, இப்படிப்பட்ட நிலைமைகள் இன்றைக்கு ஏற்பட்டு, இந்த அவையினுடைய இறையாண்மையைக் காக்க வேண்டுமென்ற தீர்ப்பு கூறப்பட்டு, அவையும் அதை ஒருமனதாக ஏற்றுக் கொண்டு, நீங்கள் அவர்களுக்கு சம்மன் அனுப்பி, வரவழைத்தீர்கள். அவர்களுக்கு ஒரு அவகாசம் கொடுத்தீர்கள். ஆனால் அந்த அவகாசத்திலே அவர்கள் ஈடுபடாமல் தங்களுக்கு எப்படியாவது ஒரு பிரச்சினையை ஏற்படுத்த வேண்டுமென்று, குட்டையைக் குழப்பி, மீன் பிடிக்க

வேண்டுமென்பதற்காக, கருணாநிதி விரித்த வலையிலே முரசொலியும், மாலை முரசும் அவர்கள் விரித்த வலையில், எப்படி அரசியல் கட்சிகளிலே பல கட்சிகள் இருக்கிறதோ, அதைப்போல பத்திரிகைகளிலேயும் பல சங்கங்கள் வைத்துக் கொண்டு, இந்த கருணாநிதி போடுகின்ற தூபத்திற்குத் துணை போகின்றார்களே, நான் வருத்தப்படுகின்றேன். இதற்கும் புரட்சித் தலைவிக்கும் என்ன சம்பந்தம்? எந்த விதத்திலே இவர் பத்திரிகை சுதந்திரத்தைப் பறித்து விட்டார்கள் என்பதை நான் இங்கே ஆணித்தரமாக கேட்க விரும்புகிறேன். கொண்டு வந்தது நாங்கள் இன்னும் சொல்லப் போனால், யார் இதையெல்லாம் பேசிக் கொண்டு வருகிறார்கள்? இன்றைய தினம் 'ஃபோர்த் எஸ்டேட்'. 'ஃபோர்த் எஸ்டேட்டில்' இரு பத்திரிகைகள் ஐந்தாம்படைக் கூலிகளாக ஆகிவிட்டார்கள் என்பதைத்தான் இங்கே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இவ்வளவு வாய் கிழிய ஜனநாயகம் பேசுகிறார்களே இவர்கள் என்ன செய்தார்கள்? 'நவசக்தி' காங்கிரஸ் கட்சியினுடைய பத்திரிகை ஆசிரியர் 20 ஆண்டுக் காலம் சிறையிலே இருந்த முருக தனுஷ்கோடி நாடாரை, பத்திரிகையிலே செய்தி எழுதினார் என்று தனிப்பட்ட முறையிலே அவரைக் கைது செய்து உள்ளே தள்ளினாரே கருணாநிதி அவரா இன்றைக்கு வேதாந்தம் பேசுவது? அதற்குப் பின்னாலே நவமணி பத்திரிகை மூடப்பட்டது. 'இந்து' பத்திரிகை, இந்துப் பத்திரிகையில் அவர் பெயர் போடவில்லையாம். அதனால் 'இந்து' பத்திரிகையை அடித்து நொறுக்கினார்கள். இதற்கும் மேலாக 'அலை ஓசை' இன்னும் சொல்லப் போனால் 'மக்கள் குரல்' பத்திரிகையினுடைய ஆசிரியர் சண்முகவேலை 1975 ஆம் ஆண்டு கைது செய்து சிறையிலே தள்ளினார்கள். அதற்கெல்லாம் காரணம், முரசொலி, மாலை முரசு, இப்பத்திரிகைகள் வந்தவுடனே நேற்றைய தினம் பொதுக்கூட்டத்தில் பேசுகிறார் உச்ச நீதி மன்றத்தினுடைய தீர்ப்பை மதியுங்கள் என்று சொல்லி, சூட்சமம் எங்கேயிருக்கிறது என்று சொன்னால், சுண்ணாம்பில் இருக்கிறது என்று சொன்னார்கள். அவருடைய மருமகன் அந்த முரசொலியினுடைய ஆசிரியர் என்ற காரணத்திற்காக அவர்கள் அப்படிச் சொல்கிறார்கள். இன்றைய தினம் வேறு பத்திரிகைகாரர்கள் யாராவது அதைக் கண்டித்தார்களா? அதேபோன்று போன தடவை தராசினுடைய ஆசிரியர் சியாம் அவர்களைக் கைது செய்து உள்ளே தள்ளப்பட்டாரே, அன்றைக்கு போர்க் குரல் கொடுக்கப்பட்டதா? ஏன் டி.வி. பெட்டியைக் கொண்டு வந்து உடைத்தார்களே, எதற்கு? தன்னுடைய படம் அதிலே வரவில்லை என்பதற்காக. வானொலியை எதிர்த்துப் போராட்டம் நடத்தினார்களே எதற்கு நடத்தினார்கள்? (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விரிவாக உள்ளே போக வேண்டாம். விளக்கம் மட்டும் கேளுங்கள்.





திரு. வி. தண்டாயுதபாணி: என்னென்ன நடைபெற்றது? கருணாநிதியினுடைய தூண்டுதலினால்? அவர் எப்படிச் சொல்லலாம்? இன்னும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பைக் கொடுக்கவில்லை. சம்மன்தான் கொடுத்திருக்கிறது. அதற்குள்ளாக தீர்ப்பை மதியுங்கள் என்று அவர் எப்படி பேசுகிறார். இது எல்லாவற்றிற்கும் காரணம், புரட்சித் தலைவியினுடைய ஆட்சி அமைதியாக நடைபெறுகிறது. அதற்கு ஏதாவது களங்கம் கற்பிக்க முடியுமா என்று அதைத் துருப்புப் போராக வைத்துப் பார்க்கிறார்களே ஒழிய, வேறு எதுவும் கிடையாது. இதிலேயும் அவர்கள் தோல்விதான் அடைவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் இறையாண்மையையும் தமிழக அவையினுடைய இறையாண்மையும் நிச்சயம் பாதுகாப்போம் என்பதை மட்டும் நான் இங்கே சொல்லிக் கொள்ள ஆசைப் படுகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களைப்பற்றி வேறு எதுவும் சொல்லவேயில்லை அவர். இதிலே நீங்கள் பேசி முடித்து விட்டீர்கள். அவர் சொல்வது அவருடைய சொந்தக் கருத்து. உங்களைப் பேச அனுமதித்து நீங்கள் பேசி முடித்து உங்களுடைய கருத்தை எல்லாம் சொல்லிவிட்டீர்கள் அல்லவா? இதில் மேற்கொண்டு விவாதம் வேண்டாம். பிறகு உங்களை அனுமதிக்கிறேன். தொடர்புடையதாகப் பேசுங்கள் (குறுக்கீடு) நீங்கள் எப்படி எழுத்து நிற்கிறீர்கள். அவர் ஒரு விளக்கம் கேட்க வேண்டுமென்றார். நான் அனுமதித்தேன் (குறுக்கீடு). திரு. வி. தண்டாயுதபாணி.

(திரு. ஜி. பழனிசாமி வெளிநடப்புச் செய்தார்.)

பிற்பகல் 12-05

திரு. வி. தண்டாயுதபாணி: பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்வது, பல பத்திரிக்கைகள் நல்ல சுதந்திரமாக நல்ல முறையில் எழுதி வருகிறார்கள். அவர்களை நான் எங்களுடைய கட்சியின் சார்பாக மிகப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். பத்திரிகையாளர்களுக்கு, உழைக்கும் பத்திரிகையாளர்கள் சங்கம் போன்று 4 சங்கங்கள் இருக்கின்றன. தயவு செய்து முரசொலி, மாலை முரசு போன்ற பத்திரிகைகள் செய்த தவறுகளை நீங்கள் சுட்டிக் காட்டியிருப்பீர்களேயானால் நிச்சயமாக நாங்கள் அத்துனை பேரும் வரவேற்று இருப்போம். ஆனால் மறுபடியும் இவ்வளவு நடந்தபிறகும் நேற்றையதினம் முரசொலியிலே வந்திருக்கிறது. அதாவது 'மகாராணி கத்தை நீட்டினால் கண்ணாடி கூஜாவிற்குள் இருந்து புறப்படும் பூதம்போல கையை கட்டிக் கொண்டு, என்ன செய்ய வேண்டும் ... என்று கை கட்டி வாய் புதைத்து கேட்டிட நாற்றுக்கணக்கான

சேட்ப்பட்டிகள் இருக்கிறார்கள்' என்று போடப்பட்டிருக்கிறது. இது தேவைதானா? இதற்கு நாம் மறுபடியும் இன்மொரு பிரச்சினையைக் கிளப்பி சொல்ல வேண்டுமா? ஆகவே இப்படிப்பட்ட தவறான கேவலமான நடவடிக்கைகளை பத்திரிகையாளர்கள் சங்கம் கண்டிக்க வேண்டும் என்று நான் அனபோடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். வி. சண்முகம்.

*திரு. எஸ். வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் முன் மொழிந்த இந்த தீர்மானத்தை நான் சார்ந்து நிற்கின்ற ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே மனமார நெஞ்ச நிறைவோடு ஏற்கிறேன் என்பதை முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இந்தியாவை ஆளுவது இந்திய அரசமைப்புச் சட்டம். இந்த அரசமைப்புச் சட்டத்தின் மீது யாருக்கு எல்லாம் நம்பிக்கை இருக்கிறதோ யாருக்கெல்லாம் இந்திய குடிமகன் என்ற உணர்வு இருக்கிறதோ அவர்கள் எல்லாம் இந்த தீர்மானத்தை ஏற்பார்கள். வெளிநடப்பு செய்ய மாட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). ஏனெனில் இந்தியாவின் அரசமைப்புச் சட்ட.ம் சுப்ரீம் கோர்ட்டிற்கும் உரிமை தந்திருக்கிறது. சட்டமன்ற பேரவைக்கும் உரிமை தந்திருக்கிறது. சட்டமன்ற பேரவைக்கு என்னவெல்லாம் உரிமைகள் இருக்கின்றன என்பதை அது வரையறுத்து கூறியிருக்கிறது. ஆகவே இந்த சட்டமன்ற பேரவைக்குள்ளே நடந்திருக்கிற ஒரு விஷயத்தை அணுகுவதற்கு இந்த பேரவைக்கு உரிமை இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் திரு. இளம்வழுதி எனக்கு அடுத்த இருக்கையிலே இருப்பவர். இங்கேயிருந்து 11-வது வரிசையிலே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் சந்திரசேகரன் அவர்கள் வந்து இவரை அடித்ததாக ஒரு அண்ட புளுகு செய்தியை கோவை மாலை முரசு வெளியிட்டிருந்தது....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவையெல்லாம் தெரிந்ததுதான். அந்தப் பிரச்சினை எல்லாம் முடிந்து, அவையெல்லாம் உரிமைக் குழுவிற்கு எடுத்து தண்டனை கொடுத்திருக்கிறோம். ஆகவே பிரச்சினைக்கு உள்ளே விரிவாகப் போக வேண்டாம். இங்கே இருக்கிற தீர்மானத்திலே மட்டும் உங்கள் கருத்துக்களைத் தெரிவியுங்கள்.

திரு. எஸ். வி. சண்முகம்: வெளி உலகத்தில் பத்திரிகையாளர்கள் எப்படி வேண்டுமானாலும் எழுதிக் கொண்டிருக்கலாம் என்பது சரியா?



மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவைகளைப் பற்றி இந்த அவைக்கும் தெரியும். நியாயமான பத்திரிகையாளர்களுக்கும் தெரியும். திரும்பவும் அதைப் பிரச்சினையாக ஆக்க வேண்டாம்.

திரு. எஸ். வி. சண்முகம்: இத்தகைய ஒரு பொய் சம்பவத்தை இந்தப் பேரவை கண்டு கொள்ளக் கூடாது என்று நினைக்கிறார்களா? இவ்வளவு ஒரு அபாண்டத்தை இந்தப் பேரவையினுடைய தலைவர் பார்த்தும் பார்க்காமலும் இருக்க வேண்டும் என்று நினைக்கிறார்களா? இதற்கு முன்பு ஒரு சபாநாயகர் இருந்தார். ஒரு கார்ட்டூன் வெளியிட்டதற்காக ஒரு பத்திரிகை ஆசிரியரை சிறையில் அடைத்த வரலாறு உண்டு. அப்படிச் செய்தாரா இந்தச் சபாநாயகர், வருத்தம் தெரிவிக்க கோருகிறார். வருத்தம் தெரிவிப்பது என்பது ஒரு சாதாரண விஷயம். நண்பர் சந்திரசேகரன் அவர்கள் இவரை அடித்தார்கள் என்ற செய்தி கோவையிலே வெளியிடப்பட்டபோது அவருக்கு எதிரான எத்தகைய சதித் திட்டத்தை தி.மு.க. வினர் உருவாக்கியிருப்பார்கள். அவருடைய மனது எப்படி புண்பட்டிருக்கும். ஆகவே வெளியிலே பல விஷயங்கள் எழுதப்படுகின்றன. முதலமைச்சரைப் பற்றி எழுதுகிறார்கள். மற்ற அமைச்சர்களைப் பற்றி எழுதுகிறார்கள். அமைச்சர் கண்ணப்பன் போன்றவர்கள் எல்லாம் எப்படி பொறுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. அப்படியெல்லாம் எழுதுகிறார்கள். ஆனால் இந்த சபைக்குள்ளே நடக்காத ஒரு செய்தியை நடந்ததாக எழுதும்போது அது கண்டிக்கப்பட வேண்டாமா? ஆகவேதான் இந்த சபையினுடைய உரிமைகளை வலியுறுத்தி, இந்த சபையை வழி நடத்தும்போது, இந்த சபைக்கு எத்தகைய உரிமை இருக்கிறது என்பதையெல்லாம் வலியுறுத்தி, இந்தத் தீர்மானத்தை அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இவைகளைத் தவிர வேறு என்ன செய்வது, அதற்குப் பிறகு செயலாளரை அழைப்பது என்றால் என்ன நியாயம்? இன்னும்கூட ஒரு படி மேலே போய் நம்முடைய அவை முன்னவர் அவர்கள் இந்தப் பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வை கூட வழி காட்டியிருக்கிறார்கள். அவசியமானால் இந்த அரசாங்கத்தினுடைய வழக்கறிஞரை அனுப்புகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். முன்பு இருந்த ஒரு அரசாங்கம் இங்கே இருந்திருக்குமேயானால், இத்தகைய விவாதம் வந்திருக்குமேயானால் நீ யார் கேட்பது, சந்திக்கத் தயார், சந்திப்போமா என்ற பொறுப்பற்ற வார்த்தைகளை எல்லாம் வெளியிட்டிருப்பார்கள். அவர் கூட இன்றைக்கு சொல்லியிருக்கிறார். சுப்ரீம் கோர்ட்டுக்கு பணிய வேண்டாமா? இந்திய ராணுவம் கொலைகாரப் படை என்று சொன்ன ஒரு தேச விரோதிக்கு சுப்ரீம் கோர்ட்டைப் பற்றிப் பேசுவதற்கு என்ன அருகதை இருக்கிறது? ஆகவே இந்தத் தீர்மானம் மிகப் பொறுப்புள்ள தீர்மானம். இன்றைக்கிருக்கின்ற சிக்கலைத் தீர்க்க இதனைத் தவிர வேறு வழி இருக்க முடியாது.

பிற்பகல் 12-10

பத்திரிகைச் சுதந்திரத்தைப் பற்றியெல்லாம் பேசினார்கள். பத்திரிகைச் சுதந்திரம் என்பது இந்த இரண்டு பத்திரிகை அல்ல. இன்னும் ஏராளமான பத்திரிகைகள் இருக்கின்றன. அவைகள் இந்த அரசோடுதான் இருக்கின்றன. ஒரு தோற்றத்தை உருவாக்க நினைக்கிறார்கள். எல்லா பிரச்சினைகளையும் சமாளித்து இந்த 10 மாத கால ஆட்சியில் வெற்றிவாகை சூடி வருகின்ற இந்த அரசின் மேல் வேறு எந்த சதியும் உண்டாக்க முடியவில்லை. இவர்கள் எல்லாம் வெளிநடப்பு செய்கிறார்கள் என்றால் இந்த சதி தி.மு.க. அலுவலகத்திலே உருவாக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அங்கிருந்து புறப்பட்டதனாலே உறவு. அங்கிருந்து புறப்பட்டது இந்த முரசொலி. அங்கிருந்து புறப்பட்டது தினகரன். இதெல்லாம் பத்திரிகை அல்ல. ஒரு கட்சியின் குரல். ஒரு கட்சியின் பீரங்கி. ஆகவே இந்த இரண்டு பத்திரிகைதான் பத்திரிகை என்பது அல்ல. இந்த இரண்டு பத்திரிகைதான் பத்திரிகைச் சுதந்திரம் என்பது அல்ல. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக கட்சி, காங்கிரஸ் கட்சி, ஐக்கிய பொதுவுடைமைக் கட்சி இந்த ஜனநாயகக் கட்சிகள் பத்திரிகைகளுக்கு மதிப்பு அளிப்பதிலே தான், இந்தப் பத்திரிகைகளுக்குத் தலைவணங்குவதினாலே தான் பெரிய அண்டப்புளுகுக்கு, சின்ன வருத்தத்தை தெரிவிக்கச் சொல்லியிருக்கிறது. முன்பு இருந்தவர் போல் சிறையிலா அடைத்தார் இந்தச் சபாநாயகர்? ஒரு தோற்றம். இந்த அரசாங்கம் பேச்சுரிமையைப் பறிக்கிறது, எழுத்துரிமையைப் பறிக்கிறது, கருத்து உரிமையைப் பறிக்கிறது. என்று கண்டதையெல்லாம் எழுதுவதுதான் எழுத்துரிமையா? கண்டதையெல்லாம் பேசுவதுதான் பேச்சுரிமையா? சகோதரியார் பொன்னம்மாள் அவர்கள் ஒரு டேப்பை சமர்ப்பித்தார்கள் .அந்த டேப்பில் என்ன இருக்கின்றது என்ற விஷயத்தை நான் பொதுக் கூட்டத்திலே பேசிய இடங்களில் எல்லாம் பேசினேன். ஜனங்கள் கேட்டு என்னிடம் வந்து, ''பாவி அப்படியா பேசுகின்றான்? வெளியே விடக்கூடாது அவனை'' என்றார்கள். ஆகவே கருத்து உரிமையும் போகவில்லை. எழுத்துரிமையும் போகவில்லை. சும்மா 2 பேர் சேர்ந்து கொண்டு எழுத்துரிமையைப் பறிக்கிறார்கள் என்கிறார்கள். எப்படி வேண்டுமானாலும் வெளியே போய் எழுதிக்கிட்டிருக்கலாம். இந்த சபைக்குள்ளே நடந்த விஷயத்தை திரித்து எழுதுவது என்றால் எப்படி ஏற்க முடியும்? அதே போல சபைக்கு ஒரு மரபு இருக்கிறது. சபாநாயகர் பார்த்து இதையெல்லாம் வெளியிடக்கூடாது என்றால் அப்படி அதையெல்லாம் வெளியிடுவேன், வெளியிட்டே தீருவேன் அது என்னுடைய உரிமை என்றால் அவர் இந்திய அரசியல் சட்டத்திற்கு பணிகிறாரா? எது வேண்டுமானாலும் செய்யலாமா? எப்படி வேண்டுமானாலும் பண்ணலாமா? ஆகவே இந்தத் தீர்மானம் என்பது ரொம்பப் பொறுப்புள்ள ஒரு தீர்மானம். எனக்குக்கூட இந்த விஷயத்திலே, எப்படியோ டெவலப் ஆகி சுப்ரீம் கோர்ட்





வெர்ஸஸ் அசெம்பளி என்று வரப்போகிறதா? அப்படி இந்த கட்சிகள் எல்லாம் நினைக்கிறார்களே, அப்படி ஒரு கதையை கட்டிவிட வேண்டுமென்று கருணாநிதி நினைக்கிறாரே, என்ன செய்யப் போகிறார்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். மிகப் பொறுப்பாக செயலாளர் வர மாட்டார், வேண்டுமானால் வழக்கறிஞரை, அரசு வழக்கறிஞரை அனுப்புகிறோம். அதை விட என்ன? சுப்ரீம் கோர்ட்டுக்கு இது பணிவது ஆகாதா? சுப்ரீம் கோர்ட்டுக்கு இது மதிப்பு தருவது ஆகாதா? நம்முடைய அவைச் செயலாளர் போவதைவிட அரசு வழக்கறிஞர் போவது தானே பொருத்தம்? ஆகவே மிகப் பொருத்தமான தீர்மானத்தை முன்னவர்கள் முன்மொழிந்திருக்கிறார்கள். இதை நான் ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே ஏற்கிறேன். இதை ஏற்காதவர்களுக்கும் நியாயம் தெரியும். தெரியாமல் அல்ல. ஆனால் அப்படிப் பேசியாக வேண்டும். புபேஷ்குப்தாவுடைய உணர்வுக்கு விரோதமாக கல்யாணசுந்தரம் அவர்களுடைய உணர்வுக்கு விரோதமாக, உமாநாத் அவர்களுடைய உணர்வுக்கு விரோதமாக ஒரு கம்யூனிஸ்ட் என்பவருடைய உணர்வுகளுக்கு விரோதமாக பேசியாக வேண்டும். ஆகவே அவை முன்னவர் அவர்கள் ஒப்புக்கொள்ளுங்கள், திருந்துங்கள் என்றால் எப்படி வரும்? இது பேசி முடிக்கப்பட்டு, செட்டப் ஆகி, இந்த மாதிரி ஒரு புயலைக் கிளப்பினால் தான் முடியும் (மேசையைத் தட்டும் ஒலி) வேறு வழியில்லை. எதிலேயும் சொல்ல முடியவில்லை. அரிசி விலை ஏற்றமா? குறைச்சாச்சு. விவசாயக். கடனா? வட்டி ரத்து. எல்லாம், நினைத்ததெல்லாம் மனம் போல் நடந்துக்கொண்டிருக்கிறது. இதைப் பார்க்கிறான். ஒன்றும் இல்லை. இங்கே இருக்கின்ற மாலை முரசு நிருபர் — அவருக்குப் பக்கத்திலேதான் நான் இருக்கிறேனே — இந்த இளம்வழுதியை 11 வரிசை தாண்டியா வந்து அடித்தார்? நான் சத்தியமா சொல்றேங்க. அவர் இந்தப் பக்கம் வரவேயில்லைங்க. அப்படி ஒரு பொய்யைக் கிளப்பி, அதிலேயிருந்து இன்னொன்றாக்கி இப்போது சுப்ரீம் கோர்ட்டுக்கும், தமிழ்நாடு கவர்ன்மெண்டிற்கும் ஒரு கதையைக் கட்டிவிடலாம் என்று நினைக்கிறார்கள். அது நடக்காது. ஆகவே, இந்தத் தீர்மானம், அவை முன்னவர் அவர்கள் சொன்னது போல நம்முடைய வழக்கறிஞரை அனுப்பலாம். நம்முடைய செயலாளரை அனுப்புவது கூடாது என்ற தீர்மானம் ரொம்ப சரியானது. இந்தச் சபைக்கு என்று அரசியல் சட்டம் தந்திருக்கின்ற உரிமைகளை நினைவு படுத்தியிருக்கிறோம். இப்பொழுது முன்மொழிந்த தீர்மானத்தை நான் ஏற்கிறேன். வரவேற்கிறேன். இது சரியானது. நெஞ்ச நிறைவோடு சொல்கிறேன். ஒரு கம்யூனிஸ்ட் என்றால் எதுவாக இருந்தாலும் எதிர்க்கிறது, பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதுகாக்கிறார்களா இரண்டு கம்யூனிஸ்டும்? பத்திரிகைச் சுதந்திரம் என்றால் எது? உண்மைக்குப் புறம்பானதையும் புரட்டையும் எல்லாம் எழுதுவதற்கு [illegible] தான் பத்திரிகைச் சுதந்திரமா? ஆகவே, அவர்களுக்கு உள்நோக்கம்

இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கு. தமிழரசன் அவர்கள் கூட சொன்னார்கள். இந்த கம்யூனிஸ்டுகள் எல்லாம் இப்படி என்றும் இன்னும் சில மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். நான் சபையில் மிக பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன், 3 கம்யூனிஸ்டு உறுப்பினர்கள் இருக்கிறோம். அவர் ஒன்று, அவர் ஒன்று, நான் ஒன்று. ஆனால் மொத்தமாக கம்யூனிஸ்டு என்று அடித்து விடாதீர்கள். (சிரிப்பு) அவர் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு. அவர் இந்திய கம்யூனிஸ்டு, இரண்டு பேரும் கருணாநிதி கம்யூனிஸ்டு. (சிரிப்பு) நான் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியோடு, முதலமைச்சர் அவர்களோடு ஜனநாயக உணர்வுகளோடு இருக்கிற ஐக்கிய கம்யூனிஸ்டு (மேசையைத் தட்டும் ஒலி). அதைக் கொஞ்சம் பிரித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த அவை முன்னவர் அவர்களுடைய தீர்மானத்தை ஏற்கிறேன் என்று கூறி, நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

பிற்பகல் 12-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கடைசியாக மாண்புமிகு உறுப்பினர் பேசிய **என்கிற வார்த்தை வேறுவிதமாக அதிலே வந்திருக்கிறது. அது உண்மைக்குப் புறம்பானது என்று மாற்றப்படுகிறது. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்யூனிஸ்டுகள் பற்றி சொல்ல வேண்டும் என்றால் இப்போது சோவியத் யூனியனில் கம்யூனிஸ்டு கட்சி ஆட்சி போனதற்குப் பிறகு தான் பத்திரிக்கைச் சுதந்திரமே வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தின் மீது ஒருசில கருத்துக்களை முன்வைக்க—உழவர் உழைப்பாளர் கட்சியின் கருத்துக்களை முன் வைக்க வாய்ப்பு அளித்தமைக்கு நன்றிதனைக் கூறிக் கொண்டு இன்று நம்மிடையே இருக்கின்ற பிரச்சினை இந்த அவையினுடைய உரிமை காக்கப்பட வேண்டுமா என்பதுதான். இதிலே எதிர்க்கட்சியாக செயல்படுபவர்கள் குறிப்பாகச் சொல்லப் போனால் மார்க்சிஸ்டு, இந்திய கம்யூனிஸ்டு தோழர்கள் தி.மு.க. வினருக்கு ஒரு ப்ராக்சியாக

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பட்டது.



தி.மு.க. இந்த அவையிலே இப்போது இடம் பெறவில்லை, மக்களால் நிராகரிக்கப்பட்டு இருக்கின்ற இந்த சூழ்நிலையிலே அவர்களுக்கு ஒரு ப்ராக்சி வார் நடத்துவதற்கு அந்த தி.மு.கழகத்தினுடைய பத்திரிக்கையினுடைய கருத்துக்களைச் சொல்லுகின்ற, பத்திரிக்கையினுடைய சுதந்திரத்தை மட்டுமே காக்கவேண்டும் என்ற நோக்கத்திலே இங்கே கருத்துக்களைச் சொன்னார்கள். அந்த மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியும் பல கட்சி ஜனநாயக முறையையே ஏற்றுக்கொள்ளாத கட்சிகள். அவர்கள் மட்டுமே இந்த அவையில் இருந்தால் நிச்சயமாக இப்படி பத்திரிக்கைகள் எழுதுவதை, பத்திரிக்கைகள் நடத்துவதை கம்யூனிஸ்டு கட்சிக்கு அல்லாத மாற்று கருத்துக்களைச் சொல்லுகின்ற பத்திரிக்கைகளை அவர்கள் ஏற்றுக் கொள்வார்களா, நாட்டில் விட்டு வைப்பார்களா, என்பதை இங்கே சிந்தித்துப் பார்க்க வேண்டும். கம்யூனிஸ்டு கட்சி ஆட்சி நடைபெறுகின்ற மாநிலங்களில் எல்லாம் பத்திரிக்கைகளுக்கு சுதந்திரமே இல்லை; எழுத்துரிமை இல்லை; பேச்சுரிமை இல்லை. சொல்லப் போனால் கம்யூனிஸ்டுகள் அல்லாதவர்கள் தேர்தலிலே நிற்பதற்கு வாய்ப்பே இல்லை. அப்படிப்பட்ட கம்யூனிஸ்டு கட்சியினர் இன்று தி.மு.க.வுக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

இங்கே சட்டப் பேரவைக்கும் நீதிமன்றத்திற்கும் இடையே மோதலை உருவாக்குவதையும், சட்டப்பேரவைக்கும் பத்திரிக்கைத் துறைக்கும் இடையே மோதலை உருவாக்குகின்ற நிலைமையையும் இவர்கள் உருவாக்கி வருகிறார்கள். இங்கே உள்ள பிரச்சினை தமிழக அரசுக்கும் பத்திரிகைக்கும் உள்ள பிரச்சினை அல்ல. தமிழக அரசுக்கும் நீதிமன்றத்திற்கும் உள்ள பிரச்சினை அல்ல. அது அவைக்கும் பத்திரிக்கைக்கும் உள்ள பிரச்சினை. அதிலே கூட இங்கே பத்திரிக்கை நிருபர்கள், எல்லா பத்திரிக்கை நிருபர்களுமே இந்த அவையில் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அப்படி இருக்கின்றபோது எல்லா பத்திரிக்கை நிருபர்களின் கண்ணுக்கும் தெரியாத ஒன்று தி.மு.க. பத்திரிக்கைகளுக்கு மட்டும் தெரிந்து ஒரு சட்டமன்ற உறுப்பினரை இன்னொரு சட்டமன்ற உறுப்பினர் தாக்கினார் என்ற தவறான ஒரு செய்தியை அவர்கள் வெளியிட, அதற்கு சட்டமன்றமும் அவர்களுக்கு வாய்ப்பு அளித்து, இதற்கு வருத்தம் தெரிவித்துக் கொள்ள வாய்ப்பு கொடுத்தும் கூட அவர்கள் உண்மைக்குப் புறம்பானதை எழுதிவிட்டு வருத்தம் கூட தெரிவிக்காத நிலையிலே அவர்கள் இப்போது நீதிமன்றத்திற்கு சென்று இருக்கிறார்கள். இந்த சட்டமன்றத்தால் இயற்றப்படுகின்ற சட்டங்களை நிறைவேற்றுவது தான் நீதிமன்றம். இந்தச் சட்டமன்றத்திற்கு வந்திருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த சட்டமன்றம், இன்று தமிழகத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தலைமையில் இன்று இதுவரை இல்லாத அளவுக்கு எதிர்க்கட்சிகள் இல்லாத ஒரு

அவையில் இங்கே மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி ஏற்று இருக்கின்ற அளவுக்கு இங்கே மக்கள் வாக்கு அளித்தும் கூட—இதுவரைக்கும் வாக்கு அளிக்கின்றபோது கூட சில நேரங்களில் ஆட்சிக்கு வந்திருக்கின்ற கட்சிகள் கூட பெரும்பான்மை மக்களுடைய வாக்குகள் இல்லாமல் 50 சதவீதத்திற்கு மேல் வாக்கு இல்லாமல் வந்திருப்பார்கள். இன்று அப்படியில்லாமல் மிகப் பெரும்பான்மை பலத்தோடு வந்திருக்கின்ற இந்த ஆட்சிக்கு ஒரு அவப் பெயரை உருவாக்க வேண்டும் : இந்த ஆட்சி, தான் வாக்குறுதி கொடுத்த கோரிக்கைகளையெல்லாம் மக்களுக்கு ஒன்றன்பின் ஒன்றாக இந்த அவைக் கூட்டத்திலேயே நிறைவேற்றி வந்திருக்கிறது.

பிற்பகல் 12—20

கடைசியாக, விவசாயப் பெருமக்களுக்கு 69 கோடி ரூபாயை வாக்களித்ததற்கு இணங்க ஏற்றுக்கொண்டு, இந்தச் சட்ட மன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள், அதிலும் குறிப்பாகச் சொல்லப் போனால் கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்களும் கேட்டுக் கொண்ட அந்த விவசாயக் கடன் தள்ளுபடியைக்கூட இன்று அறிவித்து இருக்கிறார்கள். இப்படிப்பட்ட சாதனைகளையெல்லாம் நிறைவேற்றி வருகின்ற இந்த அரசிற்கு அவப் பெயரை உருவாக்க வேண்டும் ; அதற்கு ஒரே வழி பத்திரிக்கையை அரசோடு மோத விடுவது என்ற முறையிலே இந்த அவையின் தீர்மானத்தை அரசின் தீர்மானம் என்று அவர்கள் முன்னுக்குப் பின் முரணாக இங்கே பேசிக்கொண்டு இருக்கிறார்கள். இந்த முறையிலே இந்த அவை என்பது எல்லா சட்டமன்ற உறுப்பினர்களையும் உள்ளடக்கியது. அதிலே, கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் உள்ளடங்கி இருக்கிறார்கள். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் '' உரிமை மீது ஆண்மை பாராட்டாதவர்களுடைய சாந்தம் பெருமையின் பிணக்கில் பிறந்திடும் சீதனம் '' என்று சொன்னார்கள். உரிமையின்மீது ஒரு தனிப்பட்ட மனிதன்கூட தன்னுடைய ஆண்மையைப் பாராட்ட வேண்டும். ஆனால் அப்படிப்பட்ட உரிமையின் மீது ஒரு அவையே பாராட்டாமல் விட்டுவிட்டால் இந்த அவையைப்பற்றி என்ன வேண்டுமானாலும் வெளியிலே எழுதுவது என்பதை அனுமதித்து விட்டால் இந்த அவையிலே இருக்கின்ற உறுப்பினர்கள் அவைக்கு வெளியே இன்று அவமானப்படுத்தப்படுகிறார்கள் : கேவலமாக விமர்சிக்கப்படுகிறார்கள்; கேவலமாக எழுதப்படுகிறார்கள் சில மஞ்சள் பத்திரிகைகளால், தரமான பத்திரிக்கைகள் நிறைய இருந்தும்கூட இன்று தரம் குறைந்த பத்திரிகைகள் ஏராளமாக புற்றீசல்கள்போல முளைத்து இருக்கின்றன. இப்படிப்பட்ட பத்திரிக்கைச் சுதந்திரம், இந்த நாட்டிலேகூட, இந்தியாவிலேகூட கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததா என்றால் நிச்சயமாக இல்லை என்று சொல்லலாம். இந்தப் பத்திரிகைகள் எப்போது முளைத்து இருக்கிறன என்றால், கடந்த ஒரு சில ஆண்டுகளுக்குள்ளேதான். என்னவேண்டுமானாலும் எழுதலாம்; அரசியல்





வாதிகளை மக்கள் மத்தியிலே தவறாகப் படம்பிடித்து காட்டுவதற்கே இன்று பத்திரிகைகள் பல முளைத்து இருக்கின்றன. ஆனால், அதே பத்திரிக்கைகளிலே என்ன சொல்கிறார்கள் என்றால் தேர்தல் நடைபெறவில்லை. உள்ளாட்சிக்குத் தேர்தல் நடைபெறவில்லை. கூட்டுறவுக்கு தேர்தல் நடைபெறவில்லை என்றால். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பழனிசாமி, பத்திரிகைகளிலே என்ன எழுதுகிறார்கள் என்று ரொம்ப விரிவாகப் போக வேண்டாம்.

திரு. நா. சா. பழனிசாமி ; தேர்தலை நடத்த வேண்டும் என்று சொல்லுகிறார்கள். தேர்ந்தெடுத்து வந்த உறுப்பினர்கள்மீது களங்கம் கற்பிக்கிறார்கள். ஓட்டு போடுகிறவர்கள் மக்கள். மக்கள் ஒட்டுபோட்டு வந்த உறுப்பினர்களை இப்படி அவமானப்படுத்துவதற்கு வெளியே அவர்களுக்குச் சுதந்திரம் இருந்தும்கூட. உள்ளேயும் அந்தச் சுதந்திரம் என்பது, உள்ளே நடக்காத ஒன்றை நடந்ததாக எழுதுவது என்பது உறுப்பினர்களுக்கு மேலும் பாதுகாப்பில்லாத நிலையை உருவாக்கி வருகிறது. எனவே இந்த சட்டப்பேரவையினுடைய உரிமையைக் காப்பதற்காக மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை ஆதரித்து முடிக்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. பி. சந்திரசேகர்.

*திரு. வி. பி. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் குறிப்பிடுகின்றபோது, இங்கே நடக்காத செய்தியை திராவிட முன்னேற்றக் கழக சார்புடைய பத்திரிகையில் வெளியிட்டது என்று சொன்னார். இங்கே தாக்கப்பட்டதாக உண்மைக்குப் புறம்பாகச் சொல்லப்பட்ட செய்தியின் அடிப்படையில் அந்த உறுப்பினர் சார்புடைய கட்சியைச் சேர்ந்த பத்திரிகையே இந்தச் செய்தியை வெளியிடவில்லை. கோவை மாலைமுரசு வேண்டுமென்றே உண்மைக்குப் புறம்பான செய்தியை வெளியிட்டு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். திருநாவுக்கரசு.

*திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அரசியல் சட்டம் [illegible] 194—சட்ட மன்றத்தில் உறுப்பினர்கள் உரையாற்றவும், வாக்களிக்கவும்

உரிமை தருகிறது. அதை மீறி அல்லது அதைத் தொடர்ந்து யாரும் நீதிமன்றத்திற்குச் சென்று வழக்கு தொடர முடியாது என்பதற்கான முழு உரிமையையும் இந்திய அரசியல் சட்டம் ஆர்ட்டிகிள் 194 வழங்குகிறது. அதை இந்தச் சட்டமன்றம் ஏற்றுக்கொள்கிறது. இந்தச் சட்டமன்றத்திலே இருக்கிற உறுப்பினர்கள் அத்தனை பேரும் ஒத்துக்கொள்கிறோம். அந்த மேலாண்மையை ஒத்துக்கொள்கிறோம். அதே நேரத்தில் இப்போது உச்சநீதிமன்றத்திலே ஏற்பட்டிருக்கிற வழக்கு என்பது ஆர்ட்டிகிள் 21-இன் பிரகாரம், ஆர்ட்டிகிள் 21-இலே "No person shall be deprived of his personal liberty except according to the procedure established by law....." என்ற ஆர்ட்டிகிள் 21-இன் பிரகாரம், அதாவது வெளியே, சட்டமன்றத்திற்குள்ளே நடந்த பேச்சுவார்த்தையைப் பற்றியோ அல்லது பேசியதன் மீதோ இப்போது நீதிமன்றத்திலே வழக்கு இல்லை. வெளியே, பத்திரிக்கையிலே வந்த செய்திகளை யொட்டி நீங்கள் எடுத்த அல்லது இந்த அவை எடுத்த நடவடிக்கையை ஒட்டி அவர்களுக்கு முதன்மையான வாய்ப்பு தரப்படவில்லை என்றுதான் ஆர்ட்டிகிள் 21-இலே அவர்கள் நீதிமன்றத்திலே வழக்கு தொடர்ந்திருக்கிறார்கள். அப்படி வாய்ப்பு தரப்பட்டிருக்கிறதா என்று தெரிந்துகொள்ள சட்டமன்றத்தினுடைய செயலாளரை அழைக்கிறார்கள். நீங்கள் கூட இப்போது கொண்டுவந்திருக்கிற தீர்மானத்திலே, செயலாளருக்குப் பதிலாக வழக்கறிஞர் அங்கே ஆஜர் ஆவார் என்று, சொல்லியிருக்கிறீர்கள். அதாவது, செயலாளருக்குப் பதிலாக வழக்கறிஞர் ஆஜரானாலும் ஒன்றுதான் அல்லது செயலாளரே ஆஜரானாலும் ஒன்றுதான். It makes no difference. எனவே அவருக்குப் பதிலாக அவர் சார்பிலே அட்வகேட் ஆஜர் ஆகப் போகிறார்.

பிற்பகல் 12-25

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> தீர்மானத்தில், "செயலாளருக்காக ஆஜர் ஆவார்" என்று இருக்கவில்லை. அவர்கள் கேட்டிருக்கின்ற விவரங்கள் வழக்கறிஞர் மூலம் தரப்படும் என்றுதான் இருக்கிறதே தவிர, "செயலாளருக்காக வழக்கறிஞர் ஆஜர் ஆவார்" என்று தீர்மானத்திலே இல்லை.

<u>திரு. எஸ். திருநாவுக்கரசு :</u> மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, "உச்ச நீதிமன்றம், இந்தப் பேரவையின் உரிமைகளைப் பாதிக்காத வகையில், விளக்கங்களையோ, தகவல்களையோ அறிந்து கொள்ள விரும்பினால், அவற்றை அரசு வழக்கறிஞர் மூலம் தெரிவிக்க இந்தப் பேரவை எப்போதும் ஆயத்தமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறது" இதுதான் தீர்மானத்தில் உள்ளது.



<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நீங்கள் "செயலாளருக்காக" என்று சொன்னீர்கள். "செயலாளருக்காக" என்று அங்கே வரவில்லை.

<u>திரு. எஸ். திருநாவுக்கரசு :</u> செயலாளரைக் கூப்பிட்டிருப்பதே இந்த நிகழ்ச்சிகளுக்காகத்தானே கூப்பிட்டிருக்கிறார்கள். ஸ்பீக்கரைக் கூப்பிட முடியாது. ஸ்பீக்கர், அவருக்கு உரிமை இருக்கிற காரணத்தினாலே ஸ்பீக்கர் அல்ல; சட்டமன்றத்திலே செயலாளர் அழைக்கப்பட்டிருக்கிறார். நான் சொல்ல வந்தது, அதாவது இதுபோல ஏற்கனவே வெளியே பத்திரிகைகள் மீது உரிமை மீறல் இருக்கிறது என்று இந்தக் குழு அல்லது குழுவினுடைய பரிந்துரையை ஏற்று சட்டமன்றம் முடிவு செய்ததே அதற்கான வாய்ப்பு ஆர்ட்டிகிள் 21 பிரகாரம் பத்திரிகையாளர்களுக்கு அதற்கான வாய்ப்பு முழுமையாகத் தரப்பட்டதா என்பதுதான் உச்ச நீதிமன்றத்திலே ஆய்விலே இருக்கிறது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அவை முன்னவரவர்கள்.

*<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒன்றை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். சட்டமன்றத்தைப் பொறுத்தோ அல்லது குழுக்களைப் பொறுத்தோ நடைமுறையில் ஏதாவது தவறுகள் இருந்தாலும், நடைமுறையில் மாறுதல்கள் இருந்தாலும் அதை இந்த அவைதான் முடிவு கட்ட வேண்டுமே தவிர, நடைமுறை தவறு என்று எந்தக் கோர்ட்டும் முடிவு கட்ட முடியாது என்பது தான், நான் எடுத்துத் தெரிவித்த தீர்ப்புகளிலெல்லாம் வருகின்ற ஒன்று. அப்படியே நடைமுறை தவறாக இருந்தாலும் கூட சுப்ரீம் கோர்ட் கேட்க முடியாது; இந்த அவையிலே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் கேட்கலாம். உறுப்பினர் தீர்மானம் கொண்டு வரலாம். எத்தவகையிலேயும் அந்த மாற்றியமைக்க, திருத்தியமைக்க இந்த அவைக்கு உரிமை உண்டே தவிர நீதிமன்றத்திற்கு உரிமையில்லை என்பதுதான்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. டி. எம். ரங்கராஜன்.

*<u>திரு. டி. எம். ரங்கராஜன்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, The rights guaranteed under Part III of the Constitution i.e. the Fundamental Rights are subject to Article 194 என்று உச்சநீதிமன்றம் தன்னுடைய தீர்ப்பு AIR 1959 Supreme Court, page 395-இலே சொல்லியிருக்கிறது. "உச்ச நீதிமன்றம, ஒருவருடைய உரிமை பறிக்கப்பட்டாலும், அசெம்பளி புரோசிடிங்க்ஸைப் பொறுத்தவரையில் அது தலையிட முடியாது" என்று உச்ச நீதிமன்றம், 1960 ஆம் வருஷத்திலே தன்னுடைய தீர்ப்பிலே

1186 பக்கத்திலேயும் விளக்கிச் சொல்லப்பட்டிருக்கிறது என்பதையும் தங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் ஏற்கெனவே பேரவை முன்னவர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். Article 119(4)-இலே இருக்கக்கூடிய உரிமைகள் அத்தனையும் absolute அதே நேரத்திலே அவர் சொல்லுகின்ற அந்த Fundamental Rights என்பது "conditional" தான். பல்வேறு விதிகளிலே அது குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த விதியிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதுதான் அவர் சொல்கிறார். கேட்டுக் கொள்வோம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் சொன்னது, அவர் சொன்னது, ஆர்ட்டிகிள், பண்டமெண்டல் ரைட் எல்லாம் ஆர்ட்டிகிள் 12, 13. நான் சொன்னது மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, "Protection of life, personal liberty" அதிலே வருகிற 3-வது பகுதியிலே வருவதைத்தான் நானும் சுட்டிக்காட்டினேன். நான் சொல்ல வருகிற யோசனை, ஒன்று, ஏற்கனவே நீங்கள் வழக்கறிஞரை அனுப்பலாம் என்று முடிவு செய்கிறபொழுது, திரும்பவும் மீண்டும் திரும்பச் சொல்ல விரும்பினால், இந்தச் சட்டமன்றத்திலே ஆற்றிய உரைபற்றியோ அல்லது இந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் மீது இவ்வாறு உரையாற்றினார்கள், அது தவறு என்றோ எந்த வழக்கும் இல்லை. 194—அதுதான் ஸ்பெசிபிக்காக இருக்கிறது. இங்கே பேசப்படுகிற பேச்சு, முதலமைச்சரோ, அமைச்சர்களோ, சட்டமன்ற உறுப்பினர்களோ, யார் இந்தச் சட்டமன்றத்திலே பேசினாலும் அது குறித்து வெளியே வழக்கு மன்றத்திலே, நீதிமன்றத்திலே வழக்கு தொடர முடியாது. எனவே, அந்த உரிமை சட்டமன்றத்திற்கு, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கிறது. இதிலே இப்பொழுது நீதிமன்றத்திலே விவாதத்திலே இருப்பது சட்டமன்றத்திற்கு வெளியே பத்திரிகையாளர்கள் தவறு செய்ததாக, உரிமை மீறியதாக அவையினுடைய உரிமையை மீறியதாகக் கொண்டு வரப்பட்ட உரிமை மீறலின் மீது உரிமைக்குழு நடவடிக்கை எடுத்து, அதனுடைய சிபாரிசின் பேரிலே சட்டமன்றம் நடவடிக்கை எடுத்திருக்கிறது அல்லவா? அந்த நடைமுறைகள் சரியான வாய்ப்பு தரப்பட்டு ஆர்ட்டிகிள் 21 பிரகாரம் சரியான வாய்ப்பு......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சரவர்கள்.



*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பற்றி Article 212 உட்பிரிவு (1)-இல் "The validity of any proceedings in the legislature of a State shall not be called into question on the ground of any alleged irregularity of procedure." என்று தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 12-30

இந்த அவையின் உரிமைக் குழுவின் முன் இந்தப் பத்திரிகையாளர்கள், சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் ஆஜராவதற்கும், விளக்கங்களைக் கூறுவதற்கும் போதுமான அவகாசங்கள் கொடுக்கப்பட்டன என்பது ஏற்கனவே இந்த அவைக்குத் தெரியும். ஆனால், அத்தகைய அவகாசங்கள் கொடுக்கப்பட்டனவா இல்லையா என்று தான் இன்றையதினம் சுப்ரீம் கோர்ட் விசாரிக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் கூறுவதும் தவறு. அப்படியே விசாரிப்பதாக இருந்தாலும் under Article 212, உட்பிரிவு (1) 'The validity of any proceedings in the Legislature of a State shall not be called in question on the ground of any alleged irregularity of procedure" என்பது இருக்கிறது. எனவே, அப்படியே ஏதாவது irregularity நடந்திருந்தால் கூட, அதை மீண்டும் இந்த அவைதான் சரி செய்ய வேண்டுமென்றுதான் இருக்கிறதே யொழிய, இதைப்பற்றி சுப்ரீம் கோர்ட்டோ, வேறு எந்த நீதிமன்றமோ விசாரிக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல இந்த அவையிலே நாள் தோறும் வைக்கப்படுகிற ஏடுகள்கூட இந்த அவையினுடைய ப்ரொஸீடிங்ஸ் ஆகிவிடுகிறது. அப்படியிருக்கிறபோது இந்த அவை எடுத்த முடிவை, தீர்மானத்தை அவையினுடைய ப்ரொஸீடிங்ஸ் இல்லை என்பதைப் போல உங்களுடைய பேச்சு இருக்கிறது. அது அவையினுடைய ப்ரொஸீடிங்ஸ்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த Fundamental Rights-லே Article 13 பிரகாரம் 'Laws inconsistent with or in derogation of the Fundametal rights" என்கிற தலைப்பிலே any law, whether it is any Ordinance, order, bye-law, rule, regulation notification, custom or usage எதுவாக இருந்தாலும் கூட, அதன் கீழே பாதிக்கப்படுகிறோம் என்கிறபோது, உச்சநீதிமன்றத்திற்குப் போவதற்கு கான்ஸ்டிட்யூசன் பிரகாரம் வாய்ப்பு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் மட்டும் சொல்லுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது ஒன்று. ஆணை பிறப்பித்தாலோ அல்லது வெளி நடவடிக்கை எடுத்தாலோ, சி.பி.சி.இல், ஐ.பி.சி. இல் தவறான நடவடிக்கைகள் இருந்தால் அதைக் கட்டுப்படுத்தி, அடிப்படை உரிமையை நிலைநாட்ட வேண்டியது ஆர்டிகிள் 19 மற்றைய பிரிவுகளுக்குக் கீழே வருகிறது. 19-வது பிரிவுக்கு எவ்வளவு மதிப்பு உண்டோ அவ்வளவு மதிப்பு 105, 194-வது பிரிவுகளுக்கும் உண்டு. பண்டமெண்டல் ரைட்ஸ் என்று வருகிறபோது கான்ஸ்டிட்யூஷனுக்கு உள்ளே வந்திருக்கிற மூன்று கிளாஸ்களுக்குமே சம மதிப்புத்தான் உண்டு. ஆகவேதான் இந்த சந்தேகங்கள் இருந்தால் அமெண்ட்மெண்ட் கூடச் செய்யலாம் என்று பேரவைத் தலைவர்கள் மாநாட்டிலே சொல்லப்பட்டது. டாக்டர் அம்பேத்கார் அவர்கள் விளக்கம் சொல்கிறபோதுகூட பண்டமெண்டல் ரைட்ஸ்—னுடைய கிளாஸுக்கு எவ்வளவு மதிப்பு உண்டோ அவ்வளவு மதிப்பு 105, 112, 194 ஆகிய பிரிவுகளுக்கும் உண்டு என்று தெரிவித்திருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்; பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே வார்த்தை நான் அதிகமாகப் பேச விரும்பவில்லை. Article 194 என்பது it is a special right Articles 11 to 29 deal with Fundamental Rights and Article 194 gives a special right.

ஸ்பெஷல் ரைட்ஸுக்கு என்ன சிறப்பு அதிகாரம் என்பதிலே பல சுப்ரீம் கோர்ட் தீர்ப்புகள் இருக்கின்றன. அதை நான் பேசும்போது சுட்டிக்காட்டுகிறேன். குழப்பிக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. 194 என்பதோ, 205 என்பதோ, 208 என்பதோ It is a special right.

*திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்ததைச் சுருக்கமாகச் சொல்கிறேன். இரண்டே இரண்டு யோசனை. ஒன்று, ஏற்கனவே செயலாளருக்குப் பதிலாக நீங்கள் வழக்கறிஞரை அனுப்புகிறோம் என்கின்றபோது......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து நீங்கள் திரும்பத் திரும்பக் குழப்பக் கூடாது. செயலாளருக்குப் பதிலாக என்று நான் சொல்லவேயில்லை. அதாவது சுப்ரீம் கோர்ட்





சில விளக்கங்களைக் கேட்க விரும்புகிறது என்றால் அந்த விவரங்களை இந்த முறையிலே நாம் தெரிவிப்போம் என்றுதான் சொல்லியிருக்கிறோம். நீங்களாகவே, செயலாளருக்குப் பதிலாக என்று தீர்மானம் போட்டிருக்கிறீர்கள் என்று போய்க் கொண்டிருப்பது சரியல்ல.

*திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சுப்ரீம் கோர்ட் விளக்கங்கள் வேண்டும் அல்லது விளக்கம் தேவைப்படுகிறது என்ற காரணத்தினாலே தான் செயலாளரை வரச் சொல்லியிருக்கிறது. இப்போது இங்கே எடுக்கிற தீர்மானத்தின் மூலமாக, சட்டமன்றச் செயலாளர் வரமாட்டார். ஆனால், விளக்கங்கள் வேண்டுமானால் எங்களுடைய அரசு வழக்கறிஞர் தருவார் என்று தீர்மானத்திலே நேரிலேயாக சுப்ரீம் கோர்ட் அழைப்பை ஏற்றோ அல்லது உத்தரவை ஏற்றோ அல்லது சம்மனை ஏற்றோ செயலாளர் வரமாட்டார். செயலாளருக்குப் பதிலாக வழக்கறிஞர் (குறுக்கீடு). Summoned party is only the Assembly Secretary. Why are you sending the Advocate ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் தீர்மானத்தைப் பாருங்கள். தீர்மானத்திலே இருக்கிறதைப் பேசுங்கள். நீங்களாக ஒரு கருத்தை வரவழைத்துக் கொண்டு பேச வேண்டியதில்லை.

*திரு. எஸ். திருநாவுக்கரசு : தீர்மானத்திற்குரிய அவசியம் என்ன? செயலாளரை அழைத்ததற்கு முடியாது என்று போடுவதுதான் தீர்மானம். சரி. செயலாளரை அனுப்ப மாட்டோம் என்றால் அத்துடன் நிறுத்தவில்லை நாம். செயலாளரை நீங்கள் கேட்டீர்கள். உங்களுக்கு இன்பர்மேஷன்தானே வேண்டும். அதை அட்வொகேட் மூலமாக அனுப்புகிறோம் என்கிறீர்கள். அதைத்தான் நான் சொல்ல வருகிறேன். ஏற்கனவே உரிமை மீறல் என்பதற்கு நாம் முடிவு செய்து விட்டோம் அல்லவா? அந்த உரிமை மீறல் என்று முடிவு செய்யப்பட்டதை procedure follow பண்ணப்பட்டு ஒழுங்காக நடந்தது. செயலாளர் மூலம் அங்கே உச்ச நீதிமன்றத்திலே விளக்கங்களைத் தருவதில் தவறு இல்லை. எனவே, 194-ஐ இது பாதிப்பது அதாவது, அநாவசியமாக சுப்ரீம் கோர்ட்டுக்கும், சட்ட மன்றத்திற்கும் முரண்பாடு ஏற்பட்டது என்கிற கருத்தை அல்லது முரண்பாட்டைத் தவிர்ப்பதற்கு உதவும். இது நம்பர் ஒன்று.

பிற்பகல் 12-35

இரண்டாவது, ஏற்கனவே ஆந்திராவில் இது போன்ற ஒரு முறை வந்து அதற்குப் பின்னர் உச்ச நீதிமன்றத்திற்கும், [illegible] சட்டமன்றத்திற்கும் தகராறு வந்தபோது [illegible]

பத்திரிகைகள் மீது கொடுக்கப்பட்ட அந்தத் தண்டனையைப் பொறுத்தவரையில் அவர்களை அச்சுறுத்தி விட்டுவிட்டு அதோடு அந்தப் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைத்து மேற்கொண்டு சுப்ரீம் கோர்ட்டுக்கும், சட்ட மன்றத்திற்கும் தகராறு வராமல் சுமுகமாகத் தீர்த்துக் கொண்டார்கள். அது போல் இதிலே பாதிக்கப்பட்டிருக்கிற அல்லது சம்பந்தப்பட்டிருக்கிற பத்திரிகைகளுக்கு எச்சரிக்கை விடுத்து இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்து உச்ச நீதிமன்றத்திற்கும், சட்ட மன்றத்திற்கும் ஏற்பட்டு இருக்கிற இந்த முரண்பாட்டைத் தடுக்கலாம் என்று இன்னொரு யோசனையையும் கூறி அமர்கிறேன்.

மாண்புமி டாக்டர் ஜெ. ஜெயலலிதா; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடு சுதந்திரம் பெற்ற பிறகு இந்தியாவில் உள்ள எந்தச் சட்டமன்றப் பேரவையும் தன்னுடைய செயலாளரை இதுவரையில் உச்ச நீதிமன்றத்திற்கோ, உயர் நீதிமன்றத்திற்கோ அல்லது எந்த நீதிமன்றத்திற்கோ அனுப்பியது இல்லை. இப்போது மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் கூறுகிற கருத்தின்படி நம்முடைய சட்டப் பேரவைச் செயலாளரை உச்ச நீதிமன்றத்திற்கு அனுப்பினோம் என்றால் இந்தியா முழுமையிலும் உள்ள அத்தனை சட்டப் பேரவைகளுக்கும் இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி வழங்கப்பட்டிருக்கிற தனித் தன்மையை, தனி அதிகாரத்தை, உரிமையை நாம் குறைத்து விட்டோம் என்ற குற்றச்சாட்டுக்கு இந்தத் தமிழக சட்டப் பேரவை ஆளாகும் என்பதை மட்டும் இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பழியை ஏற்றுக்கொள்ள இந்தச் சட்டப் பேரவை நிச்சயமாகத் தயாராக இல்லை என்பதையும் இந்த நேரத்தில் நான் வலியுறுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகத் தெளிவாக இதிலே நாம் போட்டிருக்கிறோம். இதே போல் அவை உரிமை மீறல் பிரச்சினைக்காக உச்ச நீதிமன்றத்தில் உள்ள, இந்தப் பேரவை தொடர்பான அனைத்து வழக்குகளிலும் பேரவையின் எந்த உறுப்பினரோ அல்லது பேரவைச் செயலாளரோ பேரவைச் செயலகத்தின் ஏனைய அதிகாரிகளோ எவ்வித நோட்டீஸ்களையும், அழைப்பு ஆணைகளையும், பிற ஆணைகளையும், அறிவுறுத்தல்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை என்று இப்பேரவை தீர்மானிக்கிறது. உச்ச நீதிமன்றம் இந்தப் பேரவையின் உரிமைகளைப் பாதிக்காத வகையில் — பாதிக்கிற விளக்கங்கள் கேட்டால் தரப்போவதில்லை. பாதிக்கிற தகவல்



களைக் கேட்டால் தரப்போவதில்லை. பாதிக்காத வகையில் —விளக்கங்களையோ, தகவல்களையோ அறிந்து கொள்ளவிரும்பினால் அவற்றை அரசு வழக்கறிஞர் மூலம் தெரிவிக்க இந்தப் பேரவை எப்போதும் ஆயத்தமாக இருக்கிறது என்பதைத் தெரிவிக்கிறோமே தவிர அது கூட அந்த நோட்டீஸுக்கும் அல்ல, அவர்களுடைய அழைப்பு ஆணைக்கும் அல்ல; அவர்களுடைய அச்சுறுத்தல்களுக்கும் அல்ல.

*திரு. டி. எம். ரங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Entering appearance on behalf of the Secretary is something different from furnishing information through an Advocate. ஏனென்று சொன்னால் ஒரு அட்வகேட் இன்டர்வீனராகவோ அமிக்கஸ் க்யூரியாகவோ கோர்ட்டுக்குச் சென்று அவர்கள் கேட்கிற தகவல்களைக் கொடுக்கலாம் என்று நியதி உள்ளது. அந்த முறையில்தான் மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு வழக்கறிஞரை அனுப்பலாம் என்று சொல்லியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். ஆண்டித் தேவர்.

திரு. எஸ். ஆண்டித் தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவரால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தத் தீர்மானத்தை அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் சார்பில் வழிமொழிவதோடு சில கருத்துக்களையும் நான் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில் அதாவது சட்டமன்றச் செயலாளரை சுப்ரீம் கோர்ட்டுக்கு அதாவது உச்ச நீதிமன்றத்திற்கு அதனுடைய சம்மனுக்கு உட்பட்டு அனுப்புவதில்லை என்பதைப் பொறுத்தவரையில் ஒரு நல்ல முடிவை பேரவை முன்னவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதாவது திட்டவட்டமாக நமது பேரவைச் செயலாளரை உச்ச நீதிமன்றத்திற்கு அனுப்ப முடியாது என்று சொல்லி இருக்கிறார்கள். அதன் மூலம் இந்தப் பேரவையினுடைய உரிமையைப் பாதுகாத்து இதன் இறையாண்மையையும் இன்றைக்கு இந்த மன்றம் காத்து இருக்கிறது என்ற பெருமையைப் பெற்றிருக்கிறது என்பதை நான் தெளிவுபடக் கூற விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதுமட்டுமல்ல, வெளியில் நடந்த விஷயத்தைப் பற்றி இந்த மன்றத்தில் நடந்த விஷயத்தைப் பத்திரிகைகள் எழுதியதற்காக இங்கே உரிமைப் பிரச்சினை கொண்டு வந்து, அவர்களுக்கு வாய்ப்பு இல்லாமல் உச்ச நீதிமன்றத்திற்குப் போய் இருக்கிறார்

கள் என்ற கருத்துப்பட பேசினார்கள். அப்படி அல்ல. அத் தனை சந்தர்ப்பங்களும் அவர்களுக்குக் கொடுத்தும் அவர்கள் இங்கே வரவில்லை என்ற நிலையைத் தெளிவுபடுத்தியிருக்கிறோம். பேரவை முன்னவர் அவர்கள் இந்தத் தீர்மானத்தைகொண்டு வரும்போது பல உச்ச நீதிமன்ற, உயர்நீதிமன்ற தீர்ப்புக்களை எடுத்துச் சொன்னார்கள். இந்திய அரசியல் சட்டத்தில் எக்ஸிக் யூட்டிவ், லெஜிஸ்லேச்சர், ஜுடிஷியரி என்ற அந்த மூன்றினுடைய இண்டிபென்டன்ஸ் என்ற அந்தத் தலைப்பில் தெளிவாகச் சொல்லி யிருக்கிறார்கள். இன்றைக்கு நாம் எடுக்கின்ற முடிவோ அல் லது இதற்கு முன்னதாக பேரவைத் தலைவர் எடுத்த முடிவோ உச்ச நீதிமன்றத்திற்கு எதிர்ப்பாக அல்ல. இந்தப் பேரவை யினுடைய உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காகத் தான் எடுக்கப்பட்டிருக்கின்ற முடிவு.

பிற்பகல் 12-40

பேரவை நடவடிக்கைகளில் திட்டவட்டமாக உச்ச நீதிமன் றம் தலையிடக்கூடாது என்று இருக்கிறது. அதே போன்று உச்ச நீதிமன்றத்தினுடைய நடவடிக்கைகளிலோ அந்த உச்ச நீதி மன்றத்தைப் பற்றியோ இந்த சபையில் கருத்தோ அல்லது அவர்களை விமர்சிக்கின்ற செயலையோ நாம் செய்யக்கூடாது. எனவே இது உச்சநீதிமன்றத்திற்கு எதிர் தீர்ப்பு அல்ல. நமது உரிமைப் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த மன்றத்தினு டைய உரிமை பாதிக்கப்பட்டிருக்கிறது. அதில் உச்ச நீதிமன் றம் தலையிடமுடியாது என்ற தீர்மானம்தான். இதை எதிர்த்து சிலர் வெளிநடப்பு செய்கிறார்கள். இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று கருதுகிறேன். இந்திய அரசமைப்புச் சட்டத்தில் ஜுடிஷியரி, லெஜிஸ்லேச்சர், எக்சியூடிவ் இந்த மூன்றுக்கும் உரிய விதி முறைகள் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இன் றைக்கு நாம் எடுத்திருக்கின்ற இந்த முடிவு, இந்த அவையினு டைய மரபை, இறையாண்மையை காப்பாற்றுகின்ற ஒரு திட்ட வட்டமான முடிவு. இது நல்ல முடிவு. இதை நான் வர வேற்று அமைகிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மாண்புமிகு உறுப்பினர், பண்ருட்டி இராமச்சந்திரன்.

<u>திரு. ச. இராமச்சந்திரன் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் முன் மொழிந்து இருக்கின்ற தீர்மானத்தில் 3 ஆம் பக்கத்தில், கடைசி பாராவில் பேரவையின் ஆணைகளை நிறைவேற்றி வருகின்ற பேரவைச் செயலாளர் உச்ச நீதிமன்றத்தின் ஆணையை ஏற்று 5—5—1992 அன்று உச்ச நீதிமன்றத்தில் ஆஜராக [illegible] அவசியம் இல்லை என்று இப்பேரவை தீர்மானிக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்கள்.



அதே போல, பக்கம் 4-ல், இந்த தீர்மானத்தில் செயல்படும் பாராவாக, உச்ச நீதிமன்றம் இந்த பேரவையின் உரிமைகளைப் பாதிக்காத வகையில் "withcut prejucice to the privileges of the House" விளக்கங்களையோ தகவல்களையோ அறிந்து கொள்ள விரும்பினால் அவற்றை அரசு வழக்கறிஞர் மூலம் தெரிவிக்க இந்த பேரவை எப்போதும் ஆயத்தமாக இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறது. ஆகவே உச்ச நீதிமன்றம் கேட் கின்ற விவரங்களை சட்டமன்ற உரிமைகளுக்கு கட்டுப்பட்டு தருவதற்கு இந்த பேரவை தயாராக இருக்கிறது. உச்ச நீதி மன்றம் கடந்த மாதம் 30-ம் தேதி கேட்டிருக்கிற விவரம், 5—2—1992 அன்று உரிமைப் பிரச்சினையில் உள்ள சம்பவம் நிகழ்ந்தபோது 11 உறுப்பினர்களும் இருந்தார்களா, இல்லை என்றால் யார் யார் இருந்தார்கள் என்ற விவரம்தான். ஆகவே உச்ச நீதி மன்றத்திற்கு விவரத்தைப் பெறுகின்ற உரிமை இருக் கிறது. அந்த விவரத்தை தருகின்ற உரிமையை சட்டமன்றம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆகவே, இதிலே ஓரளவுக்கு சட்ட மன்றத்தின் கட்டுந்த நிலையிலே இருந்து மாறுபட்டு இறங்கி வந்திருக்கின்றனர், அதை நான் வரவேற்கிறேன். உரிமைப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், அதை தீர்மானிப்பதற்கு முழு உரிமை சட்டமன்றத்திற்குத்தான் உண்டு. உரிமைப் பிரச் சினை சம்பந்தமான ஆய்வுகளையோ நடவடிக்கைக் குறிப்பு களையோ ஆய்ந்து பார்த்து முடிவெடுக்கக்கூடிய உரிமை சட்ட மன்றத்திற்கு மட்டுமே உண்டு. ஆனால் அதே நேரத்தில், உரி மைப் பிரச்சினையினுடைய முடிவின் அடிப்படையில் ஒரு குற்றத் திற்குத் தண்டனை வழங்குவது என்கின்ற முடிவுக்கு பேரவை வருகிறது. 'பெனால்டி புரோவிஷன்', தண்டனை வழங்குவது என்ற நிலை வருகிறபோது, அந்த தண்டனை, எந்த தண்டனை வேண்டுமானாலும் சட்டமன்றம் வழங்கலாம். யாரும் கேள்வி கேட்கக்கூடாது எந்த நீதி மன்றமும் கேட்கக்கூடாது என்று சொல்வது சரியாகாது. ஏனென்றால் உச்ச நீதி மன்றத்திற்கு அடிப்படை உரிமைகளை காக்கின்ற கடமை இருக்கிறது. ஆகவே ஒரு உதாரணத்திற்குச் சொல்கிறேன், நம்முடைய சட்டமன்றத்தை அல்ல. ஒரு உரிமைப் பிரச்சினையில் தூக் குத் தண்டனை விதிக்கிறோம் என்று ஒரு முடிவு எடுக்கிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள், அதை யாருமே கேட்கக் கூடாது, எந்த மன்றமும் கேட்கக்கூடாது என்று சொல்வது சரியாகாது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பிற்பகல் 12-45

ஆகவே, இயற்கை நீதியின் அடிப்படையிலேயும், அவருக்கு இருக்கின்ற right to life and liberty என்கின்ற [illegible] [illegible] கொடுக்கப்படுகின்ற தண்டனை தனக்கு அநீதியானது

தன்னுடைய உரிமையை பறிக்கக்கூடியவை. அதாவது அரசியல் சட்டம் ஒரு தனிப்பட்ட குடிமகனுக்கு கொடுத்திருக்கக்கூடிய ரைட்ஸை அனுபவிப்பதற்கு, அந்த உரிமையை பயன்படுத்துவதற்கு, it is a deterrent punishment, அதாவது பயமுறுத்தக்கூடிய அளவிலே தண்டனை இருக்கிறது என்று ஒருவர் முறையிடுகின்றபொழுது அதைக் கேட்கின்ற கடமை உச்ச நீதிமன்றத்திற்கு உண்டு. அதனாலேதான் இப்பொழுது மணிப்பூர் சட்டமன்றத்திலேகூட 7 பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் பதவி இழந்தார்கள் என்ற நிலை வந்தபொழுது அதுபற்றி உச்ச நீதிமன்றத்தில் அவர்கள் வழக்கு தொடுக்கவும், உச்ச நீதிமன்றம் பேரவைத் தலைவரையும், பேரவைத் துறையில் இருக்கக்கூடிய செயலாளரையும், பேரவை நடவடிக்கைகளையும் கேட்டு பெற்று அதிலே 7 சட்டமன்ற உறுப்பினர்கள் பதவி நீக்கம் செல்லாது, திரும்பவும் பதவியை தர வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் சொல்லி அந்தப் பேரவையும் அந்தப் பதவியை திரும்ப தந்திருக்கிறது, இன்னும் சில உறுப்பினர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள், கட்சித் தாவல் தடுப்பு சட்டத்தின் அடிப்படையிலே. அது இன்னும் ஆய்விலே இருக்கிறது. நாளையதினம் மணிப்பூர் சபாநாயகரையும் உச்ச நீதிமன்றத்திற்கு வர வேண்டுமென்று அழைப்பு விடுத்திருக்கிறது. ஆக, அது ஒன்று.

அதுபோல, பீகார் சட்டமன்றத்தில் இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களைப் பதவியிலேயிருந்து நீக்கம் செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அவர்கள் உயர் நீதிமன்றத்திற்கு போனார்கள். ஏன் என்றால் இது மிகக் கடுமையான தண்டனை என்ற அடிப்படையிலே உயர்நீதிமன்றத்திற்கு அதை எடுத்துச் சென்ற நேரத்தில் அதே சட்டமன்றம் பிறகு தீர்மானம் நிறைவேற்றி அந்த இரண்டு பேரையும் மீண்டும் எம்.எல்.ஏ.க்கள் ஆக ஆக்கிக் கொள்கிறார்கள். ஆகவே, பீனல் புரவிசன் பிரிவிலேஜை தீர்மானிக்கக்கூடிய உரிமை மன்றத்திற்கு உண்டு. அவர்கள் பீனல் புரவிசனை இன்டர்பிரட் பண்ணுவதற்கு, டெட்டரன்ட் ஆக இருந்தால், அது கான்ஸ்ட்டிட்யூஷனில் உள்ள ரைட்ஸை பாதிக்கக்கூடிய சூழ்நிலையில் இருந்தால் உச்ச நீதிமன்றத்தில் அதை விசாரிக்கவும் கடமை உண்டு. அதை ஏற்றுக்கொண்டு இந்த சட்டமன்றம் இன்றைக்கு இந்தத் தீர்மானத்தை கொண்டு வந்திருக்கிறது. இங்கே இருக்கின்ற விவரங்கள், தகவல்கள்... ... ...

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு



உள்ள உரிமையைப் பாதுகாப்பதற்காக உச்ச நீதிமன்றம் அவர்களுக்கு பதவியை திருப்பி வழங்கி இருக்கிறது என்றார்கள். இங்கே இருக்கின்ற பிரச்சினையே, சட்டமன்றத்தினுடைய உரிமைகள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காகத்தான் இங்கே தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆக, நம்முடைய பாதுகாப்புக்குத் தான் இங்கே இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். செயலாளர் அவர்களுக்கும் அது அளிக்கப்பட்டிருக்கிறது. எனவே, அதற்கும் இதற்கும் முரண்பாடு இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

<u>திரு. ச. இராமச்சந்திரன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற குறிப்புகள் அதாவது புரசீடிங்ஸ் அது வந்துபோயிருக்கிறது, என்பதற்காகத்தான் இதைக் குறிப்பிட்டேன். (குறுக்கீடுகள்.)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நீங்கள் சொல்லியிருக்கிற உதாரணங்கள் இரண்டையுமே நான் கடைசியில் சொல்லலாம் என்று தான் இருந்தேன். நீங்கள் எழுப்பிவிட்ட காரணத்தால் சொல்கிறேன். இது Disqualification Act. "Proceedings of the House" ஆக வராது. அது, டென்த் ஷெட்யூலில் பேரவைத் தலைவருக்கு சில உரிமைகளைக் கொடுத்திருக்கிறார்கள். அதுபற்றிய ஒரு வழக்கிலேதான் உச்ச நீதிமன்றம் மணிப்பூர் பேரவைத் தலைவர் எடுத்த முடிவு செல்லாது என்று அறிவித்தது. அதுபோல பீகார் சட்டமன்றப் பேரவைத் தலைவர் எடுத்த முடிவு செல்லாது என்று அறிவித்தது. எனவே, அதற்கும் புரசீடிங்ஸ் ஆஃப் தி ஹவுசுக்கும் நிறைய வேறுபாடு இருக்கிறது என்பதை உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

<u>திரு. ச. இராமச்சந்திரன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றம் கேட்கின்ற விவரங்களையும், தகவல்களையும் இந்த மன்றம் இன்றைக்கு தருவதற்கு ஏற்றுக்கொண்டிருக்கிறது. இதுவே முன்னாலே இருந்த நிலையிலிருந்து ஓரளவுக்கு இறங்கி வந்திருக்கிறதுதான். ஆக, சுலபமான சூழ்நிலையை இந்தத் தீர்மானத்திலே போட்டிருக்கிறீர்கள். ஆகவே... ... ... ...

<u>*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே சுட்டிக்காண்பித்தேன். பல்வேறு வழக்குகளிலே போகக்கூடாது என்று "..As had been the practice of the House, he was asking the Chairman of the Committee to ignore the summons and not to put any appearance in the Court" சொல்லிவிட்டு. "....However, he was passing on the relevant papers to the Minister of Law for taking such action as he

might deem fit to apprise the Court of the correct constitutional position in this regard" என்பதற்கு அந்த விவரங்களை அனுப்பி வைக்கலாம் என்பது லோக் சபாவும் மற்றவர்களும் ஒப்புக்கொண்ட ஒன்றுதான். அதை பின்பற்றி செய்கிறோமே தவிர நாம் மேலேயிருந்து ஒன்றும் கீழே இறங்க வேண்டிய அவசியமேயில்லை.

பிற்பகல் 12–50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

* திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் கொடுக்கின்ற இன்டர்பிரடேஷன்-ஐ நாளை mischievous interpreters will give the very same interpretation. The resolution is not happily worded. நான் என்ன சொல்கிறேன் என்றால், நாம் போடுகிற தீர்மானத்தில் 'The Supreme Court may send a Commissioner to inspect the relevant documents which it wants' என்று வேண்டுமானால் போடலாம், நாம் விக்கீல் என்பது . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமரி அனந்தன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தினுடைய இறையாண்மை என்பது நமக்கு என்று அசைக்க முடியாதவாறு, மாற்ற முடியாதவாறு கொடுக்கப்பட்ட ஒன்று. அது இந்தத் தீர்மானத்திலே மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்லப்போனால், பேரவையின் அமைப்பு எல்லைக்குள் நீதி மன்றக் கட்டளைகளை உறுப்பினர்களுக்குச் சேர்ப்பித்தல் என்ற தலைப்பின் கீழே கூட, நமது சட்டமன்ற விதி 292-லே, சிவில் அல்லது கிரிமினல் நீதிமன்றத்தின் கட்டளையையோ, நோட்டீசையோ பேரவைத் தலைவரின் முன் அனுமதியின்றி பேரவையின் அமைப்பு எல்லைக்குள் சேர்ப்பித்தல் கூடாது என்று இருக்கிறது. இங்கே சேர்ப்பித்தல்கூடக் கூடாது. ஆக அந்த அளவுக்கு உரிமை பெற்ற இடம் இது.

இப்போது இந்தத் தீர்மானத்தில் வந்து இருப்பது என்ன வென்றால், இந்த உரிமைகள் அடிப்படையிலே நம் செயலாளரை அனுப்புவதில்லை என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். அப்படி தெளிவாகச் சொன்னதற்குப் பின்னாலே வெளியே ஒரு எண்ணத்தை பரப்புவார்களா அல்லவா? இந்தப் பேரவைக்கும், உச்ச நீதி மன்றத்திற்கும் ஒரு மோதல் உருவாகிக்கொண்டிருக்கிறதென்ற ஒருஎண்ணத்தை உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள்





அல்லவா ? 'அந்த மோதலை நாங்கள் உருவாக்குபவர்கள் அல்ல, அவர்களுடைய உரிமை அவர்களுக்கு, எங்களுடைய உரிமை எங்களுக்கு. ஆனாலும் பீஸ்ஃபுல் கோ-எக்சிஸ்டன்ஸ்' என்பதைச் சொல்வதாகத்தான் இந்தத் தீர்மானம் இருக்கிறதே ஒழிய வேறல்ல. இன்னும் ஒன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். சுப்ரீம் கோர்ட் மாத்திரமல்ல, கான்ஸ்டிடியூஷனே ஒத்துக் கொள்ளக்கூடிய ஒன்று என்ன என்று சொன்னால் ஆர்ட்டிகிள் 144. அதிலே எந்தக் காரணத்தைக் கொண்டும் உச்ச நீதிமன்றம் சொல்லும் கட்டளைகளெல்லாம் அடி பணிந்து, காரியம் செய்ய வேண்டும், இணங்கி காரியம் செய்ய வேண்டுமென்று கிடையாது. ஆர்ட்டிகிள் 144 என்ன சொல்கிறதென்றால், 'All authorities, Civil and Judicial in the territory of India shall act in aid of the Supreme Court' சுப்ரீம் கோர்ட்டுக்குத் துணையாக சிவில் கோர்ட்டுகளும் ஜுடிசியல் கோர்ட்டுகளும் செயல்பட வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்களே தவிர, சட்டப் பேரவை செயல்பட வேண்டுமென்று கான்ஸ்டிடியூஷனே சொல்லவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி). எனவே, உச்ச நீதிமன்றத்தோடு ஒரு மோதல் என்ற உணர்வு வெளியே பரவ வேண்டாம். நாம் ஒவ்வொருவரும் தனித் தனி அதிகாரம் படைத்தாலும் கூட ஒருவருக்கொருவர் சமாதான சகவாழ்வு என்று சொல்லக் கூடிய ஒரு அற்புதமான தீர்மானமாக இந்தத் தீர்மானம் இருப்பதாக நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர்.

*மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தீர்மானத்திலே கொடுக்கப்பட்டுள்ள வார்த்தைகளைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும், தெளிவாகப் படிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம், உச்ச நீதிமன்றம் இந்த அமைப்பின் உரிமையை பாதிக்காத வகையில் விளக்கங்களையோ, தகவல்களையோ அறிந்து கொள்ள விரும்பினால்தான் என்று இருக்கிறதே தவிர, ஏதோ கீழே இறங்கி வந்து நாமாக முன்வந்து கொடுப்பதாக அல்ல. இந்த அமைப்பைப் பாதிக்காத வகையில் இருக்கிறதென்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் புரிந்துகொண்டுதான் முதலிலே சொன்னேன். Without prejudice to the privileges of the House என்று. ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்சநீதிமன்றத்தோடு சட்டமன்றமும் ஒத்துழைப்பது இரண்டு அமைப்புகளுக்குமே நல்லது. மக்களின் நம்பிக்கையைப்

பெற அது பயன்படும் என்பதை நான் தெளிவு படுத்த விரும்புகிறேன். ஆகவே இந்தத் தீர்மானத்தில் உச்ச நீதிமன்றம் கேட்கின்ற விவரங்களை, அதாவது, 11 பேர் 5—2—92 அன்று அவையில் இருந்தார்களா, எத்தனை பேர் இருந்தார்கள், அவர்கள் யார் யார் என்ற விவரங்களை இந்த அவை தரப் போகின்றதா அல்லவா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

இந்த அளவுக்கு உச்ச நீதிமன்றத்தோடு ஒத்துழைக்க வேண்டும் என்ற உணர்வோடு இந்த மாமன்றத்தில் தீர்மானம் வந்த பிறகு, நாங்கள் ஏற்கெனவே கேட்டுக் கொண்டதைப் போல இந்தப் பிரச்சினை மேலும் வளர விடாமல், இதற்கு முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் உரிமை மீறல் பிரச்சினையில் தண்டனைக்கு ஆளானவர்களை ஒரு எச்சரிக்கையோடு விடுவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12.55

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தோடு இந்தப் பேரவை எப்படி ஒத்துழைக்க வேண்டுமென்று உணருகிறாரோ அதே போன்று இந்தப் பேரவையுடன் உச்ச நீதிமன்றமும் ஒத்துழைக்க வேண்டுமென்ற உணர்வு இருப்பது தான் நியாயம். அது மட்டுமல்லாமல் உச்ச நீதிமன்றத்தை இந்தப் பேரவை மதித்து வந்திருக்கின்றதே தவிர எந்த ஒரு இடத்திலும் புறக்கணிக்கவில்லை என்பதை நான் சுட்டிக் காட்டியிருக்கிறேன். அவர்களுடைய தனித் தன்மையை நாம் எப்படி மதிக்கிறோமோ அப்படி இந்தப் பேரவையின் தனித் தன்மையை உச்ச நீதிமன்றம் மதிக்க வேண்டுமென்பது தான் நம்முடைய கோரிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் முன்மொழிந் திருக்கின்ற தீர்மானத்தின் மீது எதிர்க்கட்சிகள் சார்பில், என்னுடைய கருத்துக்களை, ஏற்கெனவே நண்பர் கள் தெரிவித்திருக்கிற கருத்துக்களையும் தொகுத்து நான் இங்கே பேச உங்கள் முன்னாலே நிற்கிறேன். சிலர் விரி வாகப் பேச முற்பட்டாலும் கூட திரும்பத் திரும்ப





அவையினுடைய உரிமைகள் என்ன, அந்த உரிமைகள் எந்த அளவுக்குப் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை கவனிக்க வேண்டும்.

இன்றைய தினம் தமிழ்நாட்டிலே இருக்கிற சட்டப் பேரவையினுடைய உரிமைகளை மட்டும் பாதிக்கின்ற ஒன்றாக இது இல்லாமல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுட்டிக் காட்டியதைப் போல தவறான முன் உதாரணமாக வந்துவிடக் கூடாது என்பதிலே அதிக அக்கறையோடு இந்த அவை செயல்பட்டாக வேண்டியிருக்கிறது நாடாளுமன்ற ஜனநாயகத்தினுடைய மூன்று அங்கங்களாக 'எக்சிகியூட்டிவ்', 'லெஜிஸ்லேச்சர்', 'ஜுடிஷியரி' இருக்கின்றன. ஆட்சி நிர்வாகம், சட்டமன்றம், நீதித்துறை என்ற மூன்று அங்கங்கள் நாடாளுமன்ற ஜனநாயகத்தி னுடைய மூன்று அங்கங்களாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றினுடைய அதிகார வரம்புகள் மிகத் தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்கின்றன. ஒன்றினுடைய அதிகார எல்லைக்குள் மற்றவை நுழையக் கூடாது என்று தெளிவாகச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. ஒவ்வொன்றுக்கும் தனி உரிமைகள் உண்டு; சிறப்பு உரிமைகள் உண்டு. உரிமைகள் மீறப்படுகிற நேரத்தில் தண்டனை வழங்கப்படுகின்ற அதிகாரமும் உண்டு. 'பீனல் கிளாஸ்' —அதைத்தான் எனக்கு முன்னாலே பேசிய அருமை நண்பர் இராமச்சந்திரன் அவர்கள் திரும்பத் திரும்பச் சொன்னார்கள்.

நீதிமன்றத்தைப் பொறுத்தவரை, நீதிபதி விருப்பு வெறுப் பின்றி செயல்பட வேண்டும்; அச்சமின்றிச் செயல்பட வேண்டும்; அவர்கள் வழங்குகின்ற தீர்ப்புகள் நிறைவேற்றப்பட வேண்டும்; செயல்படுத்தப்பட வேண்டும். ஆனால் இந்த உரிமைகள் பாதிக்கப் படுகிற நேரத்தில், இந்த உரிமைகள் பறிக்கப்படுகிற நேரத்தில், அவர்கள் கோர்ட்டை அவமதித்த குற்றம் என்று கூறி, அதற்குப் பரிகாரம் காண, 'கண்டெம்ப்ட் ஆஃப் தி கோர்ட்' என்ற முறையில் பரிகாரம் காண முற்படுகிறார்கள். ஆக, நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில் அவர்களை அவ மதித்தால் அல்லது அவர்களுடைய உத்தரவை உதாசீனம் செய்தால் தண்டிக்கிற அதிகாரம், நீதிமன்றங்களுக்கு மட்டுமே உண்டு. வேறு யாருக்கும் கிடையாது. இது தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்கிறது.

அதைப் போன்று சட்டமன்றத்தினுடைய அதிகாரங்கள் என்ன; சட்ட மன்றத்திற்கு எவ்வளவு அதிகாரங்கள் வழங்கப் பட்டிருக்கின்றன என்பதிலே இங்கே பலருக்குச் சந்தேகம் வந்தது. நம்மைப் பொறுத்தவரையில், பிரிட்டிஷ் பார்லி மெண்டரி டெமாக்ரஸி—இங்கிலாந்து நாட்டினுடைய நாடாளுமன்ற ஜனநாயகத்தை நாம் அப்படியே ஏற்றுக்

கொண்டிருக்கிறோம். அதுதான் ஜனநாயகத்தின் தொட்டில் என்று வர்ணிக்கப்பட்ட நாடு. அதிலே பேராசிரியர் ஏ. சி. டைசி கொஞ்சம் அதிகமாகவே சொல்லியிருக்கிறார். பிரிட்டிஷ் பார்லிமென்டினுடைய அதிகாரங்கள் என்ன என்று சொல்லுகிற நேரத்தில் டைசி கொஞ்சம் அதிகமாகவே சொல்லியிருக்கிறார். "What the Parliamen, doth no power on earth can undo" என்று சொல்கிறார். பாராளுமன்றம் எதைச் செய்கிறதோ எதை நிறைவேற்றுகிறதோ, எந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுகிறதோ அதை உலகத்திலே எந்த சக்தியாலும் இல்லை என்று ஆக்க முடியாது என்று தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

"The Parliament can even command all blue - eyed babies to be killed" என்று சொல்லுகிறார் அதை யாரும் செய்வதில்லை என்றாலும்கூட பாராளுமன்றம் நினைத்தால் அப்படி ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற முடியும். இப்படிப்பட்ட குழந்தைகள் எல்லாம் கொல்லப்பட வேண்டும். என்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற முடியும். அதுபற்றி லெஸ்லி ஸ்டீபன் ஒரு முறை அவரைப் பார்த்து கேட்கிறார்.

He put a direct question to Daisy - Leslie Stephen put a direct questior to Daisy. " Why did not Parliament command all blue - eyed babies to be killed " அப்படிப்பட்ட தீர்மானத்தை ஏன் பாராளுமன்றம் நிறைவேற்றவில்லை என்று டைசியிடத்திலே ஸ்டீபன் கேட்டார்.

" Daisy answered him thus, " Because there are both internal and external limits to Parliament Sovereignty. Internal limit is a fact that Members of Parliament are not usually men of outrageous view. The external limit is the possibility that the English Electorate would not obey such statute " என்று தெளிவாகச் சொல்கிறார்.

பிற்பகல் 1-00

ஆகவே, அவருடைய அதிகார வரம்பு என்ன, எந்த அளவுக்கு அவற்றைப் பயன்படுத்த வேண்டும்? அந்த அளவிலிருந்து அவர்கள் மீறிச் செல்லக்கூடாது என்பதைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெளிவாகவே உணர்ந்திருக்கிறார்கள். அறிந்திருக்கிறார்கள். அதைத் தாண்டிச் செல்ல மாட்டார்கள், தாண்டிச் சென்றாலும் அதை அந்த நாட்டு மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்



என்பதை டெய்சி தெளிவாகச் சொல்லியிருக்கிறார். எனவே
சட்டமன்றத்தின் உரிமைகள் மீறப்படுகின்ற நேரத்தில்,
நம்முடைய உரிமைகள் மீறப்படுகின்றதைப் பொறுத்த
வரையில், ஏற்கெனவே பல உறுப்பினர்கள் பேசியிருக்கி
றார்கள். நம்முடைய உரிமைகளைப் பொறுத்த வரையில்
சட்டப்பேரவையில் இருக்கிற உறுப்பினர்கள் சுதந்திரமாக,
அச்சமின்றி செயல்பட அனுமதிக்கப்பட்டாக வேண்டும்.
மக்களுடைய பிரதிநிதிகளாக இருக்கிற அவர்களுடைய
உரிமைகளை எந்தக் காரணத்தைக் கொண்டும் யாரும்
பறித்துவிடக் கூடாது. யாரும் இடையே நுழைந்துவிடக்
கூடாது என்பதில் தெளிவாக இருக்க வேண்டும். பலரும்
அதை ஒப்புக் கொண்டார்கள். யாரும் அதை இல்லை
யென்று மறுக்கவில்லை. ஆகவே அந்த உரிமை மீறல் நடை
பெறுகின்ற நேரத்தில் யாரை விசாரிப்பது என்பதில்தான்
இன்றையதினம் அத்தனைபேரும் பேசினார்கள். அதிலே
பாராளுமன்றத்திற்கு இருக்கிற அதிகாரம் நீதிமன்றத்திற்கு
உண்டா இல்லையா என்பதில் பலருக்கும் சந்தேகம் வந்தது.
இந்திய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கிய டாக்டர்
அம்பேத்கர் அவர்கள் மிகத் தெளிவாக அன்றைய தினம் அரசியல்
நிர்ணய சபையிலே பேசியிருக்கிறார். அவர் சொல்கிறார் :
" Under the House of Commons, Powers and Privileges, it is open to
Parliament to convict any citizen for contempt of Parliament and when
such privilege is exercised, the jurisdiction of the Court is ousted."
அவை உரிமை மீறலுக்காக தண்டனை வழங்குகிற நேரத்தில்,
நீதிமன்றத்தின் அதிகாரம் அந்த வரம்புக்குள் நுழைய முடி
யாது. அதுதான் இங்கும் நிலை என்பதைத் தெளிவாகச்
சொல்லியிருக்கிறார். This is an important privilege. அது
முக்கியமான உரிமை—

" There is not the slightest doubt in my mind, and I am sure in the
minds of the Drafting Committee, that Parliament must have certain
privileges, that Parliament would be so much exposed to calumny, to
unjustified criticism and the Parliamentary institutions in this country
might be brought down to utter contempt and may lose all the respect
which Parliamentary institutions should have from the citizens
for whose benefit they operate."

மக்களுடைய நன்மைக்காக பாடுபடுகிற, பணியாற்றுகின்ற
சட்டப் பேரவையானாலும் சரி, நாடாளுமன்றமானாலும்
சரி, அவையினுடைய உறுப்பினர்களுக்கு முழுமை
யான உரிமை வழங்கப்பட வேண்டும். முழுமையான உரிமை
களைக் காப்பாற்றுகிற அதிகாரமும் அந்த சட்டப்பேரவைக்கு,
அந்த மக்களவைக்கு. அந்த நாடாளுமன்றத்திற்கு உண்டு,
என்பதை மிகத் தெளிவாக அன்றையதினம் டாக்டர்
அம்பேத்கர் குறிப்பிட்டிருக்கிறார். நாடாளுமன்றம்

விசாரிக்க வேண்டுமே தவிர வேறு யாரும் விசாரிக்க முடியாது என்று மிகத் தெளிவாக விளக்கியிருக்கிறார். இங்கே அவை முன்னவர் அவர்கள் பேசுகிற நேரத்தில், அரசியல் அமைப்புச் சட்டத்தில் இருக்கிற ஆர்ட்டிகிள் 194(3) பற்றி மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். It is absolute. As it was rightly, put, it is Absolute. அதைப் போல சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில், அதனுடைய இறையாண்மையைப் பொறுத்தவரையில் யாராலும் தட்டிக் கேட்க முடியாது. உரிமைகளைப் பொறுத்த வரையிலும், உரிமைகளைக் காப்பாற்றுவதைப் பொறுத்த வரையிலும் சட்டப் பேரவையால்தான் நிறைவேற்ற வேண்டுமே தவிர, வேறு எந்த நீதிமன்றமும், அதற்கு மேல் முறையீட்டு நீதிமன்றமாக உட்கார்ந்து அதை விசாரிக்க முடியாது என்று பல தீர்ப்புகள் வெளிவந்திருக்கின்றன. அதிலே நாம் பின்பற்றுகிற முறை தவறாக இருந்தாலும் கூட அதைக்கூட நீதிமன்றங்கள் கேட்க முடியாது என்பதை மிகத் தெளிவாக 194(2)ல் பாசு அவர்கள் தன்னுடைய புத்தகத்தில் தெளிவாகச் சொல்கிறார். ஒன்றை மட்டும் படித்துக் காட்ட விரும்புகிறேன். 194(2)ல்

"At any rate, the Court has no jurisdiction to interfere with the right to summon a person for appearing before the Privileges Committee on the ground that there is no resolution authorised by the Speaker to summon such a person. The Court cannot interfere with any action taken for contempt unless the Legislature or its duly authorised officer is seeking to assert a privilege not known to the Law of Parliament or the action taken was without jurisdiction". யாரோ இங்கே பேசினார்கள் அல்லவா? மரண தண்டனை வழங்கினால் அதை நிறைவேற்ற முடியுமா என்று கேட்டார்கள். அதற்கும் இங்கே பதில் சொல்லியிருக்கிறார்கள். கடைசியாக இதில் தெளிவாகச் சொல்கிறார் :

"Once a privilege is held to exist, it is for the House to judge the occasion and its method of exercise. The Court cannot interfere with an erroneous decision by the House or of the Speaker in respect of a breach of its privilege." தவறான முடிவாகவே இருந்தாலும் கூட, நிச்சயமாக உச்ச நீதிமன்றம் அதில் தலையிட முடியாது என்பதை அன்றையதினம் மிகத் தெளிவாக சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

பிற்பகல் 1-05

1960 ஆம் ஆண்டில் சுப்ரீம் கோர்ட்டில் 'ஷர்மாஸ் கேஸ்', அது ஒரு முக்கியமான வழக்கு. எட்டு நீதிபதிகள் அமர்ந்திருந்தார்கள், அந்த எட்டு பேரும், அதாவது



Chief Justice Mr. B.P. sinha, Justice Mr. lunan, Justice Mr. B.R. Gajendragadkar, Justice Mr. A.K. Sarkrr, Justice Mr. Koka, subha Rau, Justice Mr. K.N. Wanchoo, Justice Mr. K.C. Das Gupta, and Justice Mr. J.C. Shah. ஆகிய அந்த 8 நீதிபதிகள் அடங்கிய அந்த ஃபுல் பெஞ்ச் மிகத் தெளிவாக அன்றைய தினமே வரையறுத்துக் கூறியிருக்கிறது.

"The validity of the proceedings inside the Legislature of a State cannot be called in question on an allegation that the procedure laid down by the law had not been strictly followed. No Court can go into those questions which are within the special jurisdiction of the Legislature itself which has the power to conduct its own business." ஆக அதிலே தவறான முறைகள் பின்பற்றியிருந்தாலும் கூட நீதிமன்றம் அதைத் தட்டிக் கேட்க முடியாது என்பதை மிகத் தெளிவாக அன்றைய தினம் ஃபுல் பெஞ்ச் தீர்ப்பளித்திருக்கிறது. அதிலே கீழே சொல்லுகிறார் :

"The Legislature has the jurisdiction to control the publication of its proceedings and to go into the question whether there has been any breach of its privileges and the Legislature is vested with complete jurisdiction to carry on its proceedings in accordance with its rules of business. Even though it may not have strictly complied with all the requirements of the procedural law laid down for conducting its business, that cannot be a ground for interference by the Supreme Court under Article 32 of the Constitution." ஆக ரிட் பெட்டிஷன் என்ற பெயரில் 32-வது ஆர்ட்டிக்கிளின்கீழ் இவைகளுக்கெல்லாம் அவர்கள் கேட்பதற்கு அதிகாரம் இல்லை என்பதை 1960 ஆம் ஆண்டே ஃபுல் பெஞ்ச் தீர்ப்பளித்திருக்கிறது.

"Courts have always recognised the basic differerce between complete want of jurisdiction and improper or irregular exercise of jurisdiction. Mere non-compliance with the rules of procedure cannot be a ground for issuing a Writ under Article 32 of the Constituion." என்று அன்றைய தினம் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு முன்னாலே பழைய ஜட்ஜ்மெண்ட்—A.I.R. 1951—S.C.—சுப்ரீம் கோர்ட்டில் அவர்களே சொல்லி, அதைச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே யாரும் இதிலே தலையிட முடியாது என்பது மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியம்] [1992 மே 4

அதே போல தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையைப் பொறுத்த வரையில் இதற்கு முன்னதாகவே இரண்டு, மூன்று கட்டங்களில் இது போன்ற பிரச்சினைகள் வந்திருக்கின்றன. ஒன்று வணிக ஒற்றுமை வழக்கு. அந்த வழக்கிலே பேரவைத் தலைவரையும், பேரவைச் செயலாளரையும் உயர்நீதி மன்றத்திற்கு முன்னாலே அவர்கள் ஆஜராக வேண்டும் என்று தாக்கீது பிறப்பிக்கப்பட்டது. அன்றைய தினம் அதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை; உயர்நீதி மன்றத்திற்கு அவர்கள் செல்லவில்லை.

அதே போல கல்யாணசுந்தரம் அவர்கள் தலையிட்ட விஷயம் பற்றி பேரவைத் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். 1960 ஆம் ஆண்டில் காங்கிரஸ் உறுப்பினர் லாசருக்கு எதிராக கொண்டு வரப்பட்ட அந்த வழக்கிலே கூட நீதிமன்றத்திலே ஆஜராக வேண்டிய அவசியம் இல்லை என்று அன்றையதினம் அவை முன்னவராக இருந்த திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் கல்யாணசுந்தரம் அதற்கு முழுமையான ஆதரவு தெரிவித்திருக்கிறார்கள். அவையே அதை அன்றைய தினம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. இப்போது நமக்கு முன்பு உள்ள பிரச்சினை, பேரவைச் செயலாளர் நாளைய தினம் உச்ச நீதிமன்றத்திலே ஆஜராக வேண்டுமா, வேண்டாமா என்பதுதான். அவர் தானாக எதையும் செய்வதில்லை. அவர் இந்தப் பேரவையின் அலுவலர். He is an Officer of the House. As an Officer of the House, அவர் போவது முறையாக இருக்குமா? அவராகச் சுதந்திரமாகச் செயல்பட முடியுமா என்றால் அவராகச்சுதந்திரமாகச் செயல்பட முடியாது. பேரவை கட்டளையிட்டாலொழிய, பேரவைத் தலைவர் கட்டளையிட்டாலொழிய அவராகப் பேரவையின் சார்பில் எதையும் செய்ய முடியாது என்பது மிகத் தெளிவாக விதிகளில் வரையறுக்கப்பட்டிருக்கிறது. ஆக இன்றைய தினம் பேரவைச் செயலாளர் அவர்களை அழைத்திருக்கிறார்கள் என்றால் இது போன்று முன்பு எந்த சட்டமன்றத்திலேயும், எந்த நாடாளுமன்றத்திலேயும் நடைபெற்றதில்லை. It is unprecedented. முதல்வர் அவர்கள் காலையிலே இங்கே தெளிவாகக் குறிப்பிட்டார்கள். இதற்கு முன்பு எந்தப் பேரவைச் செயலாளரையும் இது போன்று உச்சநீதிமன்றம் தாக்கீது இட்டு அழைத்ததே கிடையாது. ஆக நாம் அளித்த தீர்ப்பை சரியா, தவறா என்று நிச்சயமாக உச்சநீதி மன்றம் விசாரிக்க முடியாது என்பதைப் பொறுத்தவரையில் நாம் தெளிவாக இருக்கிறோம். அந்த தீர்மானம் சுட்டிக் காட்டுகிறது. எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்தப் பேரவையின் உரிமைகளைக் காக்கின்ற உரிமை இந்தப் பேரவைக்கு மட்டுமே உண்டு. வேறு யாருக்கும் இல்லை. இந்தப் பேரவையின் இறையாண்மையை, பேரவையின் தனித்தன்மையை காப்பாற்றிக் கொள்கிற உரிமை பெற்ற



1992 மே 4] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

அவை இந்த அவையே தவிர வேறு யாராலும் முடியாது. இதிலே இன்றைய தினம் அவர்கள் நுழைய முற்படுவதை நாம் நிச்சயமாக ஏற்றுக் கொள்ள முடியாது. அது மட்டுமல்லாமல் அவர்களுக்கு விசாரிக்கின்ற உரிமை, சுப்ரீம் கோர்ட்டைப்பொறுத்த வரையில் இது போன்று இன்வெஸ்டிகேட்டிவ் ஏஜென்சியாக மாறி விசாரிக்கின்ற உரிமை அவர்கள் பெறவில்லை என்பதை இந்த நேரத்தில் நான் தெளிவாகச்சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஃபண்டமென்டல் ரைட்ஸ் என்று திரும்பத் திரும்ப பேசினார்கள். ஃபண்டமென்டல் ரைட்ஸ் இருக்கின்றன. ஜீவாதார உரிமைகள், அடிப்படை உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். ஆனால் அதே நேரத்திலே 194 (3) ஆக இருந்தாலும் சரி, 105 (3) ஆக இருந்தாலும் சரி மற்ற ஆர்ட்டிக்கிள்கள் பின்னால் 208 வரை உள்ள ஆர்ட்டிகிள்களாக இருந்தாலும் இவைகள் எல்லாம் சிறப்புரிமைகள். இந்த அவைக்கு வழங்கப்பட்டு இருக்கிற சிறப்பு உரிமைகள். இந்த சிறப்பு உரிமைகளைப் பொறுத்த வரையில் வேறு யாராவது தலையீடு ஏதாவது செய்ய முடியுமா என்றால்—இன்று காலையிலே, கேசவ சிங் கேஸ் பற்றி சில பத்திரிகைகளிலே கூட எழுதி இருந்தார்கள்; அந்த கேசவ சிங் வழக்கிலே கூட மிகத் தெளிவாக ஒன்றைச் சொல்லி இருக்கிறார்கள். If there is a conflict between fundamental rights and the special powers given to the Legislatures under the articles 194(3) and 105(3), the former should yield to the latter." என்று மிகத் தெளிவாக அந்தத் தீர்ப்பிலே, கேசவ சிங் வழக்கிலே சொல்லி இருக்கிறார்கள். ஆனால், இது ஒரு ஸ்பெஷல் ரைட்ஸ் நம்முடைய அவை உரிமையைப் பொறுத்தவரையில் 194-லே வழங்கப்பட்டு இருக்கிற உரிமை என்பது ஒரு ஸ்பெஷல் ரைட்ஸ். அதிலே யாராலேயும் தலையிட முடியாது. சுப்ரீம் கோர்ட்டிலேயும் தலையிட முடியாது என்பதை தெளிவாக நாம் அவர்களுக்கு உணர்த்தியாக வேண்டும்.

பிற்பகல் 1–10.

இங்கே ஆர்ட்டிகிள் 211 பற்றிச் சொன்னார்கள். ஒரு நீதிபதியினுடைய நடத்தையைப் பொறுத்தவரையில் நாம் விவாதிக்க முடியாது; விவாதிக்கக் கூடாது; அது தெளிவாக கான்ஸ்டிடியூஷனிலும் மிகத் தெளிவாக இருக்கிறது. ஆர்ட்டிகிள் 211-ஐ எந்தக் காரணத்தைக் கொண்டும் நாம் விவாதிக்கக் கூடாது.

"No discussion shall take place in the Legislature of a State with respect to the conduct of any Judge of the Supreme Court or of a High Court in the discharge of his duties," என்று தெளிவாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலும் இருக்கிறது. கர்நாடக மாநிலத்தில் சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்] [1992 மே 4

பிரச்சினை வந்தது. நீதிபதியினுடைய நடவடிக்கைகளைப்
பொறுத்து, அவர் அளித்த தீர்ப்பைப் பற்றி சட்டப்பேரவை
யிலே ஓர் உறுப்பினர் பேசினார். அது அவைக் குறிப்பிலே
இருந்து அகற்றப்படவில்லை. இதை எதிர்த்து அந்தக் குறிப்
பிட்ட நீதிபதியினுடைய நீதிமன்றத்திலேயே வழக்குத் தொட
ரப்பட்டது; ஈ. எஸ். வெங்கட்ராமையா, பின்னாளில் அவர்
இந்தியாவினுடைய தலைமை நீதிபதியாக வந்தவர். He is one of,
the celebrated Judges. அவர் அந்த வாதத்தை எதிர்க்கவில்லை.
அன்றைய தினம் அவர் என்ன சொன்னார் என்று சொன்னால்,
வால்டர்—அவருடைய ஒரு சிறப்புமிக்க ''கொட்டேஷனை''
சொல்லி, அதை ஏற்றுக் கொள்ளமாட்டேன் என்று சொன்னார்.

அதிலே சொல்லி இருக்கிறார்,

" I do not agree with you that I will fight for upholding your right to
disagree with one till the end of my life. In the same spirit this court
which has a special obligation to uphold the Constitution of the law,
upholds 194(2) of the Constitution and the immunity and guarantee to
the Members of the Legislature." பேரவை உறுப்பினர்களுக்கு
வழங்கப்பட்டு இருக்கிற அந்த அதிகாரத்திலே நாம்
தலையிடக் கூடாது; என்றாலும் நீதிபதியைப் பற்றி
அங்கே பேசப்படுகின்ற நேரத்திலே என்ன பாதுகாப்பு
என்று கேட்ட கேள்விகளுக்கு அவர் பதில் சொல்கிறார், பேர
வைத் தலைவர் கவனித்துக் கொள்வார்; நாம் அவரிடத்திலே
விட்டுவிடுவோம்; அதைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டிய
தில்லை என்று அன்றைய தினமே அவர்கள் சொல்லி இருக்கிறார்
கள்.

அதேபோல 10-வது ஷெட்டியூலை பொறுத்த வரையில்
ஆண்டி-டிஃபெக்ஷன் லா ''—அதைப் பற்றி மாண்புமிகு உறுப்
பினர்கள் இரண்டு பேர் சொன்னார்கள். அதற்கும் இதற்கும்
நிறைய வேறுபாடு உண்டு. As far as anti-defection law is concerned,
it is not an act of the House. இங்கே நடைபெறுகின்ற ஒன்றுக்கு
சபாநாயகரே விசாரித்து அவராகவே ஒரு தீர்ப்பு
வழங்குகிறார். அந்தத் தீர்ப்பு சரியா, இல்லையா ?
அதிகமாக வழங்கப்பட்டதா, இல்லையா என்பதை விசாரிக்
கின்ற உரிமை உச்ச நீதிமன்றத்திற்கு, உயர் நீதிமன்றத்
திற்கு இருக்கிறதா, இல்லையா என்பதுதான் இன்றையப் பிரச்
சினையே தவிர வேறு பிரச்சினை அதிலே கிடையாது. அதிலே
உச்ச நீதிமன்றம் சொல்லியது, அதற்கு உரிமை உண்டு; அவர்
கள் சொன்ன இன்னொரு காரணம், அந்த செக்ஷன் 7-ஐ
பொறுத்த வரையில் " notwit'hsta iding anything in this Constitution,
no Court shall have any Jurisdiction " என்று இருக்கிறது. இது,
"This should have been ratified by fifty per cent of the Legislatures "
என்பது உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு. 50 சதவீத சட்டப்
பேரவைகளால் அதை அங்கீகரித்து இருக்க வேண்டும். ஆனால்,



1992 மே 4] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

அங்கீகரிக்கவில்லை. எனவே, அதிலே தலையிடுவதற்கு உச்ச
நீதிமன்றத்திற்கு அதிகாரம் இருக்கிறது என்று அவர்கள் சொல்லி
இருக்கிறார்கள்; அதிலே தவறு இல்லை; அதிலே அவர்களுக்கு
அதிகாரம் இருக்கிறது. நாம் அதிலே தலையிட வேண்டிய அவ
சியம் இல்லை. ஆக, அங்கே நண்பர்கள் பலரும் வேறு ஒரு
பிரச்சினை பற்றியும் பேசினார்கள். (குறுக்கீடு)....

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, Bihar case is not an anti-defection law case. It is a case which
was decided by the Bihar House. மணிப்பூரிலேதான் அந்த கட்சித்
தாவல் தடைச் சட்டம். பீகாரில் அப்படியல்ல. பீகாரில்
இரண்டு காங்கிரசு எம்.எல்.ஏ.க்களைதான் பதவியிலே இருந்து
நீக்கினார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பீகாரில் டிஸ்குவாலிபி
கேஷன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : Disqualification is
not an act of the House. That is what I am saying. Disqualification
is not an act of the House.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ''டிஸ்குவாலிபிகேஷன்''
என்பதுதான் அங்கே, பீகாரிலே முடிவு செய்யப்பட்டது.

திரு. ச. இராமச்சந்திரன் : பீகார் ஹவுசிலேயும் டிஸ்குவா
லிபிகேஷன் அல்ல. கலாட்டா பண்ணினார்கள் என்று தான்
(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கலாட்டா செய்தார்கள்
என்பதற்காக இல்லை, (குறுக்கீடு) அவர்கள் அவையில் முறை
தவறி நடந்து கொண்டார்கள் என்பதற்காக அவர்களுடைய
உறுப்பினர் பதவியையே பறிக்கிற தீர்மானத்தைப் போட்டார்
கள். (குறுக்கீடு) நான் அதைத்தான் சொல்ல வருகிறேன்.

திரு. ச. இராமச்சந்திரன் : ஹை கோர்ட்டுக்குப் போனார்
கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வேறு விஷயம்.
(குறுக்கீடு)

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : பீகார் வழக்கிலே
they were expelled from the House. But, that is not an act of the House.
They were expelled by the Speaker. That was questioned in a court of
law. (Interruption) What I am speaking about is the privileges of this

House. (Interruption) I don't say that it is a privilege of the House. Expelling a Member of the House is not the privilege of a House. Expelling a member or disqualifying a member has been cited as privilege of the House. It is an act of the Speaker. That has been questioned in a court of law. So the court intervened. Here it is not the case.

THIRU S. RAMACHANDRAN : The proceedings of the House has been questioned in the court of law. That is what I am making.

THIRU S. R. BALASUBRAMONIYAN : No, that does not form part of the proceedings of the House என்பதுதான் என்னுடைய வாதம். இதைப் பொறுத்தவரையில், one is disqualification and the other is expulsion. Definitely they are entitled to go to the Court. We shall stop this argument with that.

பிற்பகல் 1-15

ஜனநாயகத்தினுடைய நான்காவது அங்கமாக இருக்கிற (Fourth Estate) இதைப்பற்றி இங்கே நண்பர்கள் பலரும் பேசினார்கள். அவர்களைப் பொறுத்தவரையில், ஜனநாயகத்தில் அவர்களுக்கு சிறப்பான பங்கு உண்டு. நாட்டு நடப்புகளை இந்த அவையின் கவனத்திற்கும், ஆட்சியாளர்களுடைய கவனத்திற்கும் கொண்டு வருகிற பொறுப்பு, பத்திரிகையாளர்களுக்கு உண்டு. அதேபோல், சட்டப் பேரவையில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளை நாட்டு மக்கள் முன்னால் எடுத்து வைக்கின்ற பொறுப்பும் அந்தப் பத்திரிகையாளர்களுக்கு உண்டு. எனவே, சட்டப்பேரவையைப் பொறுத்தவரையில், நம்மைப் பொறுத்தவரையில், பத்திரிகையாளர்களுக்கும், நமக்கும் ஒரு சுமுகமான இணக்கமான உறவு இருக்கவேண்டும் என்பதிலே நமக்கு, அத்தனை பேர்களுக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. இதைப்பற்றி இன்று காலையிலே பேசுகின்ற நேரத்திலே, அவை முன்னவர் அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். பத்திரிகையாளர்கள் அத்தனை பேர்களும் நமக்கு விரோதம் என்று நினைக்கவில்லை என்றும் பத்திரிகையாளர்களோடு நமக்கு ஒரு இணக்கமான உறவு இருக்கவேண்டும், ஒரு சுமுகமான உறவு இருக்கவேண்டும் என்று நாம் விரும்புகிறோம் என்பதைத் தெளிவாக அவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எழுதுகோலே தெய்வம், எழுத்தும் தெய்வம் என்று எண்ணுகிற பத்திரிகையாளர்கள் நிறைய பேர்கள் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம், நிச்சயமாக அந்தப் பத்திரிகையாளர்களை இந்தப் பேரவை முழுவதுமாக மதிக்கிறது. ஏன் என்றால், இங்கே இருக்கிற பல உறுப்பினர்கள் பத்திரிகையாளர்களாக இருந்தவர்கள், இப்போதும் பத்திரிகையாளர்களாக இருப்பவர்கள். பேரவையினுடைய முன்னவராக இருக்கிற நாவலர் அவர்களே, ஒரு பத்திரிகையாளர். அவருக்குப் பக்கத்



திலே வீற்றிருக்கிற சட்ட அமைச்சர் அவர்கள் ஒரு பத்திரிகையாளர். அந்த வரிசையிலே பார்த்தால் பலரும் பத்திரிகையாளர்கள். அதேபோல், எங்கள் வரிசையிலே பல பத்திரிகையாளர்கள் இருக்கிறார்கள். இலக்கியச் செல்வர் இருக்கிறார். மற்றவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். ஆகவே, பத்திரிகையாளர்களோடு மோதுகின்ற எண்ணம் நிச்சயமாக இந்தப் பேரவைக்குக் கிடையாது என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இங்கே சில நண்பர்கள் பேசிய காரணத்தாலே, பத்திரிகையாளர்கள் அத்தனை பேர்களோடும் எங்களுக்கு மோதல் என்பது அல்ல. சில எழுத்துக்கள் சிலபேர்களுடைய மனத்தைப் புண்படுத்துகிற நேரத்தில், அதைப்பற்றிக் குறிப்பிடுவது உண்டு. அதை இன்றைய தினம் பத்திரிகையாளர்களே ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள். ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். தீர்மான வடிவத்திலே அதை வடித்து இருக்கிறார்கள். எனவேதான் அவர்கள் ஒரு கமிட்டி போடலாம், ஒரு குழு போடலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆம்புட்ஸ்மேன் கமிட்டி என்ற ஒரு கமிட்டியைப் போடுவதற்கு அவர்கள் முன்வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கமிட்டியிலே சட்ட மேதைகள், ஜூரிஸ்ட்ஸ், பிராமினன்ட் சிட்டிசன்ஸ், பிரமுகர்கள், நல்ல பத்திரிகையாளர்கள், மூத்த பத்திரிகையாளர்கள், அத்தனைபேரும் இடம் பெறுவார்கள். அந்த புகார்களை தாக்கல்செய்கின்ற நேரத்திலே, விரைவிலே விசாரித்து சில நாட்களுக்குள்ளாக தீர்ப்பு அளிக்கும் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். நிச்சயமாக வரவேற்கத்தக்க ஒன்று. நான் வரவேற்கிறேன். அதற்கு சட்ட வடிவம் கொடுக்க முடியுமா என்பதை அரசு பரிசீலிக்கவேண்டும் என்று நான் இங்கே பணிவன்போடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். பத்திரிகையாளர்களுடன் ஒரு சுமுகமான, இணக்கமான உறவு ஏற்பட முதலமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்கிற அனைத்து நடவடிக்கைகளுக்கும் நாங்கள் முழுமையான ஒத்துழைப்பு கொடுப்போம் என்று கூறிக் கொள்கிறேன்.

இங்கே பேசிய பலரும் வேறு முக்கியமான விஷயங்களைப் பற்றிப் பேசினார்கள். உச்சநீதிமன்றம், உயர்நீதி மன்றம் அனுப்பி இருக்கின்ற தாக்கீதுகளை, சம்மன்களை, அலட்சியப் படுத்தலாமா என்று நண்பர்கள் இங்கே கேட்டார்கள். இதை யார் கேட்டார்கள் என்றால், வெளியிலே கூறிக்கொண்டு இருக்கிறார்கள் அல்லவா, உச்சநீதி மன்றத்தோடு மோதலா, உச்சநீதிமன்றத்தோடு பகையா என்று கேட்கிறார்கள் அல்லவா உயர்நீதிமன்றத்தோடு மோதிக் கொள்ளலாமா என்று கேட்கிறார்கள் அல்லவா, அந்தத் தலைவருக்கு, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவருக்கு ஒரு முறை உயர்நீதிமன்றம் சம்மன் அனுப்பியது. தாக்கீது பிறப்பித்தது. பத்மினி ஜேசுதுரை தாக்கீது பிறப்பித்தார். இவர் என்ன செய்தார் தெரியுமா? இவர் அதை நான் வாங்கிக் கொள்ள மறுக்கிறேன், வாங்கிக் கொள்ள மாட்டேன் என்று சொல்லி, அதை எதிர்த்து நாடு தழுவிய

பெரும் போராட்டத்தையே நடத்தினார். ஆகவே, அவர்தான் இன்றையதினம் நமக்குப் புத்திமதி சொல்கிறார், உயர்நீதி மன்றத்தோடு மோதாதீர்கள், உச்சநீதிமன்றத்தோடு மோதாதீர்கள் என சொல்பவர்கள் உயர்நீதிமன்றம் அனுப்பிய சம்மனை அன்றையதினம் நான் வாங்கிக் கொள்ளமாட்டேன், பெற்றுக் கொள்ள மாட்டேன், உதாசீனம் செய்கிறேன் என்று சொல்லி நாடு தழுவிய போராட்டம் நடத்தியவர்கள், திசை திருப்பப் பார்க்கிறார்கள். ஆகவே அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை பேரவையினுடைய உரிமைகள் மதிக்கப்பட்டாக வேண்டும். பேரவையினுடைய உரிமைகள் காப்பாற்றப்பட்டாக வேண்டும் அதைப் போல இணக்கமான உறவு நிச்சயமாக இருக்கவேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம் என்று கூறி உச்சநீதிமன்றத்தோடு மோதவேண்டுமென்கிற எண்ணம் நிச்சயமாக நமக்குக் கிடையாது. எனவே அந்த உரிமைகளைக் காப்பாற்றியாக வேண்டும். ஒரு நல்ல முடிவாக அவையின் சார்பிலே அல்லது அவையிலே என்ன நடைபெற்றது என்று அவர்கள் கேட்கின்ற தகவலை மட்டும் கொடுப்பதற்கு ஒரு வழக்குரைஞரை அனுப்புவோம் என்பதும் சரியான முறை என்று கூறி தீர்மானத்தை வரவேற்று அமர்கிறேன்.

பிற்பகல் 1–20

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

<u>*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு குறிப்பை இந்த பேரவைக்கு வைப்பது நல்லது என்று நான் கருதுகிறேன்.

இந்தியக் குடியரசின் வெள்ளி விழாவை ஒட்டி, 'சில்வர் ஜூப்ளி'யை ஒட்டி, இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டமும், பாராளுமன்றமும் 'Constitution and Parliament in India' என்ற தலைப்பில் மலர் ஒன்று வெளியிட்டார்கள். அதில் மிகவும் புகழ் வாய்ந்த செய்தித் தாள் ஆசிரியரான எம். சலபதி ராவ் அவர்கள் 'பாராளுமன்றமும் செய்தித் தாளும்' 'Parliament and Press' என்ற தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதியுள்ளார். அந்தக் கட்டுரையில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது :

" The Press has two main aspects, as a part of what is known as the information Industry and as a factor in the formulation of opinion. In both respects it has to act with responsiblity to be effective and reliable," Justice Scot said, "facts are sacred, comment is free. " To emphasise the importance of truthfulness and accuracy in reporting on what is happening and of the freedom that can be exercised in expressing opinion."





" There is a tendency in some sections of the Press"
ால்லா செக்ஷன்ஸ்சும் அல்ல. பத்திரிகையினுடைய ஒரு
சில பிரிவினர் மட்டும் எப்படிக் கொள்கிறார்கள் என்று சலபதி
ராவ் சொல்கிறார் என்றால், " In some Sections of the Press,
he reverse of Scot's thesis is followed. They say " Facts are free
and comments are sacred" Soot said " Facts are sacred, comments
are free ". But some press say "Facts are free, comments are
sacred" " Where Parliament is concerned wrong reporting can
be easily dealt with. But the Citizen has not such power."
அவர் சொல்கிறார், பாராளுமன்றத்தைப் பற்றி உரிமைப் பிரச்
சனை வந்தால், அதைத் தீர்த்துக்கொள்வதற்கு பாராளுமன்றத்
திற்கு வாய்ப்பு இருக்கிறது. ஒரு சாதாரண குடிமகன் மீது
இப்படிப்பட்ட அளவிற்கு எழுதப்படுமானால், அவனுக்கு பாது
காப்பு இல்லாமல் போய்விடுகிறது என்பதற்குத்தான் பத்திரிகை
கள் எப்படி நடந்து கொள்ளவேண்டுமென்று எழுதுகின்றபோது
எழுதுகிறார். அவர் மேலும் சொல்கிறார்.

' Growing evil is the way facts and comments are
inexplicably mixed in almost every column of the newspaper " என்று
எழுதுகிறார். செய்தித்தாள் என்பது இரண்டு முக்கிய
பத்திகளைக் கொண்டிருக்கிறது. ஒரு வகையில் செய்தியைத்
திரட்டும் தகுதியைப் பெற்றிருக்கிறது. மற்றொரு வகையில்
கருத்தினை உருவாக்கும் அமைப்பாக இருக்கிறது. இரண்டு
வகைகளிலேயும் செய்தித்தாளானது பொறுப்புணர்ச்சியோடு
திறமையாகவும் உண்மையாகவும் செயல்பட வேண்டியிருக்கிறது.
சி.பி. ஸ்காட், உண்மைகள் தூய்மையானவை, விமர்சனம்
சுதந்திரமானது என்று குறிப்பிடுகிறார். அவர் உண்மைத்
தன்மைக்கு முக்கியத்துவம், செய்தியை வெளியிடுவதில் துல்லிய
மான தன்மையும், நிகழ்ச்சிகளைப் பொறுத்தும், எண்ணங்களை
வெளியிடுவதைப் பொறுத்தும் கையாளப்பட வேண்டுமென்று
வற்புறுத்துகிறார். செய்தித் தாள்களின் முறையில் சில பிரிவினர்
சி.பி. ஸ்காட் கூறியதற்கு நேர்மாறான போக்கை கடைப்பிடிக்கும்
போக்கு இருந்துவருகிறது. அதாவது உண்மைகள் சுதந்திர
மானவை விமர்சனம் தூய்மையானது என்பதாகும். பாராளு
மன்றத்தைப் பொறுத்தவரையிலும் தவறான செய்திகள் வெளி
யிடுவதை எளிதாகத் தீர்த்துவிடமுடியும். ஆனால் பொது
மக்களுக்கு அந்த அதிகாரம் இல்லை. உண்மைகளையும் விமர்
சனத்தையும் விடுவிக்க முடியாத வகையில் குழப்பி விடுவது
என்னும் தீய பழக்கம் பெரும்பாலான செய்தித் தாள்களின்
பத்திகளில் வளர்ந்துகொண்டு வருகின்றன என்பதை மட்டும்
சலபதிராவே குறிப்பிட்டிருக்கிறார் என்பதை மட்டும் குறிப்
பிடுவதற்காகத்தான் சொல்கிறேன். ஆகவேதான் பத்திரிகை
களின் மீது நமக்கு மோதுதலே இல்லை. ஆனால் திரித்துக் கூறு
கின்றபோதும், உண்மைக்கு மாறுபடக் கூறுகின்றபோதும்,

நடவாததை நடந்ததாகக் கூறுகின்றபோதும், பிளைந்துரையாகக் கூறுகின்றபோதும்தான் பிரச்சினைகள் வருகின்றனவே தவிர வேறு வகையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அரசமைப்புச் சட்டம் வகுத்துக் கொடுத்துள்ள நெறிமுறைகளின்படி இந்த மாமன்றத்திற்குள்ள தனித் தன்மையினையும் உரிமைகளையும் பாதுகாக்கின்ற வகையில் மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களால் முன்மொழியப்பட்டுள்ள இத்தீர்மானத்தை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் முழு மனதோடு ஏற்றுக்கொள்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) புகழ்மிக்க நம்முடைய இச்சட்டமன்றப் பேரவை கடந்த காலங்களில் கட்டிக் காத்து வந்துள்ள மரபுகளையும் நெறிமுறைகளையும் தொடர்ந்து பேணிக் காத்திட வேண்டுமென்பதுதான் எங்களுடைய நோக்கம் ஆகும். அரசமைப்புச் சட்டத்தின்படி இப்பேரவையை போன்றே தனித் தன்மையையும் மேலாண்மையும் பெற்றுள்ள உச்ச நீதிமன்றத்தையும் ஏனைய நீதி மன்றங்களையும் நாங்கள் பெரிதும் மதிக்கின்றோம். அவ்வாறே இப்பேரவையும் நீதி மன்றங்களை மதிக்கின்றது என்பதைத் தெளிவுபடுத்தும் வகையில்தான் இத்தீர்மானம் முன்மொழியப்பட்டுள்ளது. அரசமைப்புச் சட்டத்தின்படி தனித் தனியே மேலாண்மை உரிமை மிக்க இரண்டு அமைப்புகளும் ஒன்றின் உரிமையை மற்றொன்று பாதுகாக்கக்கடமைப்பட்டுள்ளன என்பதை வலியுறுத்தும் வகையிலேயும் இத்தீர்மானம் அமைந்துள்ளது. இத்தகைய நல்ல நோக்கங்களைக் கொண்டுள்ள இத்தீர்மானத்தைப் பேரவை முழு மனத்துடன் ஒரு முகமாக நிறைவேற்றி, இப்பேரவையின் தனித் தன்மையையும் உரிமையையும் காத்திட ஒத்துழைக்குமாறு அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களையும் கேட்டுக் கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1—25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்ற மாண்புமிகு உறுப்பினர்களும் எடுத்துத் தெரிவித்து இருக்கிற அனைத்துக் கருத்துக்களோடும் இந்தத் தீர்மானத்தின் இன்றியமையாமையைக் கருதி இந்தப் பேரவையின் சார்பில் என்னுடைய உணர்வுகளையும் இந்தத் தீர்மானத்தோடு இணைத்துக் கொள்ள விரும்புகிறேன்.





இந்தத் தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்தின்போது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை இங்கே எடுத்துத் தெரிவித்தபோது, பெரும்பான்மையான உறுப்பினர்கள், இந்தப் பேரவையின் மாண்பினை இந்தப் பேரவையின் தனித் தன்மையை, இந்தப் பேரவைக்கு இருக்கிற தன்னாட்சி உரிமையைப் பாதுகாக்கவேண்டும் என்கிற உணர்வைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த அளவுக்குத் தெரிவித்திருக்கிற கருத்துக்களின் அடிப்படையிலேதான் இன்றையதினம் நமக்கு முன்னாலே இருக்கிற மிக இன்றியமையாத ஒரு பிரச்சினை நம்முடைய பேரவையின் செயலாளருக்கு உச்ச நீதிமன்றத்திலேயிருந்து அனுப்பப்பட்டுள்ள சம்மனைப் பற்றியதாகும். அதிலே கருத்துக் கூறிய அனைத்து உறுப்பினர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், பேரவை முன்னவர் அவர்களும் இந்தப் பேரவைக்கும் நீதிமன்றத்திற்கும் குறிப்பாக உச்ச நீதிமன்றத்திற்கும் துளிக்கூட கருத்து மோதல் இல்லை என்பதை மிகத் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட்டுக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அளவுக்கு அமைந்திருக்கிற ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுகிறபோது இதற்கு முன்னர் இந்தப் பேரவையில் எனக்கு முன்னோடிகளாக இருந்திருக்கிற மாண்புமிகு பேரவைத் தலைவர்கள் பலர் எடுத்திருக்கிற முடிவுகளையும் நான் இன்றைக்குப் பின்பற்றித்தான் சில முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கிறது. இதற்கு முன்னர் பல்வேறு நேரங்களில் உரிமைப் பிரச்சினைகள் இந்தப் பேரவையிலே வந்த போதும் சரி, அந்த உரிமைப் பிரச்சினைகள் வழக்கு மன்றத்திற்குச் சென்ற போதும் சரி, அல்லது உரிமைப் பிரச்சினைகள் அல்லாத சில பிரச்சினைகள்கூட வழக்கு மன்றத்திற்குச் சென்றபோதும் சரி, இந்தப் பேரவையினுடைய தலைவரோ இந்தப் பேரவையின் உறுப்பினர்கள் எவருமோ அல்லது இந்தப் பேரவையின் செயலாளரோ எந்த நீதிமன்றத்திலேயும் சென்று ஆஜர் ஆகவில்லை என்கிற நடைமுறை கடந்த காலங்களில் மிகத் தெளிவாகப் பின்பற்றப்பட்டு வந்திருக்கிறது. குறிப்பாக இரண்டு நேர்வுகளை மட்டும் இந்தப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1972-ல் நடைபெற்ற ஒரு சம்பவம் மாண்புமிகு உறுப்பினர்கள் பலருக்கும் இன்றைக்கும் பசுமையாக நினைவு இருக்கும் என்று கருதுகிறேன். அன்றையதினம் இந்தப் பேரவையின் தலைவராக இருந்த மறைந்த மாண்புமிகு மதியழகனார் அவர்கள் இந்த அவையின் இந்த இருக்கையில் அமர்ந்திருக்கிறார்— பேரவைத் தலைவர். அவருக்குப் பக்கத்தில் இந்த இடத்தில் ஒரு நாற்காலி போடப்படுகிறது. இதற்கு முன்னாலே அவ்வப்போது ஆளுநர் அவர்களுடைய உரையின் போது உயரமான ஒரு மைக் வைக்கப்படுமே, பேரவைத் தலைவர் மொழி பெயர்ப்பதற்காக அந்த மைக் அங்கே வைக்கப்படுகிறது. பேரவைத் துணைத் தலைவர் அங்கே போய் அதிலே உட்காருகிறார்.

[பேரவைத் தலைவர்] ]1992 மே 4

பிற்பகல் 1-30

பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

பேரவைத் தலைவர் இருக்கையிலே இருந்து பேரவைத் தலைவர் சொன்னது, பேரவைச் செயலாளராலே, நிறைவேற்றப்படவில்லை. பேரவைத் தலைவராக இருந்து, இந்த இருக்கையிலே இருந்து அறிவித்த அறிவிப்புகள் சுருக்கெழுத்தாளர்களாலே பதியப்படவில்லை. இந்த இருக்கையிலே, பேரவைத் தலைவராக இருந்து மதியழகன் கொடுத்த உத்தரவுகள் நிறைவேற்றப்படவில்லை. பதியப்படவில்லை. அங்கே உட்கார்ந்து இருந்தவர் சொன்ன அனைத்தும் பதியப்படுகிறது. பதியப்பட்டு, இந்தப் பேரவையின் நடவடிக்கைகள் என்று முடிவு செய்யப்பட்டு, இங்கே உட்கார்ந்து இருந்த மதியழகன் நீக்கப்பட்டார் என்கிற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. அதை எதிர்த்து மதியழகன் உயர்நீதிமன்றத்திற்குச் சென்றார். உயர் நீதிமன்றத்திற்கு மதியழகன் சென்றபோது அவர் எழுப்பிய பிரச்சினை—நான் பேரவைத் தலைவர், பேரவைத் தலைவர் இருக்கையிலே இருந்து நான் இட்ட உத்தரவை செயலாளர் நிறைவேற்றவில்லை. நிறைவேற்றாமல், இன்னொருவர், பேரவைத் தலைவர் இருக்கையை விட்டுவிட்டு, வேறொரு இருக்கையிலே இருந்து அறிவித்த அறிவிப்புகள் நிறைவேற்றப்பட்டு, நான் நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது சட்டவிரோதம் என்று வழக்கு மன்றத்திற்குச் சென்றார். அன்றைய பேரவைச் செயலாளர் அவர்மீதுதான் குற்றமே சொல்லி இருக்கிறார்—நான் பேரவைத் தலைவர் இருக்கையிலே இருந்து அறிவித்த அறிவிப்புகளை மீறி, வேறு சில அறிவிப்புகளை நடவடிக்கை ஏட்டிலே ஏற்றி, என்னைப் பதவி நீக்கம் செய்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, பேரவைச் செயலாளர் அத்துமீறி நடந்திருக்கிறார், சட்டவிரோதமாக நடந்திருக்கிறார், சட்ட விதிகள் எதன்படியும் நடக்காமல், விதிமுறைகள் அனைத்தையும் மீறி நடந்திருக்கிறார். எனவே, அந்தப் பேரவைச் செயலாளரை அழைத்து, நீங்கள் விசாரித்து, எனக்கு நியாயம் வழங்க வேண்டும் என்று, உயர் நீதிமன்றத்திற்குச் சென்ற நேரத்தில், உயர்நீதிமன்றம் அந்தச் செயலாளருக்கு, நோட்டீஸ் அனுப்பியது. இது ஏதோ பேரவை பற்றிய விஷயமே இல்லை. செயலாளர் மீது நேரடியாகக் குற்றம் சுமத்தி, செயலாளர் என்னுடைய அறிவிப்பை மீறி நடந்தார் என்று சொன்ன அந்தக் குற்றச்சாட்டுக்கு, உயர்நீதிமன்றத்திலேயிருந்து 'சம்மன்' வந்தபோது, செயலாளர் போக வேண்டியது இல்லை என்று இந்த மன்றத்திலே முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அப்படி முடிவு செய்தபோது, முதலமைச்சராக இருந்தவர்தான் நேற்றையதினம் அறிவுரை வழங்கியிருக்கிறார் அரசுக்கு.



[1992 மே 4] [பேரவைத் தலைவர்]

நீதிமன்றத்தோடு மோதிக்கொள்ளாதீர்கள். இன்றைக்கு நீங்கள் மோதிக் கொண்டால், நீங்கள் இன்றைக்கு நீதிமன்றம் அனுப்பிய 'சம்மனை' ஏற்க மறுத்தால், நாளைக்கு பங்காரப்பா சொல்வதும் நியாயம்தானே என்று இந்த நாட்டை காட்டிக் கொடுக்கின்ற ஒரு குரல் இன்றையதினம் ஒலித்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றையதினம் செயலாளருக்கு வந்திருக்கின்ற சம்மன், இந்த அவையினுடைய நடவடிக்கைகளைப் பற்றிச் சிலர் வழக்கு மன்றத்திற்குச் சென்றிருக்கின்றபோது, அந்த வழக்குகளின் அடிப்படையில் வந்திருக்கின்ற சம்மன். ஆனால் அன்றைக்கு மதியழகன் அவர்கள் சென்ற வழக்கு, செயலாளர் மீதே குற்றம் சுமத்திச் சென்ற வழக்கு. அந்த வழக்கிலே கூட, இந்த அவையினுடைய செயலாளர் நீதிமன்றத்தினுடைய ஆணையை ஏற்றுச்செல்ல வேண்டியதில்லை என்று முடிவு செய்தவர்கள். இன்றையதினம் நமக்கு உபதேசம் செய்கின்றார்கள் என்று சொன்னால், எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த அவையினுடைய மரியாதையைப் பற்றியும், இந்த இருக்கையினுடைய மரியாதையைப் பற்றியும் இன்றைக்கு வாய்கிழியப் பேசியிருக்கின்றார்கள். இந்த இருக்கையிலே அமர்ந்து, இந்த இருக்கையிலே இருந்து இட்ட உத்திரவைத் துச்சமாக மதித்த அந்த அன்றைய முதலமைச்சர், இன்றைக்கு இந்த இருக்கையினுடைய மரியாதை குறையலாமா என்றெல்லாம் பேசுகின்றார். இந்த இருக்கைக்கு என்ன மரியாதையை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டிருக்கின்றார்கள் என்பதை வேறு சந்தர்ப்பத்தில் நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பேரவைத் தலைவருக்கு அவர் எந்த உயர்ந்த மரியாதையை வைத்திருக்கிறார் என்பதை வேறு வேறு நேரங்களிலே நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன், இந்தப் பிரச்சினையிலே வேண்டாம் என்று கருதுகிறேன். ஆனால் இந்த அவைக்கு நினைவுபடுத்த நான் விரும்புவது, இந்த இருக்கையிலே இருந்து இட்ட உத்திரவை மீறி செயலாளர் செயல்பட்டிருக்கிறார் என்று சென்ற ஒரு நேர்விலேயே செயலாளர் கோர்ட் சம்மனை ஏற்று கோர்ட்டுக்குப் போக வேண்டியதில்லை என்று முடிவு செய்த அவை இந்த அவை. கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர், செயலாளர் போகலாம், இது எங்களுடைய கொள்கை என்றே சொல்லி விட்டுப் போய்விட்டார். என்ன கொள்கை என்று தெரியவில்லை. ஆனால் இந்த அவையில் செயலாளர் மீதே இருந்த குற்றச்சாட்டுக்குக்கூட செயலாளர் போக வேண்டியது இல்லை என்று முடிவு செய்திருக்கிறோம்.

அடுத்து இன்னொரு நேர்வு. பல்வேறு நேரங்களிலே செயலாளர் கோர்ட்டினுடைய சம்மன்களை ஏற்றுக்கொள்ள

வேண்டியதில்லை என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. நான் குறிப்பிட்ட நேர்வைச் சொல்வதற்குக் காரணம் செயலாளர் மீதே குற்றம் இருந்த நேரத்திலே கூட போக வேண்டியதில்லை என்று முடிவு செய்திருக்கிறோம்.

பிற்பகல் 1-35

அடுத்து இன்னொரு நேர்வில் 1984 பிப்ரவரி 17 ஆம் தேதி வழக்கு மன்றத்தில் செயலாளர் மீது ஒரு வழக்கு சென்றது. அந்த வழக்கில் ஒரு நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் மூலம் அந்த நிறுவனத்திற்குச் செயலாளர் சொந்தக்காரர் எனவே அந்த நிறுவனத்திற்கு எதிராக இங்கே ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது செயலாளர் தன்னுடைய உறவினரைக் காப்பாற்ற அந்த கவண ஈர்ப்புத் தீர்மானத்தை நிகழ்ச்சி நிரலில் சேர்க்க விடாமல் தடுத்துவிட்டார் என்று, உயர்நீதிமன்றத்திற்குச் சென்ற வழக்கு மீது உயர்நீதிமன்றத்தில் செயலாளர் மீதே குற்றசாட்டு. அதற்கு வேறு சில விதிகளே கூட இருக்கின்றன, உள்நோக்கத்தோடு இந்த அவையினுடைய நடவடிக்கைகளிலேயோ, அவையினுடைய பேச்சுக்களிலேயோ தலையிடுவதோ அல்லது பேச விடாமல் சிலரைத் தடுப்பதோ கூட தவறு என்கிற அளவுக்கு பல்வேறு விதிகளிலே இடம் இருக்கிறது. இருந்தாலும் அப்படிப்பட்ட விதிமுறைகளின்படி நடைபெற வேண்டிய செயலாளர் அந்த நிறுவனத்திற்கு ஆதரவாகச் செயல்படுகிற வகையில் இந்த அவைக்குறிப்பிலே ஏற்ற வேண்டிய ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தை ஏற்றவிடாமல் செய்தார் என்று நீதிமன்றத்திற்குப் போன நிகழ்விலேகூட, அன்றையப் பேரவைத் தலைவர் பேரவைக்கு அறிவிக்கிறார் இந்த அவைச் செயலாளர் மீது நீதி மன்றத்தில் "Wri of Quo warranto" எழுப்பப்பட்டதாக இன்று காலை நாளிதழிலே வெளிவந்த செய்தியினைப் பார்த்தேன். இந்த அவையின் அலுவலகம் இதுவரையிலும் எவ்வாறு இயங்கி வந்தது என்பதைத் பற்றியும், இனிமேல் இந்த அலுவலகம் எந்தப் பெயரின் கீழ் இயங்கும் என்பதைப் பற்றியும் பேரவைக்கு அறிவித்தேன். எந்த அதிகாரத்தின் கீழ் இந்தப் பேரவைச் செயலாளர் ஒருவர் இயங்குகிறார் என்பதை இந்தப் பேரவை மட்டுமே விசாரிக்கத் தகுந்தது. இது பற்றி ஆராய்வதற்கு, இதுபற்றி வேறு மன்றங்களில் எழுப்புவதற்கு எவருக்கும் உரிமை கிடையாது. அவ்வாறு செய்தால் இந்தப் பேரவையை அவமதித்தக் குற்றத்திற்கு ஆளாவார்கள். செயலாளர் மீது வேறு மன்றங்களுக்கு சென்று இப்படிப்பட்ட வழக்குகளை எழுப்புபவர்கள் கூட இந்த மன்றத்தை அவமதித்த குற்றத்திற்கு ஆளாவார்கள், என்று 1984 ஆம் ஆண்டு இருந்த பேரவைத் தலைவர் இங்கே அறிவித்து இருக்கிறார்கள். எனவே, அவர்



அறிவிக்கிறார், "இந்தப் பேரவைச் செயலாளர் அரசியலமைப்புச் சட்டத்தின் 187-வது விதியின் கீழ் ஆளுநரால் பேரவைத் தலைவரைக் கலந்து ஆலோசித்து நியமிக்கப்படுகிறார். இந்தக் காரணங்களாலும் இந்தப் பேரவையின் முன் மரபுகளை ஒட்டியும் நீதிமன்றத்திலிருந்து ஏதேனும் தாக்கீது வருமானால் செயலாளர் இந்த அவையின் அலுவலர் என்ற முறையிலே அதைப் பொருட்படுத்தாது, அதைப் பெறாது மறுத்து அனுப்பி விடவேண்டுமென்று அவருக்குக் கட்டளையிடுகிறேன்." என்று அறிவிக்கிறார்

இந்த அவையினுடைய உரிமையை மீறிய பிரச்சினைக்காகக் கூட அல்ல. செயலாளர் மீது தனிப்பட்ட முறையிலே வந்த அந்த வழக்கிலே கூட, அவர் அந்த சம்மனைப் பெற்றுக் கொள்ளாமல் திருப்பி அனுப்பி விடலாம் என்ற உத்தரவை இதே பேரவையிலே அப்போதிருந்த பேரவைத் தலைவர் இட்டிருக்கிறார் என்பதையும் எண்ணிப் பார்க்கிறபோது இன்னும் இதைப்போல, இதே மரபுப்படியே இந்தப் பேரவை நடந்து வந்திருக்கிற காரணத்தால்தான் நம்முடைய பேரவைச் செயலாளர் இந்த வழக்கில் நீதிமன்றம் முன் ஆஜர் ஆக வேண்டியது இல்லை என்ற உணர்வோடு இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இந்த அளவுக்கு அவையினுடைய நடவடிக்கைகளுக்காக எந்த நீதிமன்றமும் பேரவையை நீதிமன்ற ஆளுகைக்குள் இழுக்கக்கூடாது என்று இருக்கிற விதியை மீறி எப்படி பல்வேறு நீதிமன்றங்கள் இன்றைக்குத் தலையிடுகின்றன என்பதை இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் கோடிட்டுக் காட்டினார்கள். அங்கே நீதிமன்றத்திற்குச் செல்லவில்லையா? இங்கே நீதிமன்றத்திற்குச் செல்லவில்லையா? என்று எல்லாம் கூட சொன்னார்கள். ஆனால் எந்த ஒரு வழக்கிலாவது பேரவைத் தலைவரோ, பேரவைச் செயலாளரோ வழக்கு மன்றத்திற்கு முன்னால் போய் நின்றார்கள் என்று அவர்களால் சொல்லமுடியவில்லை என்பதிலிருந்து இந்தத் தீர்மானம் எந்த அளவுக்கு இந்த அவையினுடைய தனித் தன்மையைக் காக்கிற வகையில் அமைந்திருக்கிறது என்பதை நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

அவர்கள் அண்மையில் நடக்கிற மணிப்பூர் வழக்கைச் சொல்லி உச்ச நீதிமன்றம் இன்றைக்கு பேரவைத் தலைவருக்கு வாரண்டு போட்டிருக்கிறது. செயலாளருக்கு போட்டிருக்கிறது என்று சொன்னார். வாரண்டு எப்போது போட்டிருக்கிறார்கள். அதற்கு முன்னால் சம்மன் போட்டார்கள் அதையும் அந்தப் பேரவைத் தலைவர் ஏற்றுக்கொள்ளவில்லை. நான் இந்தப் பேரவைக்கும் பேரவையின் வாயிலாக வெளியில் உள்ள [illegible] தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1–40

இதிலேகூட ஒரு தவறான தகவலை இன்றைக்குச் சில பத்திரிகைகளில் நாடு முழுவதும் எழுப்பிக் கொண்டு இருக்கிறார்கள். ஏதோ அண்மையில் நடந்த பேரவைத் தலைவர்களுடைய மாநாட்டில் இதுபோன்ற நடவடிக்கைகளில் உச்ச நீதிமன்றம் தலையிடலாம் என்பதை ஏற்றுக் கொண்டார்கள் என்பதைப் போல ஒரு பிரச்சினையை வெளியிலே பரப்பிக் கொண்டு இருக்கிறார்கள். என்னிடத்திலே கூட எதிர்க்கட்சித் தலைவர் கேட்டார். அப்படி ஏதேனும் நடைபெற்றதா என்று. அண்மையில் நடைபெற்றது. இந்த மணிப்பூர் வழக்கைப்பற்றிப் பரிசீலிப்பதற்காக நடைபெற்றது. பேரவைத் தலைவர்களுடைய மாநாடு இந்த மாதக் கடைசியில் அஹமதாபாத்தில் நடைபெறுகிறது. ஆனால் இரண்டு மாதங்களுக்கு முன்னால் இந்த மணிப்பூர் வழக்கைப் பற்றி மட்டும் விவாதிப்பதற்காக பேரவைத் தலைவர்களுடைய கூட்டத்தை நாடாளுமன்ற—மக்களவைத் தலைவர் கூட்டியிருந்தார். அந்தக் கூட்டத்திலே கலந்து கொண்டோம். அதிலே விவாதிக்கப்பட்ட ஒரே பிரச்சினை இன்றைக்கு இந்தக் கட்சித் தாவல் தடைச் சட்டம் என்பது. அந்தத் தடைச் சட்டத்திலே பேரவைத் தலைவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிற ஒரு சிறப்பு விதி, பேரவைத் தலைவர் கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் கீழ் எடுக்கிற நடவடிக்கையை எதிர்த்து எந்தக் கோர்ட்டும் தலையிடக்கூடாது என்று ஒரு விதி இருக்கிறது. அது செல்லுமா செல்லாதா என்பதுதான் இன்றைக்குப் பிரச்சினை. மணிப்பூர் சட்டமன்ற உறுப்பினர்களுடைய பதவி செல்லாது என்று அறிவித்து இருக்கிற அறிவிப்பை, எதிர்த்து போயிருக்கிறவர்கள் கூட, அதிலே அவர்கள் 7 பேரும் திரும்ப உறுப்பினர்கள்தான் என்று பேரவைத் தலைவருடைய ஆணைக்குத் தடை விதித்து சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டு இருப்பதுகூட, இந்தச் சட்டம், கோர்ட்டுகள் தலையிடக் கூடாது என்கிற அந்த விதியோடு செல்லுபடியாக வேண்டும் என்று சொன்னால், நாடாளுமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட இந்தச் சட்டம் குறைந்தது 50 சதவீதத்துக்கும் அதிகமான சட்டமன்றங்களால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவேண்டும்.—to be ratified அந்தக் குறைபாடு இந்தச் சட்டத்திலே இருக்கிற காரணத்தால் கோர்ட் தலையிட முடியாது என்று இருக்கிற விதியை மீறி நாங்கள் தலையிடுகிறோம் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். இதைப்பற்றி நாங்கள் விவாதிக்கிற போதுதான், சட்டம் நிறைவேற்றப்பட்டிருப்பதிலேயே ஒரு குறைபாடு இருப்பதை நீதிமன்றம் சுட்டிக் காட்டி இருக்கிற காரணத்தால் இந்தத் தருணத்தில் At this juncture we shall honour the verdict of the Supreme Court என்று முடிவு செய்திருக்கிறோம், அது வேறு. அவை நடவடிக்கைகளுக்காக வழக்கு மன்றம் தலையிடுவது என்பது வேறு. இது 10 ஆவது ஷெட்யூலில், பேரவைத் தலைவருக்கு, பேரவை நடவடிக்கைகளுக்கு அப்பாற்பட்டுக் கொடுத்திருக்கிற ஒரு அதிகாரம். ஒரு உறுப்பினர் மீது இன்னொரு உறுப்பினர் மனு கொடுப்பாரேயானால், இவர் கட்சியை விட்டுப் போய் விட்டார்,



அல்லது கட்சிக்குப் புறம்பாக நடந்துக் கொண்டார், கட்சியினுடைய ஆணையை சட்டமன்றத்திலேயிருந்து நிறைவேற்றவில்லை என்பது போன்ற மனு கொடுத்தால் அந்த மனுவை விசாரித்து பேரவைத் தலைவர் எடுக்கிற நடவடிக்கைக்கு எதிராகத்தான் இன்றையதினம் சுப்ரீம் கோர்ட் தலையிட்டு, அந்தப் பிரச்சினையிலும் கூட அந்தப் பேரவைத் தலைவர் இது வரையிலும் ஏற்க முடியாது என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார். நியாயமாக, ஏற்றுக் கொள்ளலாம் என்று நாங்கள், பேரவைத் தலைவர்களே முடிவு செய்த முடிவைக்கூட அந்தப் பேரவைத் தலைவர் இதுவரையிலேயும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் இங்கே நடந்திருப்பது, இந்தப் பேரவையினுடைய உரிமை மீறல் பிரச்சினையில் எல்லா வாய்ப்பும் கொடுத்து, அவர்களை விசாரித்து, இந்தப் பேரவைக்கு முன்னாலே அந்த அறிக்கையையும் வைத்து, அந்த அறிக்கையைப் பேரவை முன்னவர் தீர்மானமாகக் கொண்டு வந்து, அந்த நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மீது பேரவைத் தலைவர் எடுத்திருக்கிற நடவடிக்கையை எதிர்த்து வழக்கு மன்றத்திற்குச் சென்று இருக்கிறார்கள். வழக்கு மன்றத்திலேயிருந்து நம்முடைய செயலாளருக்கு நோட்டீஸ் வருகிறது; 'சம்மன்' வருகிறது என்று சொன்னால், இந்த நேரத்திலேதான் இந்தப் பேரவையினுடைய இறையாண்மையைக் காப்பதற்கு அனைத்து உறுப்பினர்களும் ஒருமுகமாக இருந்து இதிலே காரியமாற்றக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் இதிலே கட்சி வேறுபாடு, கட்சி பேதங்களையெல்லாம் சிலர் காட்டியிருக்கிறார்களே என்பதுதான் எனக்கு வருத்தமாக இருக்கிறது. எனவே, அதைப் பொறுத்தமட்டில், இன்றைக்கு இந்தத் தீர்மானம் என்பது நம்முடைய பேரவையின் இறையாண்மையையும் காக்கிற வகையில், நீதி மன்றங்களுக்கு இருக்கிற இறையாண்மையையும மதிக்கிற வகையில், அதேநேரத்தில் ஒன்றையொன்றுதழுவி, ஒன்றின் இறையாண்மை எந்த வகையிலேயும் பாதித்திடாத வகையில் மற்றொன்று சில பல விவரங்கள் கேட்டால் கூட கொடுக்கலாம் என்பதற்குரிய அந்த அடிப்படையிலேயும்தான் இங்கே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. எப்படி சில விவரங்களைக் கொடுப்பது என்றும் கூட இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் தெரிவித்தார்கள். இதைப்போன்ற நேர்வுகள் அனைத்திலேயும், எப்போது வழக்கு மன்றங்களிலேயிருந்து நோட்டீஸ் பேரவைத் தலைவருக்கோ அல்லது செயலாளருக்கோ வந்தாலும் அதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டியது இல்லை என்று முடிவு செய்ததற்குப் பிறகு உடனடியாக ஒவ்வொரு பேரவைத் தலைவரும் இதைப் பற்றி, அறிவித்திருக்கிற அறிவிப்புக்கள், 'ஆனால்' 'however' என்று, அதுதான் ஆங்கிலத்திலே இருக்கிறது. ஆனால் இதுபற்றிய [illegible]த்தையும், விதிகளையும் உயர்நீதிமன்றத்தில் இயங்[illegible] அலுவலர்கள் மூலமாக அரசு உயர்நீதி மன்[illegible] வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். [illegible] எல்லாப் [illegible] வைத் தலைவர்களும்கூட ஒவ்வொரு [illegible]லேயும் முடிவு செ[illegible]திருக்கிறார்கள்.

[பேரவைத் தலைவர்] [1992 மே 4

திருமகற் 1—45

இதை நாம் ஏற்றுக்கொள்வதில்லையே தவிர, அதே நேரத்திலே என்ன உண்மையிலேயே நடந்திருக்கிறது, உண்மை நிலவரம் என்ன என்பதை அரசாங்கத்தின் சட்ட அலுவலர்கள் மூலம் வழக்குமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ளலாம் என்கிற முடிவையும் பேரவைத் தலைவர்கள் எடுத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் சில விவரங்கள் உச்ச நீதிமன்றத்தால் தேவை என்கிற கருத்து எழுப்பப்பட்டிருக்கிற இந்தச் சூழ்நிலையில் அப்படிப்பட்ட சில தகவல்களைத் தன்னுடைய சட்ட அலுவலர்கள் மூலமாகத் தெரிவிக்கலாம் என்கிற முடிவையும் இந்தப் பேரவை எடுக்கிறது.

அந்த உணர்விலேயிருந்து பார்த்தால் நீதிமன்றத்தை நாம் முழுமையாக மதிக்க வேண்டும் என்கிற உணர்வையும் இந்தத் தீர்மானம் வெளிப்படுத்தியிருக்கிறது.

அதே நேரத்திலே நம்முடைய தன்னாட்சி உரிமையையும் பாதுகாக்க வேண்டும், வழி வழியாக நாம் காப்பாற்றி வந்திருக்கிற சில மரபுகளையும் காப்பாற்ற வேண்டும். சுதந்திரம் அடைந்த காலத்திலேயிருந்து எல்லாச் சட்டமன்றப்பேரவைகளும் இதுவரையிலேயும் காப்பாற்றி வந்திருக்கிற மரபுகளைக் காப்பாற்ற வேண்டும். குறிப்பாக நம்முடைய சட்டமன்றப் பேரவை காப்பாற்றி வந்திருக்கிற மரபுகளைக் காப்பாற்ற வேண்டும் என்கிற வகையிலே அமைந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை முழுமனதோடு இந்தப் பேரவை ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டும் என்ற என்னுடைய உணர்வுகளை அனைத்து உறுப்பினர்களுக்கும் தெரிவித்து, நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகைகள் தாங்களே ஆம்புட்ஸ்மேன் கமிட்டி என்று ஒன்று அமைத்து, தங்களைத் தாங்களே கண்காணிப்பது என்றும், அதோடுமட்டுமல்லாது மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களையும் நேரில் சந்தித்து இதுபற்றிப் பேசி, ஒரு சுமுக முடிவெடுப்பது என்றும் தீர்மானித்துள்ளார்கள். இந்தச் சூழ்நிலையிலே இந்தப் பிரச்சினையை மேலும் வளர்க்காமல், உச்ச நீதிமன்றத்தின் உரிமையையும் காப்பாற்றுகின்ற வகையிலேயும் சட்டமன்றத்தினுடைய இறையாண்மையும் காப்பாற்றப்படுகின்ற வகையிலேயும் நான் தங்களிடம் கேட்டுக் கொள்வது, இந்தப் பிரச்சினை [illegible] எச்சரிக்கையோடு அல்ல, தவறு செய்த பத்திரிகைகளை எச்சரிக்கையோடு விட்டு, இனிமேல் ஒரு புதிய சூழ்நிலையை உருவாக்குவதற்கு இந்த அவை முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,



1992 மே 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, அந்தப் பத்திரிகையாளர்கள் சங்கத்தினர் என்னை வந்து சந்தித்தார்கள். அவர்களிடத்திலே, இருக்கிற எல்லா நிலவரத்தையும் சொல்லியிருக்கிறேன். இந்த அளவிற்கு அவையினுடைய மதிப்பைப் பாதிக்கிற வகையில், அவைக்கு இருக்கிற இறையாண்மையைப் பாதிக்கிற வகையில் அவர்கள் நடந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள்தான் இன்றைக்கு வழக்கு மன்றத்திற்கும் போய் இருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் அவர்களிடத்திலேயிருந்து— நீங்கள் வந்து கேட்கிறீர்கள், விட்டுவிடுங்கள் என்று. ஆனால், அந்தச் சம்பந்தப்பட்டவர்கள் தங்களுடைய வருத்தத்தையாவது இந்த நேரத்தில் தெரிவிக்கிறார்களா என்று அவர்களைக் கேட்டிருக்கிறேன் ;அவர்கள் வருத்தம் தெரிவிக்கிறார்களா என்பதைத் தெரிவித்தால் அவர்கள் வருத்தம் தெரிவிப்பார்களேயானால், திரும்ப அப்பொழுது நிலைமைக்கேற்ப இந்த அவைக்கு என்னுடைய கருத்தை அப்பொழுது தெரிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு). இல்லை. அவர்கள் என்னைச் சந்தித்தார்கள். ஆம்புட்ஸ்மேன் கமிட்டி—அதற்காக—அமைக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்தார்கள். அப்படி அமைப்பதை வரவேற்கிறோம், பாராட்டுகிறோம், என்கிற கருத்தையும் நான் சொல்லியிருக்கிறேன்.

அடுத்து, அவர்கள் எடுத்து வைக்கிற கோரிக்கை, நாங்கள் கேட்கிறோம், விட்டு விடுங்கள் என்கிறார்கள். ஆனால், இந்த அவை உரிமை மீறலில் சம்பந்தப்பட்டிருக்கிற வர்கள் வருத்தமாவது தெரிவித்திருக்கிறார்களா என்று அவர்களிடத்திலேயே நான் கேட்டிருக்கிறேன். அப்படி அவர்கள் வருத்தமாவது தெரிவிக்கட்டும், அவர்களுடைய வருத்தம் தெரிவிக்கிற அல்லது மன்னிப்பு கேட்கிற அந்தக் கடிதத்தையாவது கொண்டு வாருங்கள். அதன் பின்னர் நான் அவைக்கு இந்த கருத்தைத் தெரிவித்து முடிவெடுக்கிறேன் என்பதை அவர்களுக்குத் தெரிவித்திருக்கிறேன் என்கிற தகவலை மட்டும் அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தனிப்பட்டவர்களுடைய உரிமையைவிட, இந்த மாநில மக்களுடைய, மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டு வந்திருக்கிற பிரதிநிதிகள் அடங்கிய இந்தப் பேரவையினுடைய உரிமை மிகமிகப் பெரிது. (மேசையைத் தட்டும் ஒலி). ஆகவே, அந்தக் தனிப்பட்டவர்கள் சாதாரணமாக வருத் தத்தை— எத்தனையோ பேர் தெரிவித்திருக்கும்பொழுது, தெரிவிக்க மாட்டேன் என்கின்ற வீம்பினுடைய அடிப்படையிலே செயல்கள் ஆற்றும்பொழுது, நா[illegible] நாங்கள் எச்சரிக்கிறோம் என்பதைச் [illegible] வருவது சரியல்ல.

164946

[டாக்டர் இரா, நெடுஞ்செழியன்] [1992 மே 4

மாண்புமிகு பேரவைத் தலைவரவர்கள் சொல்லியதுபோன்று, இப்பொழுதுகூட போய்விடவில்லை. இவ்வளவு கட்டங்கள் தாண்டியதற்கு பிறகுகூட ஏற்பட்ட தவறுக்காக நாங்கள் வருந்துகிறோம்; மன்னிப்புக்கூட கேட்டுக் கொள்கிறோம் என்று எவ்வளவோ பத்திரிகைகள் சொல்லியிருக்கிறார்கள்—தாங்கள் சொல்லியிருப்பது, வருத்தமாவது தெரிவிக்கட்டும், எழுத்து மூலமாக என்கின்றபொழுது வேண்டுமானால் பரிசீலிக்கலாம்.

பிற்பகல் 1—50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்.

தீர்மானம் நிறைவேறியது (மேசையைத் தட்டும் ஒலி).

பேரவை எடுத்துள்ள தீர்மானத்தின்படி உச்சநீதிமன்றத்திலிருந்து பேரவைச் செயலாளருக்கு ''பேக்ஸ்'' செய்தி மூலம் வந்துள்ளள தகவலின்படி, சில தகவல்களைக் கேட்டு இருக்கிறார்கள். அந்தத் தகவல்கள் உரிய அரசு வழக்கறிஞர் மூலம் உச்ச நீதிமன்றத்திற்குத் தெரிவிக்கப்பட வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன.

பேரவை மீண்டும் நாளை (5—5—1992) காலை 9—30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1—51 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 5. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்—

ஏதுமில்லை.

D
V211,31'N92
N92.28.1